பக்கங்கள்: இருபத்துநான்கு

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 புரட்டாதி 25 திங்கட்கிழமை (11.10.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 319

# குடாநாட்டில் சிங்கள மக்கள் மீளக்குடியமர

# அரசு விரைந்து செயற்பட வேண்டும்

## ஐ.தே.க. செயலாளர் அத்தநாயக்க வலியுறுத்து



கொழும்பு, ஒக். 11

யாழ். குடாநாட்டில் முன்னர் வசித்த சிங்களக் குடும்பங்கள், அங்கு மீளக்குடியேற அரசாங்கம் சகல உதவி, ஒத்தாசைகளையும் வழங்க வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை விரைந்து எடுப்பது அவசியம்.

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

இது விடயம் தொடர்பாக அறிக்கை ஒன்றை அத்தநாயக்க விடுத்துள்ளார். அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது :-

1983ஆம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட இனக் கலவரங்கள் காரணமாக வடக்கு, கிழக்கில் வாழ்ந்து வந்த சிங்கள - முஸ்லிம் மக்கள் தமது காணிகள், சொத்துக்களை கைவிட்டு தென்பகுதிக்கு வந்தனர். 28 வருடங்களுக்குப் பின்னர் மீண்டும் வடக்கில் தமது சொந்தக் காணிகளில் குடியேறவென யாழ்ப்பாணம் சென்ற 150 குடும்பங்களைச் சேர்ந்த 300 பேர் தற்போது எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஊடகங்களில் செய்திகள் வெளிவந்துள்ளன.

தமது சொத்துகள், காணிகளின் உரிமையை நிரூபிக்கக்கூடிய ஆவணங்களுடன் சென்றுள்ள இவர்களுக்கு, அரச அதிகாரிகளிடமிருந்தோ - அரச தரப்பிடமிருந்தோ - எதுவித உதவியும் கிடைக்காமல் அவர்கள் அகதிகளைப் போல் யாழ். ரயில் நிலையத்தில் தங்கியுள்ளனர்.

மூன்று தசாப்த காலமாக இனங்களுக்கிடையே காணப்பட்ட குரோதத்தைக் குறைத்து - புரிந்துணர்வை ஏற்படுத்தி இணைந்து வாழும் சூழ்நிலையை ஏற்படுத்துவது அரசின் பொறுப்பாகும்.

எனவே, தமது தேவைகளைப் பூர்த்தி செய்து இவர்களை சொந்த இடங்களில் குடியமர்த்த அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

- இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதே வேளை, சிங்கள மக்களின் மீள்குடியேற்றம் குறித்து மீள் குடியமர்வு அமைச்சர் மில்ரோய் பெர்னாண்டோ கருத்துத் தெரிவிக் கையில் -

வடக்கில் இருந்து ஏற்கனவே இடம் பெயர்ந்த சிங்கள மக்களிடம் தகுந்த ஆதாரங்கள் இருக்கும் பட்சத்தில் அவர்கள் அங்கு மீளக்குடியமர்வதில் எந்தச் சிக்கலும் இல்லை. சம்பந்தப்பட்டவர்கள் மீள்குடியமர்வு அமைச்சு அல்லது வடமாகாண ஆளுநரிடம் தகுந்த ஆவணங்கள் மற்றும் ஆதாரங்களைச் சமர்ப்பித்து விண்ணப்பிக்கலாம்.

அவற்றை ஆராய்ந்து சம்பந்தப்பட்டவர்கள் வடக்கில் மீளக்குடியேற பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படும். மன்னார் மாவட்டத்தில் ஏற்கனவே இடம்பெயர்ந்திருந்த 80 சிங்களக் குடும்பங்கள் தகுந்த ஆதாரங்களுடன் மீண்டும் தற்போது அங்கு மீளக்குடியேறியுள்ளன - என்றார்.

உள்ளே

**கிராம அலுவலர்களுக்கு புதிய அ.அட்டைகள்**
யாழ். மாவட்டத்தில் கடமையாற்றும் கிராம அலுவலர்களுக்கு..... பக்கம் 3

**பொன்சேகாவை விடுவிக்க ரணில் கோரிக்கை**
முன்னாள் இராணுவத் தளபதி - போர் வீரர் இன்று குற்றவாளி பக்கம் 5

**வடக்கில் தமிழர் நிலம் பறிபோகும் அபாயம்**
இரணை மடுக்குளத்துக்கு மொறகஸ்கந்த நீர்த்தேக்கத்தில் இருந்து மகாவலி கங்கை நீரை... பக்கம் 7

**துயரைச் சுமந்தபடி கண்ணீரோடு காத்திருக் கிறார்கள்**
போர் தன்னுடைய எல்லாக் கோர முகங்களோடும் வன்னியில் விஸ்வரூபம்... பக்கம் 13

## 'சண்டேலீடர்' ஆசிரியரை கொலை செய்யத் திட்டமாம்

### புலனாய்வுப் பிரிவு மீது குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக்.11

பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்கி வரும் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் 'சண்டே லீடர்' வாரப் பத்திரிகையின் ஆசிரியர் ப்டெரிக்கா ஜான்ஸை கொலை செய்வதற்கு திட்டமிட்டுள்ளதாக அந்தப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

தற்போதைய சூழ்நிலையை மாற்றும் முகமாகவே இந்த நடவடிக்கைக்கு திட்டமிடப்பட்டதாக செய்தித் தாள் குறிப்பிட்டுள்ளது.

சிறிலங்கா கார்டியன் செய்திச் சேவையை மேற்கோள்காட்டியுள்ள 'சண்டே லீடர்' சிறையில் அடைக்கப்பட்டுள்ள முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் ஆள்கள் மீது பழி போடுவதற்கு இது தகுந்த தருணம் என்ற அடிப்படையில் இந்தத் திட்டம்

(24 ஆம் பக்கம் பார்க்க)

## ஈழ அகதிகள் வெளிநாடுகளிலிருந்து தாயகம் திரும்புவது குறித்து ஆராய்வு

### ஐ.நா.வின் அகதிகளுக்கான முகவர் நிறுவனம் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 11

வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்துள்ள இலங்கை அகதிகள் நாடு திரும்புவது குறித்துக் கவனம் செலுத்தி வருகின்றனர் என்று ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் இலங்கைத் துணைப் பிரதிநிதி ஜெனீப்பர் பெகோனிஸ் தெரிவித்துள்ளார்.

யுத்தம் நிறைவடைந்துள்ள நிலையில் மலேசியா, ஹொங்கொங் போன்ற நாடுகளில் தஞ்சம் புகுந்துள்ள இலங்கையர்கள் நாடு திரும்புவது குறித்து தீவிரமாக யோசித்து வருகின்றனர் என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்திய அரசால் இறுதியாக வெளியிட்ட புள்ளிவிவரத் தகவல்களின் அடிப்படையில் 71 ஆயிரத்து 654 இலங்கை அகதிகள் 112 முகாம்களில் தங்கியிருப்பதுடன், 32 ஆயிரத்து 467 அகதிகள் (24 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய – இலங்கை கடற்படைக் கூட்டுப்பயிற்சி திருமலையில் ஆரம்பம்

கொழும்பு, ஒக். 11

இந்திய - இலங்கைக் கடற்படைகள் திருகோணமலையில் நேற்று கூட்டுப் பயிற்சியை ஆரம்பித்துள்ளன.

இந்தியக் கடற்படையின் 'திர்', 'சாதுல்' கப்பல்களிலும் 'வருண' என்ற கடலோரக் காவல்படைக் கப்பலிலும் உள்ள 135 இந்தியக் கடற்படை பயிற்சி அதிகாரிகளுக்கான (24 ஆம் பக்கம் பார்க்க)

## கட்சி தாவிய பியசேன எம். பி. மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குக!

### கூட்டமைப்பு எம்.பி களிடம் அம்பாறை மக்கள் வற்புறுத்து

கொழும்பு, ஒக்.11

எங்களது வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றுக்குத் தெரிவுசெய்யப்பட்ட பொடியப்பு பியசேன எம்.பி. சுயநலத்திற்காக அரசுடன் இணைந்து கொண்டமைக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரிடம் அம்பாறை மாவட்ட மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அம்பாறை மாவட்டத்திற்கு விஜயம் செய்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, எம்.ஏ. சுமந்திரன், பா. அரியநேத்திரன், எஸ்.ஸ்ரீதரன், பொன். செல்வராஜா ஆகியோர் கல்முனை பிரதேச மக்களை நேற்றுச் சந்தித்தனர். இதன்போதே மக்கள் இந்த வேண்டுகோளை விடுத்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடனான இந்தச் சந்திப்பின் போது கல்முனைப் பிரதேச மக்கள் தாங்கள் எதிர்நோக்கும் அடிப்படைப் (24 ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகாவின் எம்.பி. பதவி பறிப்பு: ரிட், உரிமை மீறல் மனுக்கள் தாக்கல்

கொழும்பு, ஒக்.11

சரத் பொன்சேகாவின் எம்.பி. பதவியைப் பாதுகாப்பதற்காக போல் ரட்நாயக்க சட்டத்தரணிகள் சங்கம் இன்று உயர்நீதிமன்றிலும் மேன்முறையீட்டு நீதிமன்றிலும் தனித்தனியாக இரு மனுக்களைத் தாக்கல்செய்யவுள்ளது.

நேற்று பத்தரமுல்லையில் ஜே.வி.பி. நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய அக்கட்சியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வாவே இதைத் தெரிவித்தார். அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

சரத் பொன்சேகாவுக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டமையால் அவரது எம்.பி. பதவியை ரத்துச்செய்து அவரது இடத்திற்கு வேறொருவரை நியமிக்குமாறு கோரி நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் தேர்தல்கள் ஆணையாளருக்கு இம்மாதம் ஏழாம் திகதி கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார்.

இராணுவ நீதிமன்றத்தால் தண்டனை வழங்கப்பட்ட எம்.பி., ஒருவரின் எம்.பி.பதவியை ரத்துச் செய்யமுடியாது என்று தெரிவித்து அப்பதவியை (24 ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகாவுக்குத் தண்டனை வழங்கியமைக்காக மக்களிடம் ஜனாதிபதியே மன்னிப்புக் கோரவேண்டும்

### ஜே.வி.பி. பொதுச்செயலர் தெரிவிப்பு



கொழும்பு, ஒக்.11

பயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டுவந்த பொன்சேகாவுக்குத் தண்டனை வழங்கிய ஜனாதிபதி நாட்டு மக்களிடம் மன்னிப்புக் கோரவேண்டும். அவரது விடுதலைக்காக அவரது குடும்பமோ அல்லது ஜே.வி.பியோ ஜனாதிபதியிடம் மண்டியிடாது என்று ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா நேற்றுக் கூறினார்.

பத்தரமுல்லையில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மேலும் கூறியவை வருமாறு:-

சரத் பொன்சேகாவை விடுதலை செய்யவேண்டுமென்றால் அவரோ அல்லது அவரது குடும்பமோ ஜனாதிபதியிடம் மன்னிப்புக்கோரவேண்டும் என்று அரசு கூறுகின்றது.

பொன்சேகாவோ அல்லது அவரது குடும்பத்தினரோ (24 ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டில் விடுவிக்கப்படாத மற்றும் கண்ணிகள் அகற்றப்படாத
# 1,900 ஏக்கர் நிலப்பரப்பில் இம்முறை நெற் செய்கையில் ஈடுபட முடியாத நிலை

யாழ்ப்பாணம், ஒக். 11

யாழ்.மாவட்டத்தில் ஆயிரத்து 900 ஏக்கர் நிலப்பரப்பில் இம்முறை காலபோக நெற்செய்கை மேற்கொள்ள முடியாத நிலைமை உள்ளதாகத் தெரியவருகிறது.

இராணுவத்தினரால் விடுவிக்கப்படாத மற்றும் மிதிவெடி அகற்றப்படாத பிரதேச வயல்களிலேயே காலபோக நெற்செய்கை மேற்கொள்ள முடியாதுள்ளது.

காலபோக நெற்செய்கை மேற்கொள்ளக்கூடியதாகவுள்ள மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 700 ஏக்கர் நிலப்பரப்பு இன்னமும் இராணுவத்தால் விடுவிக்கப்படாதுள்ளது. இதில் நாகர் கோயில் தெற்கில் 150 ஏக்கரும், நித்தியவெட்டையில் 150 ஏக்கருக்கும், போக்கறுப்பு பகுதியில் 400 ஏக்கரும் அடங்கும்.

தென்மராட்சியில் தனங்கிளப்பு பகுதியில் 800 ஏக்கர் நிலமும், எழுதுமட்டுவாழ் தெற்குப் பகுதியில் 400 ஏக்கர் நிலமும் இராணுவத்தில் விடுவிக்கப்பட்டுள்ள போதும்-

அங்கு மிதிவெடி இதுவரை அகற்றப்படாதுள்ளது. இதனால் அங்கும் இம்முறை கால போக நெற்செய்கை மேற்கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்தக் கரணங்களால் யாழ். மாவட்டத்தில் 13 ஆயிரம் ஹெக்ரெயர் நிலப் பகுதியில் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளக் கூடியதாக இருந்தபோதும் 11 ஆயிரத்து 788 ஹெக்ரெயர் நிலத்தில் நெற்செய்கை மேற்கொள்ளப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(ஒ-14)

# பாஷையூர்ப் பகுதி நீர்க் குழாய்கள் விஷமிகளால் சேதமாக்கப்பட்டன
## ஊர் மக்கள் பெரிதும் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 11

பாஷையூரில் குடிதண்ணீர் விநியோகம் தடைப்பட்டுள்ளது. விஷமிகள் சிலரின் இந்தச் செயலால் ஊர் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த புதன்கிழமை அதிகாலை வேளையே பாஷையூரில் உள்ள நீர் விநியோகக் குழாய்கள் விஷமிகள் சிலரால் உடைத்துச் சேதமாக்கப்பட்டுள்ளன. இதனையறியாது காலை ஆறு மணியளவில் குடிதண்ணீர் எடுப்பதற்காகச் சென்ற அப்பகுதி மக்களுக்கு குழாய்கள் சேதமாக்கப்பட்டமை தெரியவந்தது. அத்துடன் தமது தேவைக்குரிய நீரைப் பெற முடியாமல் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.

தற்போது பாஷையூர்ப் பகுதிக்கான நீர் விநியோகம் தடைப்பட்டுள்ளதால் அப்பகுதி மக்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

நீர் விநியோகக் குழாய்கள் உடைத்துச் சேதமாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(க-23)

# பொன்சேகாவின் விடுதலைக்காக கனடாவாழ் தமிழர்கள் போராடுவார்கள்
## கனடா தமிழ் காங்கிரஸின் தேசிய பேச்சாளர் தகவல்

கொழும்பு, ஒக். 11

கனடாவில் வாழும் தமிழர்கள் தங்களுடைய முழுப்பலத்தையும் பொன்சேகாவின் விடுதலைக்காகக் காட்டுவார்கள் என்று கனடா தமிழ் காங்கிரஸின் தேசிய பேச்சாளர் டேவில் பூபாலபிள்ளை தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்:

எமக்கும் பொன்சேகாவுக்கும் இராணுவத் தளபதி என்ற முறையில் முரண்பாடுகள் இருக்கின்றன. ஆனால் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற ரீதியில் எங்களுக்கு அவர் ஒரே மாதிரியானவர்தான். அதனால் பொன்சேகாவின் விடுதலைக்காக கனடா வாழ் தமிழர்கள் நிச்சயமாகப் போராடுவார்கள். மேலும் தனிப்பட்டவர்களின் விருப்பத்திற்காக முறையற்ற விதத்தில் சிறைவைக்கப்பட்டிருக்கும் பொன்சேகாவின் விடுதலைக்காக எம் மக்கள் பின்புலத்தில் செயற்படுவார்கள் - என்றார்.

மிகவும் கொடூரமான முறையில் பொன்சேகா நடத்தப்படுகின்றார் அதேபோல் எமது தமிழ் மக்களும் மிகவும் கொடூரமான முறையில் நடத்தப்படுகின்றார்கள் எமது மக்களுக்காக மட்டுமல்லாது பொன்சேகாவுக்காகவும் புலம்பெயர் தமிழர்கள் நிச்சயமாக போராடுவார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

(ஸ்ரீ-ற)

# வயாவிளான் ம.வியில் சிரமதானப்பணிகள்

யாழ்ப்பாணம் ஒக்.11

யாழ்ப்பாணம் வயாவிளான் மகா வித்தியாலயத்தின் சிரமாதானப் பணிகள் உயர்தரவகுப்பு மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் ஒத்துழைப்போடு மேற்கொள்ளபட்டு வருகின்றன.

இப்பாடசாலை இருபது ஆண்டுகளாக உயர்பாதுகாப்பு வலயத்தில் அமைந்து இருந்ததால் இயங்க முடியாத சூழ்நிலை காணப்பட்டது. தற்போது பாடசாலையை மீள இயங்குவதற்கு இரணுவத்தின் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதையடுத்து பாடசாலை வளாகத்தில் மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் உதவியோடு சிரமதான பணிகள் இடம்பெற்று வருகின்றன. (6-322)

# 25 வீதமான இலங்கையர்கள் மனநோய்க்கு உள்ளானவர்கள்
## உளவள மருத்துவர் கருத்து

கொழும்பு, ஒக். 11

இலங்கையில் நான்கில் ஒரு பங்கினர் பல்வேறு வகையான மனநோயினால்ப் பீடிக்கப்பட்டு அவஸ்தைக்குள்ளாகின்றனர் என உளவளத்துறைக்கான தேசிய சபை கருத்து வெளியிட்டுள்ளது.

''நாளைய உலகின் உளவள நாள்'' நிகழ்வில் நடைபெற்ற பொருள் காட்சியில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் நலன்புரி சேவைகள் (சகானய) பணிப்பாளர் டாக்டர் நிரோஷன் மெண்டிஸ் இக்கருத்தை வெளியிட்டார். அவர் தொடர்ந்து கருத்துக்களை வெளியிட்டபோது இத்தகைய மனநோய் மக்கள் மத்தியில் மற்றைய சாதாரண நோய்களில் ஒன்றாகவே பரவிவருவதை அவதானிக்க முடிகின்றதெனவும்; இலங்கையில் தற்கொலை முயற்சிகளை மேற்கொள்ளும் 90 வீதமானோர் மனநோயினால் பாதிக்கப்பட்டுள்ளனரெனவும்; மன அழுத்தம், மதுசாரம் - போதைப் பொருள் பாவனை, புகைப்பிடித்தல், நீரிழிவு, இருதயநோய் போன்றனவே இதற்கான காரணிகளாகுமெனவும் கூறினார். சுகாதார விதிமுறைகளைக் கடைப்பிடிக்காத சுகாதாரச் சீர்கேட்டை அனுசரித்த வாழ்க்கை முறையும் இதற்கோர் காரணம் என்றார் அவர்.

மனநோய்க்கான அறிகுறிகள் தென்படும் ஆரம்பக் கட்டத்திலேயே அதற்கான உடனடிச் சிகிச்சையைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். இல்லையேல் இதன் விளைவுகள் பாரதூரமாகிவிடும். ஈற்றில் இதற்கான பரிகாரத்தைத் தேடிக்கொள்வதே மிகக் கடினமாகிவிடும் என டாக்டர் நாலக்க மெண்டிஸ் தெரிவித்தார்.

உலகளாவிய ரீதியில் இந்நோயினால் பீடிக்கப்பட்ட மூன்றில் ஒரு பங்கினர் மாத்திரமே மருத்துவ ரீதியான அல்லது உளவியல் ரீதியான சிகிச்சையை நாடியுள்ளதாகத் தென்படுகின்றதெனக் கூறிய அவர் உளவியல் மருத்துவத்துறையில் கவலையீனமான போக்கு இத்துறைக்குக் களங்கமேற்படுத்துவாய் அமையும் என்றார். (ரி)




யாழ்.மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் குழுவும் அரசசார்பற்ற நிறுவனங்களும் இணைந்து சர்வதேச சிறுவர் தினத்தை ஒட்டி நேற்று நடத்திய ஊர்வலத்தில் யாழ். அரச அதிபர் உட்பட அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளும், சிறுவர்களும் வீரசிங்கம் மண்டபத்தை நோக்கிப் பவனியாகச் செல்கின்றனர்.

# இந்தியா வழங்கும் வீட்டுத் திட்டத்தின் கீழ் குடாநாடு மீண்ட முஸ்லிம்களுக்கும் வீடுகள்
## யாழ். வந்தவேளை அமைச்சர் ரிஷாத் உறுதிமொழி

யாழ்ப்பாணம், ஒக். 11

இந்திய அரசின் உதவியுடன் வடபகுதியில் நிர்மாணித்து வழங்கப்படவிருக்கும் வீட்டுத்திட்டம் குடாநாட்டில் மீளக்குடியமர்ந்துள்ள முஸ்லிம் மக்களுக்கும் கிடைக்க ஆவண செய்வேன் என்று உறுதியளித்தார் வர்த்தக மற்றும் கைத்தொழில் அமைச்சர் ரிஷாத் பதியுதீன்.

அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த அமைச்சர் யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியில் முஸ்லிம் மக்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார். யாழ்ப்பாணத்தில் மீளக்குடியமர்ந்துள்ள முஸ்லிம் மக்களின் குறைநிறைகளைக் கேட்டறிந்த அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அமைச்சர் மேலும் தெரிவித்தவைகள் வருமாறு :-

- மீளக்குடியமர்ந்துள்ள முஸ்லிம் மக்கள் வட பகுதியிலிருந்து கழிவு இருப்புக்களை தென்பகுதிக்கு எடுத்துச் செல்வதில் உள்ள பிரச்சினைகள் குறித்து யாழ். அரச அதிபர் எனது அமைச்சுக்கு அறிக்கையிட வேண்டும்.
- யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியின் மேல்தளத்தைப் புனரமைப்பதற்கும், புதிய சோனகத் தெருவிலுள்ள அபூபக்கர் பள்ளிவாசலை முழுமையாக புனரமைத்துத் தருவதற்கும் உத்தேச மதிப்பீட்டு அறிக்கை தரப்பட வேண்டும்.
- புதிய சோனகத் தெருப் பகுதிக்கு மின் விநியோகம் வழங்கப்படுவதற்கும், புதிய பாதை அமைப்பதற்கும் உத்தேச மதிபீடு வழங்கப்பட வேண்டும்.
- மீளக்குடியமர்ந்துள்ள முஸ்லிம் மக்களின் சேதமடைந்த மற்றும் முழுமையாக அழிவடைந்த வீடுகள் மற்றும் சொந்தக் காணி அற்றவர்களின் பெயர் விவரங்களை உடனடியாக எனக்குச் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுங்கள்.
- முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகளாக யாழ். மாநகர சபையில் அங்கம் வகிக்கும் நான்கு உறுப்பினர்களும் மீளக்குடியமர்ந்துள்ள முஸ்லிம் மக்களது நலனின் அதிக அக்கறை காட்ட வேண்டும் - என்றார். (ஒ-14)

# பெற்றோர்களின் உரிய கண்காணிப்பின்மையே பிள்ளைகளின் சீரழிவுக்குப் பிரதான காரணம்
## யாழ்.அரச அதிபர் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம்,ஒக்.11

பெற்றோர் கண்டும் காணாமல் இருப்பதே இன்றைய சிறுவர்கள் வாழ்க்கையில் தடம் பிறழ்வதற்கு காரணமாக இருக்கிறது - இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார்.

யாழ்.மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் குழுவும் அரசசார்பற்ற நிறுவனங்களும் இணைந்து நேற்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடத்திய சர்வதேச சிறுவர் தினத்தில் தலைமையுரை ஆற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில் -

இந்த ஆண்டில் மட்டும் 278 மாணவர்கள் பாடசாலைக் கல்வியினை இடைநடுவில் விட்டு விலகியுள்ளனர். இந்த மாணவர்களில் பெரும்பாலானவர்கள் வறுமை காரணமாகவே பாடசாலைக் கல்வியினை இழந்துள்ளனர். இவர்கள் பலவிதமான துஷ்பிரயோகங்களுக்கும் உள்ளாகின்றனர். சட்டபூர்வமற்ற நிலையில் தொழிலாளர்களாக வேலைக்கும் அமர்த்தப்பட்டுள்ளனர்.

300இற்கும் அதிகமான சிறுவர்களுக்கு பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் இல்லை. பெற்றோரின் அறியாமையினால் - முறையான திருமண தொடர்பு இல்லாதல் - பிறந்த குழந்தைகளையும் இவ்வாறு பதியாமல் விடுகின்றனர். வறுமையால் 246 பேர் வரை உடல் நோய் நொடியினால் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். இவர்களுக்குப் பணவசதி படைத்து நல்லுளங்கள் உதவினால் அந்தச் சிறுவர்களாலும் முன்னுக்கு வர முடியும்.

இதுவரை 77 பாலியல் துஷ்பிரயோகம் சம்பந்தமான முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றிருக்கின்றன. சிறுவர்கள் அவர்களை அறியாமலேயே இத்தகைய துஷ் பிரயோகங்களுக்கு உட்படுகின்றனர். சமூகத்தில் பொறுப்பில் உள்ளவர்களின் தவறினாலேயே இவ்வாறான நிலைமை ஏற்படுகின்றது.

யாழ்ப்பாணத்தில் இன்று பெரும் பிரச்சினையாக இருப்பது இணையம், தெலைபேசிமூலமான கலாசாசர சீரழிவுகள் தான்.

பெற்றோர் இதுபற்றி ஒன்றுமே தெரியாததுபோல கண்டும் காணாததுபோல் இருக்கின்றனர். எனவே பெற்றோர் உரிய முறையில் இது தொடர்பில் கவனமாக இருந்து அவர்களை வளர்க்க வேண்டும் - என்றார். (எ-15)

# மோ. சைக்கிளில் சென்றவர் மீது பாய்ந்தது குரங்கு

தென்மராட்சி, ஒக். 11

மோட்டார் சைக்கிள் மீது குரங்கு பாய்ந்ததில் நிலை குலைந்து வீழ்ந்து மோட்டார் சைக்கிளோட்டி காயமடைந்தார்.

நேற்றுமுன்தினம் மீசாலையில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த எஸ்.வினோதராசா (வயது 33) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

(ஒ-207)

# கிராம அலுவலர்களுக்கு புதிய அடையாள அட்டைகள்; விரைவில் வழங்குவதற்கு அரச அதிபர் நடவடிக்கை

வலி வடக்கு ஒக் 11

யாழ் மாவட்டத்தில் கடமையாற்றும் கிராம அலுவலர்களுக்கு புதிய அடையாள அட்டைகளை வழங்குவதற்கு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

வடக்கு கிராம உத்தியோகத்தர்சங்கத்துக்கும், யாழ்.மாவட்ட அரசாங்க அதிபருக்கும் இடையில் நடைபெற்ற கலந்துரையாடலைத் தொடர்ந்து இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கிராம அலுவலர் சங்கப் பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

இந்தக் கலந்துரையாடலின் போது பின்வரும் கோரிக்கைகளும் முன்வைக்கப்பட்டன.

✱கிராம அலுவலர்களுக்கு வழங்கப்படும் சீருடைகள் மற்றும் காகிதாதிகளுக்கான கொடுப்பனவுகளை நேர காலத்துடன் வழங்க வேண்டும்.

✱கிராம அலுவலர்களுக்குரிய அலுவலகப் பையை வழங்க நடவடிக்கையெடுக்க வேண்டும்.

✱கிராம உத்தியோகத்தர்களின் அலுவலகங்களில் இருக்கும் தளபாடங்கள் போதியளவாக இல்லை. அதனால் தேவையான தளபாடங்கள் வழங்கப்பட வேண்டும்.

✱கிராம மட்டத்தில் அரச அரச சார்பற்ற நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படுகின்ற சகல செயற்திட்டங்களுக்கும் கிராம அலுவலர்கள் பொறுப்பாக இருக்க வேண்டும்.

என்பன போன்ற கோரிக்கைகளை அரச அதிபரிடம் கிராம அலுவலர்கள் முன்வைத்தனர்.

இதனைத் தொடர்ந்து தற்போது அரசாங்க அதிபரின் பணிப்புரையின் பெயரில் அலுவலகப் பைகளை வழங்குவதற்குத் தேவையான விவரங்கள் பிரதேச செயலகங்கள் ரீதியாகவும் உதவி அரசாங்க அதிபர் பிரிவு ரீதியாகவும் யாழ்.செயலகத்தினால் சேகரிக்கப்பட்டு வருகிறது.

மேலும் கிராம அலுவலர்களின் இந்தக்கோரிக்கைகளின் அடிப்படையில் சில முன்செயற்பாடுகளை யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

(எ-201-86)



சர்வதேச சிறுவர்தின சமாதான பேரணி செல்வதை முற்ற வெளிப் பகுதியில் உள்ள கடை ஒன்றில் இருந்து ஏக்கத்துடன் பார்வையிடும் சிறுவன். *(படம்: டிலீப்)*

## பாடசாலை மதில் சரிந்து வீழ்ந்ததில் மாணவன் பலி

யாழ்ப்பாணம், ஒக். 11

உடுப்பிட்டி, இமையாணன் அ.த.க. வித்தியாலய மதில் இடிந்து வீழ்ந்ததில் பாடசாலை மாணவன் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

நேற்றுமுன்தினம் மாலை குறித்த பாடசாலையின் மதிலில் ஏறி மாணவர்கள் விளையாடிக் கொண்டு இருந்தனர்.

அப்போது மதில் உடைந்து மாணவர்களுக்கு மேல் வீழ்ந்ததில் தரம் 6 இல் கல்வி கற்று வரும் விதுசன் அன்ரன்டேவிட் (வயது 11) என்ற மாணவர் பலியானார். கலைப்பிரியன் விஜயகுமார் (வயது 11) என்ற மற்றொரு மாணவர் காயமடைந்த நிலையில் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

உயிரிழந்த மாணவனின் சடலம் பிரேத பரிசோதனையின் பின்னர் நேற்று உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

கடந்த சில தினங்களாகப் பெய்த மழையால் மதில் ஈரலிப்பாக இருந்தது என்றும் அதில் மாணவர்கள் ஏறியபோதே அது சரிந்ததால் இந்த அசம்பாவிதம் நிகழ்ந்தது என்றும் பாடசாலை அதிபர் தெரிவித்தார்.

(ஒ-319)

## ஆவணங்களை ஆராய்ந்து தீர்வுகூற எனக்கு 3 மாதகால அவகாசம் தேவை

*யாழ். வந்துள்ள சிங்களவரிடம் அமைச்சர் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஒக்.11

ஆவணங்களை ஆராய்ந்து பார்த்து உங்களுக்குத் தீர்வை முன்வைக்க எனக்கு 3 மாத கால அவகாசம் தேவை.

- இவ்வாறு பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா யாழ். வந்துள்ள சிங்கள மக்களிடம் தெரிவித்தார்.

யாழ்.ரயில் நிலையத்தில் தங்கியுள்ள சிங்கள மக்களை நேற்றுக் காலை நேரில் சென்று சந்தித்த அமைச்சர் தலைமையிலான குழு




வினர் அவர்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்துகொண்டார்.

அரச காணிகளை இங்கு தேடித்தான் பார்க்க வேண்டும். உங்கள் ஆவணங்களை ஆய்வு செய்த பின்னரே தீர்வு தரமுடியும். அதற்கு எனக்கு மூன்றுமாத கால அவகாசம் தேவை. உங்கள் குடிதண்ணீர் மற்றும் சுகாதார வசதிகளை மாநகர சபை கவனிக்கும்.

எனது கட்சியின் நிதியில் இருந்து உங்களுக்கு அரிசி, சமையல் பொருள்களை வழங்க முடியும். - என்றும் அமைச்சர் அவர்களிடம் தெரிவித்தார்.

''மீண்டும் அநுராதபுரத்திற்குச் செல்லப் போகிறீர்களா?'' என்று அமைச்சர் கேட்டபோது, அவர்கள் ''முடிவு தெரியாமல் போகமாட்டோம்.'' என்று பதிலளித்தனர். இந்த மாத இறுதியில் சிங்கள மக்களின் சார்பில் ஒரு சிலர் தம்மை வந்து சந்திக்க நேரம் ஒதுக்கித் தருவதாகவும் அமைச்சர் அவர்களிடம் தெரிவித்தார்.

இதேவேளை, நேற்றும் 4 குடும்பங்கள் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தன.

இதனிடையே, மீளக்குடியேற வந்த குடும்பங்களில் பாடசாலையில் படிக்கும் பிள்ளைகளைக் கொண்ட குடும்பங்கள் மீளவும் தாம் வந்த இடங்களுக்கே சென்று விட்டதாகத் தெரியவருகின்றது.

(ஒ-15)

## 'கமநெகும' திட்டத்தின் கீழ் 50 பயனாளிகளுக்கு உதவி

வலி வடக்கு ஒக்.11

உடுவில் பிரதேச செயலர் பிரிவில் உள்ள 50 பயனாளிகளுக்கு 'கமநெகும' திட்டத்தின் கீழ் பப்பாசிச் செய்கை மற்றும் வெங்காயச் செய்கைகளுக்கான உதவிகள் விவசாயத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ளது

பப்பாசிச் செய்கைக்கு 30 பயனாளிகள் ஏழாலை, புன்னாலைக் கட்டுவன் பகுதியில் தெரிவு செய்யப்பட்டு பயிற்சிகளும், பப்பாசிக் கன்றுகளும் வழங்கப்பட்டுள்ளன. இதே போன்று மீளக் குடியேற அனுமதிக்கப்பட்ட புன்னாலைக்கட்டுவன் வடக்குப் பகுதியில் மீளக்குடியேறிய 20 குடும்பங்களுக்கு தலா 100 கிலோ விதை வெங்காயம் செய்கைக்காக வழங்கப்பட்டுள்ளது.

இதே போன்று மேலும் 34 பயனாளிகளுக்கு பயறுச்செய்கைக்கான உதவிகள் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(எ-86)

## "நாட்டுக்காக அதிகம் சேமிப்போம்" யாழ்நகரில் சனியன்று ஊர்திப் பவனி

யாழ்ப்பாணம், ஒக். 11

சேமிப்பின் முக்கியத்துவத்தை மக்களுக்கு உணர்த்தும் வகையில் தேசிய சேமிப்பு வங்கியின் ''நாட்டுக்காக அதிகம் சேமிப்போம்'' என்ற பொருளில் பெரிய சேமிப்பு உண்டியல் பொருத்தப்பட்ட ஊர்தியின் ஊர்வலம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் தேசிய சேமிப்பு வங்கியில் இருந்து ஆரம்பமானது.

ஊர்வலம் ஆஸ்பத்திரி முதலாம் குறுக்குத்தெரு சந்திவரை சென்று அங்கிருந்து மீண்டும் ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் பண்ணை வீதி வழியாக யாழ். பிரதம தபாலகம் சென்று அங்கு நடைபெற்ற நிகழ்வை அடுத்து யாழ்ப்பாணம் பிரதான வீதியூடாக யாழ். மத்திய கல்லூரிக்குச் சென்றது.

அங்கிருந்து பருத்தித்துறை நாவலர் வீதி வழியாக நாவலர் வீதியில் உள்ள தேசிய சேமிப்பு வங்கியின் கிளையைச் சேர்ந்தது. இந்த ஊர்தி பின்னர் நாவலர் வீதி, கே.கே.எஸ். வீதி வழியாக மீண்டும் ஆஸ்பத்திரி வீதியை அடைந்து தேசிய சேமிப்பு வங்கியைச் சென்றடைந்தது.

(ஒ-6-7)

## தேங்கி நிற்கும் மழை வெள்ளத்தால் மல்லாகம் சந்தியில் மக்கள் அவதி

வலி வடக்கு, ஒக்.11

மல்லாகம் சந்தியில் தேங்கி நிற்கும் வெள்ளத்தினால் பொது மக்கள் போக்குவரத்து செய்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றார்கள்.

கடந்த பல வருடங்களாக இத்தகைய நிலையே தொடர்கின்ற போதிலும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினர் குறித்த வீதியை புனரமைப்பது தொடர்பாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதனையும் எடுக்க வில்லையென அந்தப் பகுதி பொது மக்களும், வர்த்தகர்களும் விச னம் தெரிவித்துள்ளனர்.



*மல்லாகம் சந்தியில் மழைநீர் தேங்கி நிற்கிறது. அதற்குள் அகப்பட்டு சேறும் சகதியுமாக ஆகிவிடாது தப்பிச் செல்ல முயற்சிக்கும் வாகனச் சாரதிகள். (படம்: நேசன்)*

நாளாந்தம் இந்த சந்தியில் சுமார் இருநூறுக்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்களும் மற்றும் பொது மக்களும் பஸ் வண்டிகளுக்கு காத்திருந்து பயணம் செய்வதுடன் பல நூற்றுக் கணக்கான வாகனங்களும் பயணிக்கின்றன.

எற்கனவே இந்தப் பகுதியில் வெள்ளம் ஓடுவதற்காக வெட்டப்பட்ட வெள்ள வாய்க்கால் மூடப்பட்டுள்ளதால் தற்போது பெய்யத் தொடங்கியுள்ள மழையால் முன்னரை விடவும் அதிகளவில் வெள்ளம் தேங்குகின்றது. இதனால் பொதுமக்கள் அவலத்துடனேயே இச்சந்தியூடாகப் பயணித்து வருகின்றனர்.

(எ-86)

## நூலகங்களை நோக்கி மக்கள் வராமையால் மக்களைத்தேடி நூலகங்கள் செல்லும் நிலை

### யாழ்.பொது நூலகர் உரை

யாழ்ப்பாணம்,ஒக். 11

நூலகங்களை நோக்கி மக்கள் தற்போது வராமையால் நாங்கள் மக்களைத் தேடிப்போக வேண்யுள்ளது -இவ்வாறு யாழ்.பொது நூலகர் எஸ்.தனபாலசிங்கம் தெரிவித்தார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன் ஆரம்பிக்கப்பட உள்ள நடமாடும் நூலகசேவை தொடர்பான பத்திரிகையாளர் மாநாட்டின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:

2006ஆம் ஆண்டுவரை நாங்கள் நடமாடும் நூலக சேவையினை நடாத்தி வந்தோம். பின்னர் ஏற்பட்ட யுத்தம் காரணமாக அதனை நிறுத்தி வைத்திருந்தோம்.

எமது நூலகத்தின் சிறுவர் பகுதியை மேம்படுத்த சிங்கப்பூர் தொழில்நுட்ப மத்திய நிலையம்,சிங்கப்பூர் தேசிய நூல் நிலையம் ஆகியன உதவி செய்து வருகின்றன.இந்த நடமாடும் நூலக சேவையை பாடசாலைகளோடு மட்டுப்படுத்தாமல் முதியோர் சிறைச்சாலை ஆகிய வற்றுக்கும் விஸ்தரிக்க தீர்மானித்துள்ளோம். அத்துடன் இத்தகைய நடமாடும் சேவை மூலம் யாழ்.மாவட்ட மாணவர்களின் வாசிப்புத்திறன் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றோம் என்றார்.

இங்கு உரையாற்றிய ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான அலுவலகத்தின் நிதி மற்றும் ஒப்பந்த அமைப்புக்களின் தலைவர் விம்புருட்ஹோம்' தெரிவிக்கையில்:

இந்த நடமாடும் நூலக சேவையானது எமது நிதி உதவியுடன் ஆரம்பிக்கப்பட இருக்கிறது இதன்மூலம் யாழ்.பொதுநூலகம் ஒரு வாரத்திற்கு இருமு

றை வீதம் ஒவ்வொரு கல்வி வலயத்துக்கும் தனது சேவையினை வழங்கக் கூடியதாக இருக்கும்.

இதன் ஆரம்பத் திட்டம் 6 மாதங்களுக்கானது இதன் மூலம் யாழ்.மாவட்டத்தில் உள்ள ஐந்து கல்வி வலயங்ளைச் சார்ந்த 50 இற்கும் அதிகமான பாடசாலைகளை சேர்ந்த பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் பயன் பெறுவார்கள். பாட உசாத்துணை நூல்களுக்கும் பதிப்பகங்களுக்கும் தொடர்பற்றவர்களையோ குறைந்தளவிலான தொடர்புடையவர்களையே தொடர்புபடுத்தவுதாகும். கல் வியின் முக்கியத்துவத்தையும் பயன்பாட்டையும் உணர்த்துவதுடன் சிறார்கள் மத்தியில் மட்டு மல்லாது அதிபர்கள் ஆசிரியர்கள் பெற்றோர்களுக்கும் வாசித்தல் பற்றிய விழிப்புணர்ச்சியை உருவாக்கும் ஒரு முயற்சியே இதுவாகும்.

கடந்த வருடம் முடிவுற்ற போரினால் நேரடியாகவோ மறைமுகமாகவோ பாதிக்கப்பட்ட பெருந் தொகையான குழந்தைகளின் அறியினை மேலும் விருத்தி செய்வதற்கான இன்னொரு சந்தர்ப்பமாகவும் அமையும்..

சிறுவர்களும் இளை யோர்களும்தான் உலகின் சனத் தொகையின் மூன்றிலொரு பங்காக விளங்குகின்றனர் - என்றார்.

(எ-15)

# திஸ்ஸ அத்தநாயக்கவின் கருத்துக்கு சரவணபவன் எம்.பி. கடும் கண்டனம்

கொழும்பு, ஒக். 11

புலிகளின் காலம் முடிந்துவிட்டதால் தமிழ் மக்களுடன் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வதற்கான தேவை இல்லை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்த கருத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவான் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

திஸ்ஸ அத்தநாயக்கவின் கருத்து ஐ.தே.கவின் தமிழர் விரோத நடவடிக்கையின் தொடர்ச்சியே எனவும் அவர் சாடி உள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

''ஆயுதக் குழுக்கள் குறிப்பாக விடுதலைப் புலிகள் தற்போது இல்லாத காரணத்தால் மத்தியில் குவிக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களைப் பிராந்தியங்களுக்குப் பகிரவேண்டிய அவசியம் இல்லை'' - என லண்டன் பி.பி.ஸி.யின் சிங்கள சேவைக்கு வழங்கிய ஒரு பேட்டியில் அண்மையில் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்திருந்தார்.

அப்பேட்டியில்,''தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண் பதற்குப் பதிலாக வடக்கு, கிழக்கு மக்களின் நாளாந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதே இன்றைய அவசரத் தேவையாகும்'' எனவும் குறிப்பிட்டிருந்தார்.

இந்நாட்டில் சகல துயரங்களுக்கும் பெரும் இரத்தக் களரிக்கும் காரணமாயிருக்கும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பில் அவர் தெரிவித்திருக்கும் எதிர்மறையான கருத்தையும் தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுவதை ஆதரிக்கும் அவரின் இன ஒடுக்குமுறை மனப்பான்மையையும் வன்மையாகக் கண்டிக்கின்றேன். இனவாத சிந்தனைகளைக் களைந்து இந்நாட்டில் அமைதியையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்த அவரும் அவரைப் போன்றவர்களும் முயற்சிக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கின்றேன்.

ஆயுதப்போராட்டம் இல்லாமற் போய்விட்டதால் தமிழ் மக்களுக்கான அதிகாரப்பர வலாக் கம் அவசியமில்லை என்ற கூற்றின் மூலம், உரிமைகளைப் பெறுவதற்காக மீண்டும் ஓர் ஆயுதப் போராட்டம் தொடங்கப்பட வேண்டும் என திஸ்ஸ அத்தநாயக்க மறைமுகமாகச் சுட்டிக் காட்டுகிறாரா?

கடந்த காலத்தில் அனுபவித்த கொடூரமான கசப்பான அனுபவங்களை நாம் மீண்டும் எதிர்கொள்ள விரும்பவில்லை என்பதை தெளிவாகத் தெரிவிக்கும் அதேவேளையில் எமது உரிமைகள் பறிக்கப்பட்டு தமிழ்த் தேசிய இனத்தின் தனித்துவம் அழிக்கப்படும்போது நாம் தலை குனிந்து நிற்க முடியாது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

திஸ்ஸஅத்தநாயக்கவின் இந்தக் கருத்தானது தனி ஒரு நபரின் வாய்மொழியாகக் கருதப்படக் கூடியதல்ல. காலம் காலமாக ஐக்கிய தேசியக் கட்சி தமிழ் மக்கள் மீது மேற்கொண்டுவரும் இன ஒடுக்குமுறையின் ஒரு பகுதியாகவே இதனை நான் பார்க்கிறேன்.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான சந்தர்ப்பங்கள் எற்படும் போதெல்லாம் அதைக் குழப்பயடித்த வரலாறு ஐக்கிய தேசியக் கட்சிக்கு உண்டு. இலங்கை அரசியலில் தமிழ்மக்கள் இரத்தம் சிந்தியபோதெல்லாம் அந்த இரத்தத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் கரங்கள் தோய்ந்திருந்தன என்பதையும் மறந்துவிட முடியாது.

1948ஆம் ஆண்டு இந்தியா-பாகிஸ்தான் குடியுரிமைச் சட்டத்தின் மூலம் 6 லட்சம் மலையக மக்களின் குடியுரிமையைப் பறித்த ஐ.தே.க. அவர்களை நாடற்றவர்களாக்கியதுடன் இலங்கை நாடாளுமன்றத்தில் தமிழ்ப் பிரதிநிதித்துவத்தையும் குறைத்தது. இது ஒட்டுமொத்த தமிழ்மக்களுக்கும் எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை.

1950இல் கல்லோயா குடியேற்றம் உருவாக்கப்பட்ட தன் மூலம், தமிழர்கள் பாரம் பரியமாக வாழ்ந்த பூமி சிங்கள மக்களால் ஆக்கிரமிக்கப்பட்டதுடன் கிழக்கு மகாணத் தமிழ் மக்களின் நிலத் தொடர்பும் துண்டிக்கப்பட்டது.

தமிழ்மக்களுக்கெதிரான தூரநோக்குக் கொண்ட இந்த இரு நடவடிக்கைகளும் ஐக்கிய தேசியக் கட்சியின் தந்தை எனக் கருதப்பட்ட டி.எஸ்.சேனநாயக்கா அவர்களின் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தினாலேயே மேற்கொள்ளப்பட்டன.

1952ஆம் ஆண்டு சிங்களம் மட்டுமே இந்நாட்டின் அரச கருமமொழியாக இருக்கவேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் களனி மாநாட்டில் அமரர் ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவால் முன்வைக்கப்பட்ட பிரேரணையே 1956இல் எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்காவை தூண்டி விட்டது. தனிச்சிங்களச் சட்டத்தை நிறைவேற்ற நிர்ப்பந்தித்தது.

1957ஆம் ஆண்டு இனப்பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு காணும் பொருட்டு பண்டா - செல்வா ஒப்பந்தம் கையெழுத்தானது. அதற்கு எதிராக அன்று ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவரான அமரர் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தலைமையில் கண்டி யாத்திரை நடத்தப்பட்டது. வெகுஜனப் போராட்டங்கள் இடம்பெற்றன. பிரதமர் மாளிகையின் முன் பௌத்த பிக்குகளின் சத்தியாக்கிரம் நடந்தது. ஒரு பெரும் இனக் கலவரம் தூண்டிவிடப்பட்டு தமிழ்மக்களின் உயிர்கள் பறிக்கப்பட்டன. உடமைகள் அழிக்கப்பட்டன. பண்டா - செல்வா ஒப்பந்தமும் கிழித்தெறியப்பட்டது.

இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக 1965ஆம் ஆண்டு டட்லி - செல்வா ஒப்பந்தம் செய்யப்பட்டது. தமிழ்க் கட்சிகளின் ஆதரவுடன் ஐ.தே.கட்சி தலைமையில் கூட்டரசாங்கம் அமைக்கப்பட்டது. இறுதியில் அதுவும் நிறைவேற்றப்படாது தமிழர் தரப்பு தொடர்ந்து நாலரை வருடங்கள் ஏமாற்றப்பட்டது. தமிழரசுக் கட்சி அரசாங்கத்தை விட்டு வெளியேறியது.

1977ஆம் ஆண்டு அமரர் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா ''போர் என்றால் போர் சமாதானம் என்றால் சமாதானம்'' -என்று, தான் நாட்டின் பிரதமர் என்ற அந்தஸ்தையும் மறந்து பிரகடனம் செய்ததன் மூலம் இந்த நாட்டில் தமிழ் மக்களுக்கு எதிரான பெரும் இன அழிப்புக் கலவரம் தூண்டிவிடப்பட்டது. இதில் ஐக்கிய தேசியக் கட்சி தலையாய பங்கு வகித்தது என்பதை எவராலும் மறந்துவிட முடியாது.

தமிழ் மக்களின் அரிய சொத்தாகக் கருதப்பட்ட யாழ். நூலகமும் யாழ்ப்பாண நகர்ப் பகுதியும் எரியூட்டி அழிக்கப்பட்டபோது ஐ.தே.கட்சியின் இரு அமைச்சர்கள் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்தனர் என்பதும் இச்செயலுக்கு ஆதரவு வழங்கினர் என்பதும் வரலாற்றில் அழிந்துவிடக் கூடிய சம்பவங்களா?

1983 ஆண்டின் இன அழிப்புக் கலவரம் ஐ.தே.கட்சியால் திட்டமிட்டு உருவாக்கப்பட்டது. இதில் பல அமைச்சர்களும் அவர்களின் கையாட்களும் நேரடியாகவே ஈடுபட்டனர். சிறைச்சாலைக்குள் வைத்து தமிழ்க் கைதிகள் கொடூரமான முறையில் கொல்லப்பட்டனர். பொலிஸாரும் இராணுவத்தினரும் பார்த்திருக்கவே தமிழர்கள் கொல்லப்பட்டனர், உடைமைகள் சூறையாடப்பட்டன, குடியிருப்புகளும் தொழில் நிலையங்களும் எரியூட்டப்பட்டன. உலக அரங்கிலே இலங்கையின் நற்பெயரை களங்கப்படுத்திய இந்தக் கொடூரம் ஐ.தே.கட்சி ஆட்சியில்தானே இடம்பெற்றது. ஐ.தே.கட்சியின் ஆதரவுடன் தான் இடம் பெற்றது.

1987ஆம் ஆண்டு இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்ட மாகாண சபைக்கு வழங்கப்பட்ட மிகக் குறைந்த அதிகாரங்களைக் கூட நடைமுறைப்படுத்தாது அதை வெறும் காட்சிப் பொருளாக வைத்திருந்ததும் அடுத்த ஆட்சியாளர்களுக்கு அதைத் தொடர வழிகாட்டியதும் ஐ.தே. கட்சி அல்லவா?

விடுதலைப் புலிகள் வடக்கு - கிழக்கின் பெரும் பகுதியைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்த நிலையில் அவர்களுடன் பேச்சுக்களை மேற்கொள்ள வேண்டிய தேவை ஐ.தே.கட்சி அரசுக்கு எழுந்தது. இவ்வகையில் 2002 இல் வெளிநாடுகளில் தொடர் பேச்சுக்கள் இடம்பெற்றன.

ஒஸ்லோவில் நடந்த பேச்சில், ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் ஒரு சமஷ்டி முறையிலான தன்னாட்சி அதிகாரசபை மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வுக்கான முயற்சிகள் மேற்கொள்வது என இணக்கம் காணப்பட்டது. ஆனால் 5 சுற்றுப் பேச்சுகள் உலகின் பல்வேறு தலைநகரங்களில் இடம்பெற்ற போதிலும் எந்த ஒரு சிறு முன்னேற்றமும் காணப்படவில்லை. மாறாக விடுதலைப் புலிகளின் பேரம்பேசும் சக்தியை குறைப்பதில் ஐ.தே.கட்சி மறைமுக சதிகளில் ஈடுபட்டது. இவ்வகையிலேயே விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகளில் ஒருவரான கருணாவை புலிகளுடன் முரண்பட வைத்து வெளியேற்றியது.

இதில் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் பகிரங்கமாகவே செயற்பட்டார்.

இவ்விஷயத்தில் புலிகள் பலவீனமடைந்ததும் அவர்களின் தோல்விக்கு அதுவும் ஒரு காரணமாயமைந்ததும் உண்மைதான். ஆனால், அடுத்து வந்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறக்கூடிய ஒரே ஒரு சந்தர்ப்பத்தையும் ஐ.தே.கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க அதன் காரணமாக இழந்தார்.

இப்போது ஐ.தே. கட்சியிலிருந்து பலரும் பகுதிபகுதியாக வெளியேறிக்கொண்டிருக்கின்றனர். இன்னும் பலர் வெளியேறத் தயாரான நிலையில் உள்ளனர். ஜனநாயக மக்கள் முன்னணியி லிருந்தும் ஒருவர் வெளியேறி விட்டார். சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கூட அரசுக்கு தனது ஆதரவை வழங்கியுள்ளது. மலையகக் கட்சிகளும் ஐ.தே.கட்சியை விட்டு தூரப்போய்விட்டன.

மெல்ல மெல்ல தனிமைப்பட்டு தன்னை அழித்துக்கொள்கிறதா ஐ.தே.கட்சி என்ற கேள்வி பலர் மத்தியிலும் எழுந்துள்ளது.

எப்படியிருந்த போதிலும் திஸ்ஸ அத்தநாயக்கா வெளியிட்ட கருத்து ஐ.தே.கட்சி கடந்த காலங்களில் மேற்கொண்ட தமிழ் மக்கள் விரோதக்கொள்கைகளின் ஒரு தொடர்ச்சி என்றே பலரும் நம்புகின்றனர்.

தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களை ஐக்கியப்படுத்தி முன் செல்லக்கூடிய ஒரு நியாயமான நேர்மையான கொள்கையை முன்வைத்து ஐக்கிய தேசியக் கட்சி தன்னைப் பாதுகாத்துக்கொள்ளப் போகிறதா அல்லது இப்படியே தன்னைத் தனிமைப்படுத்தி அழிந்து போகப்போகிறதா என்பதே இப்போது எழும் கேள்வி. அதை அதன் தலைவர்களே தீர்மானிக்கவேண்டும்.

- இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவான் தெரிவித்துள்ளார்.

(உ)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



06.10.2010 அன்று யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 26 ஆவது பட்டமளிப்பு விழாவில் முதுதத்துவமானிப் பட்டம் பெற்ற எமது பொருளியல் விரிவுரையாளர்

**சுவாமிநாதன் விஜயநாதன்**

துறைத் தலைவர், உயர் தேசிய வியாபார கற்கைநெறி (HANDBS), உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம்

(B.A. ( Eco. Spl.) Jaffna, post.g.d. in Edu Nuhchoda M.Phil. in Eco. Jaffna)

அவர்களை மேலும் பல பட்டங்களையும் சிறப்புக்களையும் பெற்று சீரும் சிறப்புமாக வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
கலை மாணி பகுதி I, புதிய உயர் கல்லூரி,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
பொருளியல் மாணவர்கள்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/திக்கம் சித்திவிநாயகர் வித்தியாலயத்தில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2010 இல் சித்தியடைந்த மாணவர்களான,

மு. பிரியங்கா - 158
இ.நிலானி - 158
பே.தயாநிதி - 151
அ.றிச்சேர்ட் நிதர்ஷன் - 149

ஆகியோரை நாம் பாராட்டுவதுடன் அவர்களுக்கு கற்பித்த அதிபர், ஆசிரியர்கள் அனைவரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/திக்கம் சித்திவிநாயகர் வித்தியாலயம்.

(10445)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



மாமுனை, செம்பியன்பற்றைச் சேர்ந்த சிவ நேசன் தவராணி தம்பதியரின் செல்வப் புதல்வன்

**சிவநேசன் சாருசன்**

(முல்லைத்தீவு கள்ளப்பாடு அ.த.க பாடசாலை)

2010ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 159 புள்ளிகளைப் பெற்று மாவட்ட மட்டத்தில் 14ஆவது இடத்தையும் பாடசாலை மட்டத்தில் முதலாவது இடத்தையும் பெற்றதை யிட்டு பாராட்டி வாழ்த்துகின்றோம். இவரைக் கற்பித்த ஆசிரியர்களுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

வாழ்த்துவோர் :
1) திரு. திருமதி நல்லையா பாக்கியம்.
2) அப்பா, அம்மா, அண்ணா, தங்கைமார், தம்பிமார்.
3) பெரியம்மாமார், பெரியப்பாமார்.
4) சித்தப்பா, சித்தி.
5) மாமாமார், மாமிமார்.
6) மச்சான்மார்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**வரதராஜசர்மா கேதீஸ்வரசர்மா** (B.com.)



**செல்வி கேதீஸ்வரசர்மா பவித்ரா** (164 புள்ளிகள்)

யாழ்.பல்கலைக்கழகத்தில் 06.10.2010 அன்று நடைபெற்ற 26 ஆவது பட்டமளிப்பு விழாவில் முதுகலைமாணி (குடித்தொகை அபிவிருத்தி கற்கைநெறி) பெற்ற வரதராஜசர்மா கேதீஸ்வரசர்மா அவர்களையும் திரு.திருமதி கேதீஸ்வரசர்மா வதனா தம்பதியரின் செல்வப் புதல்வி கேதீஸ்வரசர்மா பவித்ரா (யாழ்.புனித ஜோன்.பொஸ்கோ வித்தியாலயம்) 2010 ஆம் ஆண்டு 5 ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் 164 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார். அவர்களையும் பாராட்டுவதுடன் மூளாய் வதிரன்புலோ சித்திவிநாயகர் அருளால் மேலும் பல சிறப்புக்கள் பெற்று நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

பிள்ளையார் கோயிலடி,
மூளாய்.

வாழ்த்துவோர்:
ஜெயானந்தசர்மா குடும்பம்
(தாத்தா, அம்மம்மா, பெரியம்மா, பெரியப்பா,
சித்திமார், சித்தப்பா, வர்ஷா, சஞ்சய்)

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## இந்தப் பக்கம் அரசு திரும்புமா?

★ இராணுவ முகாமில் உள்ள கணவரை விடுவிக்காவிட்டால் நான் எனது பிள்ளைகளுடன் தீக்குளித்து விடுவேன்.

★ கையில் காயத்துடன் இராணுவம் அழைத்துச் சென்ற எனது கணவரை மீட்டுத்தாருங்கள்.

★ எனது கணவரை விட்டுவிடுமாறு கெஞ்சிக் கொண்டு இராணுவ ஜீப்பின் பின்னால் கதறியபடி ஓடினேன்.

மட்டக்களப்பில் விசாரணை நடத்திய கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு முன் சாட்சியம் அளித்த இளம் மனைவிமார் கதறிக் கதறி, கண்ணீர் மல்கி, மன்றாடி விடுத்த வேண்டுகோள்களில் இவையும் சில.

தங்கள் குடும்பத் தலைவர்களையும் பிரிந்து அவர்களுக்கு நேர்ந்த கதியை அல்லும் பகலும் அனவரதமும், வினாடிக்கு வினாடி நினைந்து நினைந்து உருகி, ஊன் இன்றி உறக்கம் கெட்டு, அவலைகளாகி இளம் பிஞ்சுகளுடன் அல்லாடும் அந்தரிக்கும் நிலையில் மனம் வெடித்து வெதும்பி அவர்கள் விடுத்த வேண்டுகோள் இவை.

கண்ணீரும் கம்பலையுமாக இந்தக் கோரிக்கைகளை யார் யார் விடுத்தார்கள் என்ற விவரங்களை நேற்றைய உதயனில் நீங்கள் படித்திருப்பீர்கள்.

இந்தப் பெண்களின் கணவர்கள் அனைவரும் இராணுவத்தினரால் பிடித்துச் செல்லப்பட்டவர்கள். தமது கணவர்மாரை இராணுவம் பிடித்துச் சென்றதை கண்ணால் கண்டவர்கள். இராணுவத்தினரின் மனித நேயமற்ற செயலால் வாழ்வு குலைந்து நிற்பவர்கள்.

இராணுவத்தினரால் கடத்தப்பட்ட தமது கணவரான மட்டக்களப்பு மாநகரசபை உறுப்பினரை விடுவிக்காவிட்டால் தனது பிள்ளைகளுடன் தீக்குளித்து உயிரை விடப் போவதாக திருமதி சகாயமணிமேரி ஜோசப் ஆணைக்குழுவினரிடம் தெரிவித்தார். இத்தகைய வாக்குமூலம் வெறும் "மிரட்டல்" என்று ஆணைக்குழு கருதுகிறதோ என்னவோ...

ஆனால் அந்தப் பெண்ணுக்கு ஏற்பட்டிருக்கும் உளவியல் தாக்கம், அவர் கூறியதை செயலாக்கத் தூண்டும் என்பது உளவியல்.

மட்டக்களப்பில் நடத்தப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவில் மூன்று இளம் மனைவிமார்களும் வெளி யிட்டதைப் போன்ற தவிப்பும் வாழ்க்கைக் கஷ்டங்களும், உச்சத்தை எட்டிய மனநலம் பாதிப்பும் உள்ள தமிழ்ப் பெண்கள் ஆயிரக்கணக்கில் உள்ளனர். குறிப்பிட்ட மூன்று மனைவிமார்களின் சாட்சியங்கள் அந்தந்த வயதைச் சார்ந்த பெண்களின் திக்கற்ற நிலைக்கு உதாரணங்கள்.

ஆனால் அவர்களை இந்த நிலைக்கு ஆளாக்கிய இராணுவத்தினர்- அரசாங்கத்தினர்- ஊடாக விடுவிக்க ஆணைக்குழுவுக்கு அதிகாரம் அல்லது அனுமதி கிடைக்குமா என் பது சந்தேகமே.

வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் நல்லிணக்க ஆணைக்குழு முன் எத்தனையோ தாய்மாரும் இளம்மனைவியரும் தமது பிள்ளைகள், கணவர்மார் எங்கிருக் கிறார்கள் என்பதே தெரியாது தவிப்பதாகக் கண்ணீர் வடித்தார்கள். சம்பந்தப்பட்டவர்கள் எங்கிருக்கிறார்கள் என்பதை அறியும் பொருட்டு தடுப்பு முகாம்கள், சிறைச்சாலைக ளுக்கும் சென்று விவரம் தெரிவித்து உதவுவதாக ஆணைக்குழு தரப்பில் அப்போது கூறப்பட்டது.

ஆனால் நல்லிணக்க ஆணைக்குழு தரப்பில் இருந்து இது வரை சாதகமான தகவல் எதுவும் வெளியிடப்பட்டதாக இல்லை

இராணுவத்தினரால் கடத்திச் செல்லப்பட்டவர்கள், கூட்டிச்செல்லப்பட்டவர்கள் மற்றும் காணாமற் போனவர்கள் குறித்து நடவடிக்கை எடுப்பதற்கோ அல்லது உதவுவதற்கோ ஆணைக்குழுவுக்கு உரிய அதிகாரம்வழங்கப்பட்டிருப்பதாக உறுதி செய்யப்பட்ட தகவல் எதுவம் இல்லை. வழமை போன்று விசாரணைகளை நடத்தி, தமது சிபார்சுகளுடன் அறிக்கை சமர்ப்பிப்பதே இந்த ஆணைக்குழுவின் பணியாக இருக்கும்.

ஆனால் காணாமற்போனவர்கள், பிடித்துச் செல்லப்பட்டவர்கள், கைதானவர்கள் நிலையை மனித நேயத்துடனும் மனிதாபிமானத்துடனும் நோக்குப்போக்கு எதனையும் அரசாங்கத்திடம் எதிர்பார்க்க முடியாத நிலை - ஒரு வகை பழி தீர்க்கும் நோக்கு - தெளிவாகப் புலப்படுகிறது.

மொத்தத்தில், வன்னிப் போரில் இறுதிக் கட்டத்தில் நடைபெற்றதாக சொல்லப்படும் மனித உரிமை மீறல்கள் உட்பட போர்க் குற்றங்களுக்கு பொறுப்புக் கூறும் 'ஆபத்தில் இருந்து' தப்பிக் கொள்வதற்காக நியமிக்கப்பட்டதே நல்லிணக்க ஆணைக்குழு என்ற வாதம் உண்மையாகிக்கொண்டிருக்கிறது.

அந்த நோக்கத்துடன் ஆணைக்குழு நியமிக்கப்படவில்லை. எதிர்கால நலன்கள் மற்றும் நல்லிணக்கத்தை கரு தியே அது உருவாக்கப்பட்டது என்பதை நிரூபிப்பதற்கு தமிழ் மாவட்டங்களில் இராணுவத்தினரின் நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டு ஏதிலிகளாக, வாழ்க்கையே வெறுமையாகி அவலப்படும் மக்களுக்கு உதவுவதற்கான வசதிகளை, அதிகாரங்களை வழங்க வேண்டும். இதுவரை ஏற்பட்ட கசப்புணர்வுகள் களையப்படு வதற்கும், பாதிக்கப்பட்டவர்கள் நிவாரணம் பெறு வதற்கும் அது உதவும்.

உளவியல் கருத்தியல் மட்டத்திலாவது நல்லிணக்கத்துக்கான அத்திவாரமாகவும் அமையும். இது குறித்து மனவிருப்பத்துடன் அரசு பரிசீலனை செய்யுமா?

# பொன்சேகாவை விடுவிக்க சபையில் ரணில் எதிர்க்கட்சிசார்பில் கோரிக்கை

*நேற்று 10.10.2010 ஆம் திகதி 'சண்டே ரைம்ஸ்' எழுதியிருந்த அரசியல் விமரிசனத்திலிருந்து ஒரு பகுதி இது.*

முன்னாள் இராணுவத் தளபதி - போர்வீரர் இன்று ஒரு குற்றவாளி. அவருக்கு விதிக்கப்பட்ட 30 மாத சிறைத் தண்டனையில் ஏற்கனவே 23 நாள்களை சிறையில் கழித்துவிட்டார்.

ஐ.தே.கட்சியின் உள்விவகாரங்கள் என்னவாக இருந்தாலும் சரத் பொன்சேகா தொடர்பான பிரச்சினையைத் தானே தன் வழியில் முன்னெடுப்பதற்கு அக்கட்சி முடிவு செய்துள்ளது. கடந்த திங்கட்கிழமை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு அவசரமாக ஒரு கடிதத்தை அனுப்பி வைத்தார். அக் கடிதத்தில் காணப்பட்ட முக்கிய அம்சங்கள் வருமாறு:

பொலன்னறுவையில் நீங்கள் மகா சங்கத்தினரை சந்தித்தபோது முறைப்படி விண்ணப்பம் செய்யப்பட்டால் நீங்கள் அதில் கவனம் செலுத்துவீர்கள் என்று கூறியதாக தெரியவந்துள்ளது.

ஜெனரல் பொன்சேகா நாடாளுமன்றத்தின் ஓர் உறுப்பினர். தற்போது எதிர்க்கட்சியில் அமர்ந்திருக்கும் ஓர் உறுப்பினரும் ஆவார். எனவே அவர் குற்றவாளியாகக் காணப்பட்டுத் தீர்ப்பு வழங்கப்பட்டிருப்பது தொடர்பாக இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிப்பது எனது கடமை என்று கருதுகின்றேன்.

நீங்கள் நன்றாக அறிவீர்கள் சரத் பொன்சேகா நாடாளுமன்ற உறுப்பினர், ராணுவத்தின் தளபதியாக இருந்து கௌரவமாகவும் சிறப்பாகவும் இந்த நாட்டுக்குப் பணியாற்றியுள்ளார் என்பதை. தமிழீழ விடுதலைப் புலிகளைத் தோற்கடிப்பதற்குப் பொறுப்பாக இருந்தவர். அவர் புலிகளை துணிவோடும் மனோபலத்துடனும் எதிர்த்து நின்றது மட்டுமல்ல. தாய் நாட்டின் பணிக்காக தமது உயிரையே வழங்கும் நிலைக்கு அவர் சென்றிருந்தார். இதற்காக அவர் தமது சிறப்பான சேவையின் நிமித்தம் இராணுவவிருதுகள்சூட்டிக் கௌரவிக்கப்பட்டார். அதனை எந்த ஒருநபரும் இதுவரை எதிர்த்தது இல்லை.

எதிர்த்தரப்பில் இருக்கும் நாம் நாட்டுக்காக அவர் செய்துள்ள சேவைகளின் நிமித்தம் சிறையில் வாடக் கூடாது என்று கருதுகின்றோம்.

இந்தச் செயற்பாடுகள் நீதியானவையாக இருக்க முடியாது என்று நாம் நம்புகின்றோம். எனவே, எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சார்பில் விண்ணப்பித்துக் கொள்வது என்னவென்றால் இராணுவச் சட்டத்தில் உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி அவர் மீதான தீர்ப்பினை முழுமை யாக கைவிடுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் தமது கடிதத்தில் தெரிவித்திருந்தார்.

அரசமைப்பின் அத்தியாயம் 34(1)இன் கீழ் ஜனாதிபதியானவர் குற்றவாளியாகக் காணப்பட்ட ஒருவருக்கு மன்னிப்பு வழங்கலாம். விடுதலை செய்யலாம். அல்லது சட்டப்படியான நிபந்தனைக்கு உட்படுத்தலாம். குறித்த தண்டனையின் கடுமையை குறைக்கலாம். முழு தண்டனையையும் நீக்கி விடலாம். அல்லது தண்டனையின் ஒரு பகுதியை மட்டும் நீக்கிவிடலாம்.

விக்கிரம சிங்கா ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்துக்கு உடனடியாகவே பலன் கிடைத்தது. ஜனாதிபதி செயலாளர் நாவுபெல் அப்துல் ரகுமான் எதிர்க்கட்சித் தலைவரை டெலிபோனில் அழைத்து பொன்சேகாவின் சம்மதத்துடன் தானா எதிர்க்கட்சித் தலைவர் அக்கடிதத்தை அனுப்பியிருந்தார் என்பதைப் பற்றி வினவினார். அதுபற்றி பொன்சேகாவுக்கு அறிவிக்கப் பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

செவ்வாய்க்கிழமையன்று நாடாமன்றத்தில் விக்கிரமசிங்க தாம் ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்தை வாசித்துக் காட்டினார். அன்று மாலையில் வெலிக்கடைச் சிறையில் பொன்சேகாவை சந்திப்பதற்கு விக்கிரமசிங்க சென்றிருந்தார். சிறை அதிகாரியால் அவர் ஓர் அறைக்கு அழைத்துச்செல்லப்பட்டார். அங்கே முன்னாள் இராணுவ தளபதி கைதிகளின் உடையில் விக்கிரமசிங்கவை சந்திக்க வந்தார்.

'இதுதான் என்து சீருடை' என்று குறிப்பிட்டார் பொன்சேகா. இருவரும் பொன்சேகாவின் உணவு பற்றி உரையாடினார்கள். 2006 ஆம் ஆண்டு இராணுவத் தலைமையகத்தில் தற்கொலைக் குண்டுதாரியின் தாக்குதலுக்கு உள்ளானதன் காரணமாக காயங்களின் நிமித்தம் அவர் விசேஷ உணவினை அருந்தி வருகிறார்.

உரையாடல் பற்றி விக்கிரமசிங்க பின் வரும் தகவல்களை வெளியிட்டார்.

உரையாடலின் போது நான் எழுதிய கடிதத்தை அவருக்கு வாசித்துக் காட்டினேன். அவர் தலையசைத்து சம்மதத்தை தெரிவித்தார் என்றார்.

ஜனநாயக தேசிய கூட்டமைப்பில் ஓர் அங்கமான மக்கள் விடுதலை முன்னணி விக்கிரமசிங்க தங்களுடன் கலந்தாலோசியாமல் கடிதம் எழுதியமை தொடர்பாக திருப்தியடைய

### ஜே.வி.பி. தனியாக போராடத் தீர்மானம்

வில்லை. பொன்சேகாவை விடுதலை செய்யுமாறு கேட்டு எழுதுவதற்கு முன் எம்முடன் பேசாது விட்ட விக்கிரமசிங்கவின் செயற்பாடு சரியில்லை என்று ஜே.வி.பி. கம்பஹா தொகுதி உறுப்பினர் விஜித்த ஹேரத் கூறினார்.

பொன்சேகாவின் மனைவி அனோமா இது பற்றிக் கூறுகையில்; எதிர்க்கட்சித் தலைவர் சிறையில் சென்று எனது கணவரைச் சந்தித்த போது ஜனாதிபதிக்கு தாம் கடிதம் அனுப்பியிருப்பது பற்றிக் கூறியிருக்கிறார். அதுவரைக்கு அது பற்றி அவர் தெரிந்திருக்கவில்லை.

வெள்ளிக்கிழமை அவரை நான் போய்ப் பார்த்தபோது நானோ அல்லது எனது புதல்விகளோ மன்னிப்புக் கோரறால் அதற்கான கோரிக்கை பொன் சேகாவிடம் இருந்து வரவேண்டும் என்பதே.

கடந்தவாரம் அமைச்சரவைக் கூட்டத்தில் பேசிய ஜனாதிபதி ஆர்ப்பாட்டங்களால் பயனில்லை. அவைகள் பற்றி எனக்கு கவலையில்லை. மன்னிப்பு வழங்கப்பட வேண்டுமானால் அது நேரடியாக பொன்சேகாவிடமிருந்து வரவேண்டும் என்று கூறினார். அவர் மேலும் கூறுகையில் எனது அரசியல் எதிரிகள் மீது நான் பழிவாங்கமாட்டேன். நான் அவ்வாறு செய்வதானால் இங்கே அமர்ந்துள்ள அமைச்சர் ஒருவர் இங்கே இருக்கமாட்டார். அவருடைய சகோதரி கோயில்கள் தோறும் சென்று தெய்வங்களின் சாபம் எனக்கு ஏற்பட வேண்டுமென்பதற்காக தேங்காய்கள் உடைத்திருக்கிறார். அவர் பொன்சேகாவின் தீவிர ஆதரவாளர். ஆனால் அந்த அமைச்சர் மீது நான் பழிதீர்க்கவில்லை. தேங்காய் உடைத்தவரின் நிழல்படங்கள் என்னிடமிருக்கின்றன என்று கூறினார்.

கடந்த வியாழக்கிழமை ஊடக அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல செய்தியாளர்களிடம் பேசும்போது பொன்சேகா விடுதலையாவதை அவர் மனைவியும் இரு புதல்விகளும் விரும்பவில்லை போல் தெரிகின்றது. மன்னிப்புத் தேவையெனில் அது சரியான முறையில் இவர்களில் ஒருவரிடமிருந்துதான் ஜனாதிபதிக்கு கோரிக்கை வரவேண்டும் என்பது அவர்களுக்குத் தெரியும் என்று கூறினார். அவர் மேலும் கூறுகையில் சந்திரிகா பண்டாரநாயக குமாரதுங்க ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தனவிடம் தனது கணவரை விடுவிக்கக்கோரி பத்து பன்னிரண்டு தடவைகள் சென்றிருந்தார் என்று கூறினார். ஆனால் அமைச்சரின் கருத்துத் தவறானது என்று திருமதி சந்திரிகா பின்னர் அக்கூற்றை மறுத்திருந்தார். எனது கணவரை விடுவிக்குமாறு நான் ஒருபோதும் மன்னிப்பு கோர வில்லை என்று கூறிய அவர் மேலும் கூறுகையில் ஒருதினம் அப்போதைய ஜனாதி பதியின் செயலாளர் மெனிக்டிவெல தொலைபேசியில் தொடர்பு கொண்டு சந்திப்பு ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக கூறினார். முதலில் விரும்பாவிட்டாலும் பின்னர் என் சகோதரி சுனேத்திராவுடன் முன்னாள் ஜனாதிபதி ஜயவர்த்தனவை போய்ப்பார்த்தேன். அவர் மிக நட்புடன் பேசினார். என் கணவரின் கைது பற்றி கேட்டேன். இரண்டு தினங்களில் விஜே விடுதலை செய்யப்படுவார் என்று அவர் கூறினார். அவரிடம்

### இன்று கொழும்பில் ஆர்ப்பாட்டம்

லாகாது, ஏனென்றால் தாம் எந்தக் குற்றமும் இழைக்கவில்லை என்று எனது கணவர் என்னிடம் கூறினார்- என்றார்.

இதிலிருந்து விக்கிரமசிங்கவின் செயலை ஜனநாயக தேசிய கூட்டணியோ ஜே.வி.பியோ ஆதரிக்கவில்லை என்று தெரிகின்றது. ஜே.வி.பி. ஹேரத் மற்றும் அனோமா ஆகியவர்களின் கருத்துக்களை வைத்துக் கொண்டு பார்க்கையில் இந்த கால கட்டத்தில் மன்னிப்புக் கோருவதானது பொன்சேகா மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை ஏற்றுக் கொள்வதாக இருக்கும். முன்னாள் இராணுவத் தளபதி தம்மை விசாரணை செய்த இரண்டு இராணுவ நீதிமன்றங்களையும் அவைகளுக்கு முன் கூறப்பட்ட குற்றச்சாட்டுக்களையும் தாம் அங்கீகரிக்கவில்லை என்றவாறு ஒரு நிலைப்பாட்டை அவர் மேற் கொண்டு வருகின்றார். அவருடைய சட்டவல்லுநர்களும் பொது இராணுவ நீதிமன்றத்தை அங்கீகரிக்கவில்லை என்ற நிலைப்பாட்டையே எடுத்துள்ளனர். இம்மாதிரியான ஒரு நிலைப்பாட்டை எடுத்ததன் பின்னர் எந்த வகையிலும் மன்னிப்புக் கோருவதானது இராணுவ நீதிமன்றத்துக்கும் அதன் முன்தாக்கலான குற்றச்சாட்டுகளுக்கும் அளிக்கப்பட்ட தீர்ப்புத் தண்டனைக்கும் சட்ட ரீதியான அங்கீகாரத்தை வழங்குவதாக அமைந்துவிடும் என்று ஜே.வி.பியினர் கருதுகின்றார்கள். அதனால்தான் அவர்கள் நீதிமன்றத்துக்குச் சென்று வாதிட விரும்புகிறார்கள்.

கடந்தவாரம் இடம்பெற்ற சம்பவங்களையெல்லாம் பார்க்கையில் பொன்சேகாவை விடுதலை செய்வதற்கான கதவுகளை அரசு முற்றாக மூடி விடவில்லையென்பது தெரியவருகிறது. ஒரேயொரு நிபந்தனை என்னவென் மன்னிப்புக் கோரவுமில்லை. சந்திப்புக்கு கேட்டதுமில்லை என்றார். அவர் மேலும் கூறினார்; பொன்சேகாவுக்கு வழங்கப்பட்டுள்ள தண்டனை அவர் செய்திருப்பதாகக் கூறப்படுபவையைவிட மிகக் கடுமையானவை. அவர் படைகளை வெற்றியை நோக்கி நடத்தினார். முழு நாடும் அவருக்குக் கடமைப்பட்டிருக்கிறது என்றார். ஜனாதிபதி அவருக்கு எவரும் விண்ணப்பிக்கும் வரை காத்திராமல் மன்னிப்பு வழங்க வேண்டும். தமது கணவர் விடயத்தில் ஜயவர்த்தன தவறு இழைத்திருந்த போதிலும் தாம் பதவிக்கு வந்ததும் எதுவித பகையும் பாராட்டவில்லை. ஒருமுன்னாள் ஜனாதிபதி என்ற முறையில் அவருக்குரிய வசதிகள் மரியாதைகள் அனைத்தையுமே தாம் வழங்கினார் என்றும் பழிவாங்கவில்லை என்றும் கூறினார்.

இன்றைய தினம் கொழும்பில் பொன்சேகா சார்பில் மிகப்பெரிய ஆர்ப்பாட்டப் பேரணிகளை நடத்த ஜே.வி.பி.

**தமிழில்: கோகுலன்**

திட்டமிட்டிருக்கின்றது.பெரும் எண்ணிக்கையில் ஆர்ப்பாட்டக்காரர்கள் காம்பெல் பூங்காவில் கூடுவார்கள். பின்னர் அருகிலுள்ள சிறைச்சாலையை நோக்கி புறப்படுவார்கள் என்றும் எதிர்பார்க்கப்பகின்றது.

ஐ.தே.கட்சி பௌத்தாலயங்களில் 'செத்பிரித்' ஓதும் நிகழ்ச்சிகளை நடத்த திட்மிட்டிருக்கின்றது. பொன்சேகாவை விடுவிப்பதற்காகவும் 18 ஆவது அரசமைப்பு திருத்தத்துக்கு எதிராகவும் இந்த சமய நிகழ்ச்சிகள் முன்னெடுக்கப்பட விருக்கின்றன. டிசெம்பர் மாதம் மகாசங்கத்தினருக்கு தானம் வழங்கும் நிகழ்ச்சியொன்றும் முன்னெடுக்கப்பட இருக்கின்றது. ✱

## நாளை

| | |
|---|---|
| புரட்டாதி 26 | 12.10.2010 செவ்வாய்க்கிழமை |
| திதி: | : பஞ்சமி மாலை 06.06 வரை |
| நட்சத்திரம் | : கேட்டை பி.இ. 03.53 வரை |
| சுபநேரம் | : 10.32-12.02 வரை |
| ராகுகாலம் | : 03.02-04.32 வரை |



யாழ்.புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயத்தின் வருடாந்த ஆங்கில தினவிழா கடந்தமாத இறுதியில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நிகழ்வில் பல்கலைக்கழக வணிக முகாமைத்துவப் பீடாதிபதி போராசிரியர் க.தேவராஜா மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதையும் வித்தியாலயத்தின் முன்னாள் அதிபர் அருட் சகோதரி ஜெரோம், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.பல்கலைக்கழக ஆங்கிலத்துறை முதுநிலை விரிவுரையாளர் வி.பரந்தாமன், பாடசாலையின் அதிபர் அருட்சகோதரி ம.ஜீவந்தி ஆகியோர் நிகழ்வுகளைப் பார்வையிடுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்: 121)

# சட்ட விரோதமாக குடியேறுபவர்களைத் தடுக்க நான்கு நாடுகளை இணைத்து மத்திய நிலையம்

## அவுஸ்திரேலியா அதிகாரிகள் திட்டம்

கொழும்பு,ஒக். 11

சட்டவிரோதமாக குடியேறுபவர்களைத் தடுப்பதற்கு நான்கு நாடுகளை உள்ளடக்கி மத்திய நிலையம் ஒன்றை அமைப்பது தொடர்பாக அவுஸ்திரேலிய அதிகாரிகள் கவனம் செலுத்தி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியா, இந்தோனேஷியா, மலேஷியா மற்றும் கிழக்குத் திமோர் ஆகிய நாடுகளை உள்ளடக்கும் வகையில் இந்த மத்திய நிலையம் அமைக்கப்படவுள்ளதாகவும் அவுஸ்திரேலிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சட்டவிரோதக் குடியேற்ற வாசிகளைத் தடுக்கும் பிராந்தியமாக குறிப்பிட்ட நான்கு நாடுகளையும் இணைப்பதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

இதனையடுத்து குறிப்பிட்ட நாடுகளில் பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டதுடன் அவுஸ்திரேலியாவில் சட்டவிரோதக் குடியேற்ற வாசிகள் தொடர்பான பிரச்சினை அரசியல் செயற்பாடுகளில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதேவேளை - கனடா நாட்டிலுள்ள குடிவரவுச் சட்டத்தை மேலும் கடுமையாக்குவதற்குத் திட்டமிட்டுள்ளதாக நேற்று முன்தினம் கனேடிய பிரதமர் தெரிவித்துள்ளார். (ற)

# ஒலிபெருக்கிப் பாவனைத் தடை உத்தரவில் சில விதிகளைத் தளர்த்தியது உயர்நீதிமன்றம்

ஒலி பெருக்கிச் சாதனங்கள் பயன்படுத்துவது தொடர்பாக விதிக்கப்பட்டிருந்த தடையில் சில தளர்வுகள் செய்யப்பட்டுள்ளது. இதன்படி சனிக்கிழமைகளில் அதிகாலை 1மணி வரையிலும் ஞாயிறு தினங்களில்12.30 வரையிலும் ஒலிபெருக்கிச் சாதனங்களைப் பயன்படுத்த உயர் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

திறந்தவெளி இசைநிகழ்ச்சிகளை நடத்தும் இசைக் கலைஞர்கள் சங்கத்தின் மூலம் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுவொன்றைக் கவனத்தில் கொண்டே உயர் நீதியரசர் அசோக் டி சில்வா, ஷிராணிதிலகவர்தன மற்றும் சந்திரா ஏகநாயக்க ஆகிய நீதிபதிகள் அடங்கிய குழு அனுமதியை வழங்கியுள்ளது.

திறந்த வெளி இசை நிகழ்ச்சிகளை நடத்துவதன் மூலம் வாழ்க்கையை ஓட்டும் இசைக்கலைஞர்களுக்கு தற்போது நடைமுறையில் உள்ள ஒலி பெருக்கிப் பாவனைத் தடை பெரும் அநீதிகளை விளைவிப்பதாகவும்,அது தொடர்பான நிவாரணமொன்றைப் பெற்று தருமாறு அந்த மனுவில் கோரிக்கை விடப்பட்டிருந்து.

குறித்த உத்தரவில் தளர்வுகள் செய்யப்பட்டாலும் வார நாள்களில் இரவு 10.00 மணி வரையில் மட்டுமே ஒலிபெருக்கிச் சாதனங்களைப் பயன்படுத்த முடியுமென்ற கட்டுப்பாடு அவ்விதமே நடைமுறையில் இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-206)


## உத்தியோக பூர்வ முடிவுகள்

சுப்பிரி வாசனா சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் 570

திகதி 2010/10/09

சுப்பர் இலக்கம் 16

வெல்லப்பட்ட இலக்கங்கள் 18 40 42 64

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றிபெற்றவர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் நான்கு இலக்கங்கள் சரியாயின் | ரூ. 31,667,117.60 வீகிதம் | — |
| முதலாம் பரிசு | நான்கு இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 1,000,000.00 வீகிதம் | 01 |
| இரண்டாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏதேனும் 3 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 50,000.00 வீகிதம் | 12 |
| மூன்றாம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 2,000.00 வீகிதம் | 285 |
| நான்காம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏதேனும் 2 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 1,000.00 வீகிதம் | 571 |
| ஐந்தாம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 100.00 வீகிதம் | 14,220 |
| ஆறாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏதேனும் 1 இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 40.00 வீகிதம் | 8,210 |
| ஏழாம் பரிசு | 1 இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 20.00 வீகிதம் | 205,565 |
| எட்டாவது பரிசு | சுப்பர் இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 20.00 வீகிதம் | 32,887 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள பரிசு தொகை ரூ. 9,260,440.00

சுப்பர் பரிசு சொகுசு ஜீப் வண்டியுடன் மிகுதி தொகை பணமாக

அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசு ரூ. 32,038,217.60

தேசிய லொத்தர் சபை

www.nlb.lk



# 13.10.2010 முதல் கொழும்பு வலம் வெளிவருகிறது

மாணவர்களுக்காக சுடர் ஒளி கல்விச்சுடர் நடத்தும் மாவட்ட வலம் - 2010

O/L

கொழும்பு வலம்

தேசிய ரீதியில் புகழ்பெற்ற சுடர் ஒளி கல்விச்சுடர் வளவாளர்களின் சேவையை வீட்டில் இருந்தவாறே பெற்றுக்கொள்வதற்கு ஓர் அரிய வாய்ப்பு!

நாளை மறுதினம் முதல் வெளிவரவுள்ள கொழும்பு மாவட்ட வலத்தில் இடம்பெறுபவை:

## ஆங்கிலம்

திரு.எம்.பி.ஜோன்சன்

பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி

வெளிவரும் திகதி: 13.10.2010

## தமிழ்மொழி

திரு.பா.ஜெயராஜ்

A,C,A கல்வி நிலையம்

வெளிவரும் திகதி: 14.10.2010

## வரலாறு

திரு.வி.முரளி

பிறிலியன்ட் கல்வி நிலையம்

வெளிவரும் திகதி: 15.10.2010

## விஞ்ஞானம்

திரு.கே.கே.உதயகுமார், பிறிலியன்ட் கல்வி நிலையம்

திரு.எஸ்.ரீ.ஜனார்த்தனன் (பகுதி II)

வெளிவரும் திகதி: 16.10.2010

## கணிதம்

திரு.எஸ்.சுந்தரலிங்கம்

றோயல் கல்லூரி வெளிவரும் திகதி: 18.10.2010

பெற்றோர்களே, மாணவர்களே!

உங்கள் பிரதிகளைப் பெற்றுக்கொள்ள அருகிலுள்ள "சுடர் ஒளி, உதயன்" முகவரிடம் இன்றே முற்பதிவு செய்துகொள்ளவும். இம்முகவர்கள் மூலம் உங்களுக்குப் பிரதிகள் கிடைப்பதை உறுதி செய்துகொள்ளவும்.




அல்வாய் வடமத்தி

# அருள்மிகு குமுதெணிப் பிள்ளையார் தேவஸ்தான

தோரண வாயில் மணிமண்டப உபகரிப்பும்

நவரத்தினராசா ஸ்தாமலர் அவர்களின் சிரார்த்த திதி

## அழைப்பு விஞ்ஞாபனம்



நிகழும் மங்களகரமான விகிர்தி வருடம் புரட்டாதித் திங்கள் 25ஆம் நாள் (11.10.2010)திங்கட்கிழமை சதுர்த்தித் திதி கூடியவேளை, மேற்படி வைபவம் முற்பகல் 11 மணி தொடக்கம் நடைபெற இருப்பதால் அத்தருணம் அன்பர்கள், அடியார்கள் வருகைதந்து இறையருள் பெற்று ஏகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

## நிகழ்ச்சிகள்

01. விஷேட பூசை
02. தோரண வாயில் மணிமண்டப நுழைவு
03. பெயர்ப்பலகை திரைநீக்கம்
04. நினைவுரைகளும் மண்டபச் சிறப்புரைகளும்

விசேட உரையாளர்கள்

கலாநிதி த.கலாமணி

(சிரேஷ்ட விரிவுரையாளர்- கல்வியியல்துறை யாழ்.பல்கலைக்கழகம்)

திரு இரா.இராஜேஸ்கண்ணன்

(விரிவுரையாளர்- சமூகவியல்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)

05. தோரண வாயில் மணிமண்டப சிறப்பு மலர் வெளியீடு
06. நன்றி உரை
07. மகேஸ்வர பூசை

ஆலயத் தொண்டரும் மணிமண்டப உபகரிப்பாளரும், கணபதிப்பிள்ளை நவரத்தினராசா (ரவி) குடும்பம்.

(சி/571829)

# இரணைமடுவுக்கு மகாவலி நீர் வடக்கில் தமிழர் நிலம் பறிபோகும்

## அச்சம் தெரிவிக்கின்றனர் புத்திஜீவிகள்

யாழ்ப்பாணம்,ஒக்.11

இரணைமடுக்குளத்துக்கு மொறகஸ்கந்த நீர்த்தேக்கத்திலிருந்து மகாவலி கங்கை நீரைப் பெற்றுக் கொடுக்கவுள்ள திட்டத்தின் பின்னணியில் வடபகுதி மக்களின் நிலங்கள் பறிபோகும் அபாயம் ஏற்படலாம் என தமிழ் மக்கள் மத்தியில் சந்தேகம் எழுந்துள்ளது.

அண்மையில் இரணைமடுக்குளப் பகுதிக்கு விஜயம் செய்த நீர்ப்பாசன மற்றும் நீர்வள முகாமைத்துவப் பிரதி அமைச்சர் எச்.எம். சந்திரசேனவினாலேயே இந்தத் திட்டம் குறித்து அறிவிக்கப்பட்டிருந்தது.

அதனைப் பல்வேறு ஊடகங்களும் செய்தியாக வெளியிட்டிருந்தன. இந்தத் திட்டம் தொடர்பிலே வடபகுதி தமிழ் மக்களிடையே பெரும் சந்தேகம் எழுந்துள்ளது.

யாழ். மாநகர சபை முன்னாள் ஆணையாளரும், தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளருமான சீ.வி.கே.சிவஞானம் இது குறித்துக் கருத்துக் கூறும் போது-

மக்களுக்குப் பயனளிக்கக் கூடிய திட்டங்கள் அமுல்படுத்தப்படும் போது அதனை ஒத்துழைத்து வரவேற்க வேண்டும். இந்த நாட்டிலுள்ள ஒரு பகுதி மக்களின் நலனில் மாத்திரம் அக்கறை கொண்டு, ஏனைய மக்களின் நலனைக் கருத்திலெடுக்காது அமுல்படுத்த நினைக்கும் திட்டங்கள் ஆரம்பத்திலேயே தடுத்து நிறுத்தப்படவேண்டும். மகாவலி கங்கை நீரை இரணைமடுக்குளத்துக்கு கொண்டு வரவுள்ள திட்டத்தின் பின்னணியில் வடபகுதி நிலங்களில் தமிழ் மக்கள் அல்லாதோர் குடியேற்றுவதற்கான சாத்தியங்கள் அதிகமாக உள்ளன. இது குறித்து வடபகுதித் தமிழ் மக்கள் அச்சம் கொண்டுள்ளனர்.

மகாவலி கங்கை நீரை இரணைமடு குளத்துக்கு வழங்குவதன் மூலம் அத்திட்டத்தை மகாவலி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரத்துக்குக் கீழ் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அதன் மூலம் வட மாகாண சபைக்குள்ள அதிகாரங்களான நீர்ப்பாசனம், காணி, விவசாயம் என்பன பறிபோகும் அபாயம் ஏற்படும். அத்துடன் மகாவலி அபிவிருத்தி அதிகார சபையானது மத்திய அரசின் ஆதிக்கத்துக்கு உட்பட்டதாகும். அது வடபகுதியில் உள்ள மக்களின் நலனில் எந்தளவுக்கு அக்கறைகொள்ளுமென்று தெரியவில்லை.

அநுராதபுரத்துக்குச் செல்லும் மகாவலி கங்கை நீரின் அளவு போதுமானதாக இல்லை என அந்தப் பகுதி மக்களே விசனம் தெரிவிக்கும் நிலையில் அதனை இரணைமடு குளத்துக்குக் கொண்டு வருவது எந்தளவுக்கு சாத்தியமாகும். இதன் காரணமாகவே வடபகுதித் தமிழ் மக்களிடையே பல்வேறு சந்தேகங்கள் தோன்றியுள்ளன- என்றார்.

பெயர்குறிப்பிட விரும்பாத-தமிழ் மக்களின் அரசியல் நலனில் அக்கறை கொண்ட- மருத்துவர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்-

வடபகுதியில் சிங்கள மக்களைக் குடியமர்த்துவதற்கு பல்வேறு திட்டங்கள் திரை மறைவில் அரங்கேறி வருகின்றன.

அதன் அங்கமே மகாவலி கங்கை நீரை வடபகுதிக்குக் கொண்டு வரும் திட்டமாகும். இது தமிழ் மக்களுக்கும் தெளிவாகப் புரிந்துள்ளது.

நாட்டில் பசுமைப்புரட்சி ஏற்படுத்தவென ஆரம்பிக்கப்பட்ட இந்த மகாவலித்திட்டம் உரிய இலக்கை இதுவரை அடையவில்லை.

எனினும் வடபகுதிக்கு நீரை அனுப்புவதன் மூலம் வடபகுதியை இரு கூறாக்குவதே அரசின் திட்டமாகும். அவ்வாறு இருகூறாக்கிவிட்டு நடுவே சிங்கள குடும்பங் களைக் குடியமர்த்தவும் அரசு திட்டமிட்டுள்ளது. இந்த மகா வலி நீரை வடபகுதிக்கு அனுப்பு வதன் மூலம் வடபகுதித் தமிழ் மக்களுக்கு எந்த வித நன்மையும் கிடைக்கப் போவதில்லை- என்றார். (எ-14)



பலாலி படைத் தலைமையகத்தின் ஏற்பாட்டில் கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நவராத்திரி பூஜையின் போது எடுக்கப்பட்ட படம்.

குருக்களின் அருகில் யாழ். படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துரு சிங்க வேட்டியுடன் அமர்ந்திருக்கிறார். (ஒ-86)




# காசநோய் ஆலோசனைக் குழுவின் உறுப்பினராக தமிழ் வைத்தியர் தெரிவு

யாழ்ப்பாணம்,ஒக்.11

காசநோய்த் தடுப்பு மற்றும் மார்பு நோய்களுக்குமான தேசிய செயல் திட்டத்தின் நடப்பாண்டு ஆலோசனைக் குழு உறுப்பினராக தமிழ் வைத்தியர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

யாழ். மாவட்ட காசநோய்த் தடுப்பு பிரிவில் கடந்த 10 வருட காலமாக சேவையாற்றி வரும் வைத்திய கலாநிதி சி.எஸ். யமுனாநந்தாவே கொழும்பில் இடம்பெற்ற தெரிவுக் கூட் டத்தில் ஆலோசனைக் குழுவின் உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட தமிழ் வைத்தியராவார்.

தேசிய ரீதியாக 21 உறுப்பினர்களைக் கொண்டுள்ள இந்தக் குழுவில் இதுவரை கால மும் சிங்கள இனத்தைச் சேர்ந்த வைத்தியத் துறையை சேர்ந்தவர்களே தெரிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-14)

# இடம்பெயர்ந்தது தபால்பெட்டி ஆனைக்கோட்டை மக்கள் சிரமம்

யாழ்ப்பாணம்,ஒக்.11

மானிப்பாய் வீதி ஆனைக்கோட்டையிலிருந்து கொக்குவிலுக்குச் செல்லும் சந்தியில் நடப்பட்டிருந்த தபால்பெட்டி அங்கிருந்து பெயர்க்கப்பட்டு ஆனைக்கோட்டை உப அலுவலகத்துக்குச் சமீபமாக நடப்பட்டுள்ளது.

1957 ஆம் ஆண்டு முதல் இவ்விடத்தில் இருந்த குறித்த தபால் பெட்டி இடம்பெயர்ந்துள்ளதால், தபால்களை அனுப்புவதில் ஆனைக்கோட்டை மக்கள் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகக் கூறப்படுகின்றது.

இவ்வாறு தபால்பெட்டி நகர்த்தப்பட்டதை ஆட்சேபித்து ஆனைக்கோட்டை பாரதி சன சமூக நிலையத்தினர் தபால் மா அதிபருக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.(எ-100)

# மீளக்குடியமர்ந்தோர் இயல்பு வாழ்வுக்கு இராணுவம் வழங்குகின்றது உதவி

## நிறுவனங்களையும் முன்வருமாறு அழைக்கிறார் யாழ்.தளபதி

யாழ்ப்பாணம்,ஒக்.11

மீளக்குடியமர்ந்த மக்கள் தமது இயல்பு வாழ்க்கைக்கு மீளத் திரும்புவதற்கு என இலங்கை இராணுவம் பல்வேறு உதவிகளை வழங்கி வருகிறது. இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துரு சிங்க.

கடந்த கால யுத்தத்தின் போது பாதிக்கப்பட்ட வலுவிழந்த மக்களுக்கு சக்கர நாற்காலிகள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

யுத்தம் நிறைவடைந்துள்ள இன்றைய காலத்தில் மக்களுக்கு உதளவ நிறுவனங்கள் முன்வர வேண்டும்.

இதேவேளை-

கண்டியிலுள்ள ஊனமுற்றோர் சங்கம் யாழ்ப்பாண மக்களுக்கு உதவுவது பாராட்டத்தக்க விடயமாகும்.

யுத்தத்தின் போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு இலங்கை இராணுவமும் பல்வேறு உதவிகளை வழங்கி வருகிறது. குறிப்பாக வீட்டுத் திட்டத்தை வழங்கி வருகிறது. 52 ஆவது படைப் பிரிவு இது வரையும் வரணிப் பகுதியில் 600 வீடுகளை நிர்மாணித்து மக்களுக்கு வழங்கியுள்ளது. கடந்த கால கசப்பான அனுபவங்கள் மறந்து ஒன்றிணைந்து வாழ்வோம்- என்றார். (201-14)

# யுத்தம் பாதித்த மாற்று வலுவுள்ளோருக்கு கண்டி ஊனமுற்றோர் சங்கம் வீடுகள் கட்டித்தரும்

## முச்சக்கர வண்டி வழங்கும் நிகழ்வில் உரை

யாழ்ப்பாணம்,ஒக்.11

யுத்த காலத்தில் பாதிப்புகளை எதிர்கொண்டு உடல் அவயவங்களை இழந்து வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்து வரும் குடும்பங்களுக்கு வீடுகள் நிர்மாணித்து வழங்கும் திட்டத்தை யாழ்.மாவட்டத்தில் அமுல் படுத்தவுள்ளதாக கண்டியிலுள்ள ஊனமுற்றோர் சங்கத் தலைவர் சாமல் பீரிஸ் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்திலுள்ள வலுவிழந்த மக்களுக்கு சக்கர நாற்காலிகள் வழங்கும் நிகழ்வு கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

கண்டியிலுள்ள ஊனமுற்றோர் சங்கத்தின் அனுசரணையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் உரை நிகழ்த்தும் போதே சாமல் பீரிஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

எந்த மொழி பேசுபவர்கள் என்ற வித்தியாசமின்றி இந்த நாட்டிலுள்ள ஊனமுற்ற மக்களுக்கு எமது நிறுவனம் உதவி வருகிறது. அத்துடன் ஏனைய நிறுவனங்களுக்கு முன்மாதிரியாகச் செயற்பட்டு வருகிறது.

எமது நிறுவனம் வருடாந்தம் சுமார் 2 ஆயிரம் செயற்கைக் கால்களையும், நூறுக்கும் அதிகமான சக்கர நாற்காலிகளையும் பயனாளிகளுக்கு வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை-

இலங்கை இராணுவத்தினரின் ஒத்துழைப்பு இல்லாவிட்டால் இந்த நிகழ்வை நடத்தியிருக்க முடியாது- என்றார்.

மேற்படி நிகழ்வில் விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் உரை நிகழ்த்தும் போது பாதுகாப்புப் படையினர் வலுவிழந்த மக்களுக்கு மட்டுமன்றி மீளக்குடியமர்ந்த மக்களுக்கும் வாழ்வாதாரத் திட்டங்களை வழங்கி வருகின்றனர்.

எமது பிரதேசத்தை மீளக் கட்டியெழுப்ப பாதுகாப்பு படையினர் ஒத்துழைப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்குள்ளது. மீளக்குடியமர்ந்த மக்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்ப அவர்களது ஒத்துழைப்பை எதிர்பார்த்துள்ளோம்.

அதேபோல் யாழ். மாவட்டத்தில் 50- 60 வரையான அரச சார்பற்ற நிறுவனங்கள் உள்ள போதும் கண்டியிலுள்ள ஊனமுற்றோர் சங்கம் யாழ்ப்பாண மக்களுக்கு தேவையறிந்து உதவியுள்ளமை வரவேற்கத்தக்கதாகும்- என்றார். (201-14)

# இலகு உணவுத் திட்ட நிவாரணத்தை பயனாளிகளின் சங்கங்களிலேயே வழங்குக

## மானிப்பாய் ப.நோ.கூ.ச. தலைவருக்குக் கடிதம்

யாழ்ப்பாணம்,ஒக்.11

இலகு உணவுத்திட்ட பயனாளிகளுக்கான நிவாரணம் அந்தந்த கிராம அலுவலர் பிரிவில் இயங்கும் ப.நோ.கூ. சங்கக் கிளைகளிலேயே வழங்கப்பட வேண்டும் என நவாலி வடக்கு கிளை இலக்கம் 9 இன் தலைவர், செயலாளர் கூட்டாக மானிப்பாய் ப.நோ.கூ.சங்கத் தலைவருக்குக் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:

இலகு உணவுத்திட்ட பயனாளிகளுக்கான நிவாரணக் கொடுப்பனவு இதுவரை காலமும் வழங்கப்பட்டது போன்று ப.நோ.கூ. சங்கக் கிளைகளில் வழங்க வேண்டும்.

மாறாக மானிப்பாய் தலைமை அலுவலக கோப்சிற்றிகளுக்கு நீண்ட தூரம் அழைத்து அவர்களுக்கான நிவாரணத்தை வழங்குவது கடினமான விடயமாகும்.

அருகில் ப.நோ.கூ. சங்கக் கிளைகள் இயங்கும் போது இலகு உணவுத்திட்டத்தில் ஈடுபடும் வயதானவர்கள் மற்றும் பலரை மானிப்பாய்க்கு அழைப்பதால் மிகுந்த சிரமங்கள் ஏற்படுவதாக அக்கோரிக்கையில் தெரிவிக்கபபட்டுள்ளது. (201-302)

# வீட்டில் ஆள்கள் இல்லாதவேளையில் இலத்திரனியல் உபகரணங்கள் திருட்டு

வலி.வடக்கு,ஒக்.11

வீட்டில் ஆள்கள் இல்லாததை உணர்ந்து இரவு வீட்டினுள் நுழைந்த திருடர்கள் சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான இலத்திரனியல் உபகரணங்களை திருடிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாகத் தெரியவருவதாவது:

தாவடி மேற்கு முதலி கோயிலடியில் கடந்த புதன்கிழமை இந்தத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மேற்படி வீட்டிலுள்ளவர்கள் இரவு நேரம் உறவினர்களுடைய வீட்டிற்குச் சென்று காலையில் வந்து வீட்டைப் பார்த்த போது மின்குமிழ்கள் ஒளிர்ந்து கொண்டு இருந்ததுடன் வீட்டின் கதவுகளும் உடைக்கப்பட்டு இருப்பதைக் கண்டுள்ளார்கள்.

வீட்டினுள் சகல இடங்களும் திருடர்களினால் சோதனையிடப்பட்டு இருந்ததுடன் இரண்டு கமராக்கள் மற்றும் கணனிப் பொருள்கள் சிலவும் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

இது சம்பந்ததாக சுன்னாகம் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (201-86)



வேலணை மத்திய கல்லூரியில் நவோதய தின நிகழ்வு அண்மையில் இடம்பெற்ற போது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட மத்திய சுற்றாடல் அதிகார சபையின் உதவிப் பணிப்பாளர் திருமதி விஜதா சத்தியகுமார் மரம் நடுவதைப் படத்தில் காணலாம்.

# பாடசாலை மாணவர்களுக்கு சட்ட அறிவு அவசியம்

## நூல் வெளியீட்டு விழாவில் பேரா.நடராஜசுந்தரம்

யாழ்ப்பாணம்,ஒக்.11

மக்கள் மத்தியில் தற்போது சட்டம் தொடர்பான அறிவுகள் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன. மாணவர்களுக்குப் பாடசாலை மட்டத்தில் சட்டங்கள் தொடர்பான அறிவுசார் விடயங்களை முன்னெடுக்கப் பட வேண்டும். சிறியவயதிலேயே சட்டம் தொடர்பான விளக்கங்கள் புகட்டப்படும்போது அவர்களின் மனதில் சட்டம் பற்றிய அறிவைப் பதிய வைக்க முடியும்.

இவ்வாறு யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவத் துறைப் பேராசிரியர் எம்.நடராஜசுந்தரம் அண்மையில் பருத்தித்துறை தும்பளை சிவப் பிரகாச மகாவித்தியாலயத்தில் இடம்பெற்ற சட்டத்தரணி சபா.இரவீந்திரனின் 'பராமரிப்புச் சட்டம் ' என்னும் நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு நூலை வெளியிட்டு வைத்து உரையாற்றியபோதே பேராசிரியர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

சட்ட நுணுக்கங்களை மாணவர்கள் அறிந்து கொள்ளும்போது ஆளுமை படைத்த நாட்டிற்கு உகந்த பிரஜைகளாக அம்மாணவர்கள் உருவாக முடியும் எனவே குற்றச் செயல்கள் குறைவடைந்து நாட்டின் அபிவிருத்தியும் மேம்பாடடையும்.

சட்டத்தரணி சபா.இரவீந்திரன் 'சீதனவீடு', தேச வழமைச் சட்டம், பராமரிப்புச்சட்டம் ஆகிய மூன்று சட்ட நூல்களை எழுதியுள்ளார். இம் மூன்று நூல்களும் சமூகத்துக்கு மிகவும் இன்றியமையாதவை. நூல்கள் வெளியிடுவது இலகுவான விடயமல்ல. அதற்கு மனத்துணிவு முதலில் வேண்டும்.

எழுத வேண்டிய கருப் பொருள் பற்றிய தெளிவும் மனஉறுதியும் இருக்கவேண்டும். பல்வேறு வகையான நூல்கள் வெளிவருகின்றன. ஆனால் இவற்றில் சில நூல்களே சமூகத்துக்கு மிகவும் இன்றியமையாதனவாக இருக்கின்றன. அந்த வகையில் சமூக்தின் மிக முக்கியமான நூலான 'பராமரிப்புச் சட்டம்' நூல் வெளியிடப்பட்டது பாரட்டுக்குரியது.

மனிதன் பூரணமாக இயங்கச் சட்டமும் கணக்கியலும் முக்கியமானவை. அப்போதுதான் நிர்வாகமும் வினைத்திறன் மிக்கதாக அமையும். எனவே நிர்வாகி சுதந்திரமாகவும் செயற்பட முடியும். சட்ட நூல்கள் நிர்வாக கட்டமைப்பில் உள்ளவர்கள் நிர்வாகத்தை சிறப்புற மேற்கொள்வதற்கு வழிகாட்டுபவையாக அமையும். ஒரு காலத்தில் சமயம்தான் சட்டங்களை உருவாக்கின. எல்லாவற்றுக்கும் சமயத்தைதான் முன்வைப்பார்கள் சமயத்திற்கு எதிரான கருத்துக்களை கூற முடியாதிருந்தது.சட்டங்களைச் சமயமே நிர்வகித்து வந்தது. உண்மைகளை கூற முடியாது இருந்தது.

சட்டம் வளர்ச்சி அடைந்து வருவதாகும். தேசவழமைச் சட்டம்,கண்டியன் சட்டம்,முஸ்லிம் சட்டம் என சட்டங்கள் உள்ளன.சட்டம் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் வித்தியாசமான விளக்கங்களை வழங்கும். அதில் எல்லாவற்றையும் காணமுடியும். ஆகவே சட்டம் பற்றிய பூரண அறிவு மிக முக்கியமாகும். இன்று மக்கள் மத்தியில் சட்டஅறிவுகள் குறைவாக இருப்பதனால் சிறு வயது முதல் சட்ட அறிவுகளை மேம்படுத்தக்கூடிய கல்வி முறை ஏற்படுத்தபடவேண்டும்.

தற்போது எமது பிரதேசங்களில் சட்டத்தரணிகளுக்கு பற்றாக்குறை நிலவுகின்றது. சட்டத்தரணிகள் உருவாக்கப்பட வேண்டும். சட்டம் பயில்வதற்கு ஆங்கிலத்தின் தரம் உயர்த்தப்பட வேண்டும். மாணவர்கள் சட்டம் பயில முன்வரவேண்டும். எங்கள் முப்பது வருட கால நிலைமைதான் மாணவர்கள் சட்டத்துறையை தெரிவு செய்வதற்கு தடையாக இருந்துள்ளது.

இலங்கையில் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன. அப்பல்கலைக்கழகங்களிலும் தரமான கல்வியே போதிக்கப்படும். ஆங்கிலக்கல்வியை மேம் படுத்த வெளி நாட்டிலிருந்து ஆங்கில ஆசிரியர்கள் வரவழைக்கப்பட்டுள்ளனர் . மாணவர்கள் சட்டத்துறைக்கல்வியை தெரிவு செய்வதற்கு ஊக்குவிக்கப்பட வேண்டும்.

நூலாசிரியர் சட்டத்தரணி சபா.இரவீந்திரன் தன்னுரையில் குறிப்பிட்டதாவது:

நூல் எழுதுவது அதனை வெளியிடுவது என்பது அதில் வெற்றி காண்பதென்பது வேதனைகள் நிறைந்த சம்பவங்களாக உள்ள நிலையிலேயே அதிலே சாதனை படைத்து விட்டால் அது வாழ்க்கையில் மறக்கமுடியாத சாதனையாகவே இருக்கும். என்னால் எழுதப்பட்ட சீதன வீடு,தேசவழமை போன்ற சட்ட நூல்களுக்கு மக்கள் மத்தியில் இருந்த மதிப்பே என்னை பராமரிப்புச் சட்டம் நூலையும் எழுதத் தூண்டியது.

பராமரிப்புச்சட்டத்தை இன்று வரை யாரும் சரியாக புரிந்து கொள்ளவில்லை. இதனை எங்களால் முழுமையாகப் புரிந்து கொள்ள முடியாவிட்டால் சமுத்திரம் போன்ற சட்டம் முழுவதையும் நாங்கள் எப்போது புரிந்து கொள்ளமுடியும். சட்டத்தை சரியாக புரிந்து கொள்ளாத சிலர் தம் கைகளிலே சட்டத்தை எடுத்து வியாக்கியானம் செய்யப் புறப்பட்டுள்ளார்கள் எனவும் அவர் கூறினார். (201)


## யாழ்/ மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை நூற்றாண்டு விழா (1910-2010)

★ இடம்:- கல்லூரியின் திறந்த வெளியரங்கு
★ காலம்:- 12.10.2010 செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி

**தலைமை:-**
திருமதி சிவமலர் அனந்தசயனன் அவர்கள்,
அதிபர், யாழ்/ மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை.

**முதன்மை விருந்தினர்:-**
திரு. பொன்னையா கனகசபாபதி அவர்கள்
முன்னாள் புகழ்பூத்த அதிபர்.

**நிகழ்ச்சிகள்**
மகாஜன சிற்பி தெ.து.ஜயரத்தினம் அவர்களின் உருவச்சிலை திறந்துவைத்தல்.
மகாஜனன் நூற்றாண்டு மலர் வெளியிடு

சிறப்பு விருந்தினர்
(மலர்வெளியீட்டுரை)
திரு.சுப்பிரமணியம் சுந்தரசிவம்
பிரதிக்கல்விப் பணிப்பாளர், வலிகாமம்.

**முதற் பிரதி பெறுபவர்**
திரு.சின்னத்தம்பி ஸ்ரீலஜயன் (மகாஜனன்)

**கௌரவ சிறப்பு பிரதி பெறுபவர்**
திரு. சரவணமுத்து விநாயகரத்தினம்
முன்னாள் ஆசிரியர், ஓய்வுபெற்ற சேவைக்கால ஆசிரிய ஆலோசகர், வலிகாமம் வலயம்

**மலர் ஆய்வுரை**
கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன்
சிரேஷ்ட விரிவுரையாளரும் தலைவரும் ஆங்கில மொழி கற்பித்தல் துறை, வவுனியா வளாகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**ஏற்புரை**
திருமதி ரேணுகாதேவி கேசவன்
ஆசிரியை, யாழ்/மகாஜனக் கல்லூரி

மகாஜன மாதா குறும்பட வெளியீடு
வெளியீட்டுரை:
பேராசிரியர் மா. சின்னத்தம்பி அவர்கள் கல்வியியல் பேராசிரியர் தலைவர், சட்டத்துறை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

**முதற்பிரதி பெறுபவர்**
திரு.L.சிறிதரன் அவர்கள் மாகாண முகாமையாளர், மத்தியவங்கி.

**மதிப்பீட்டுரை:**
திருமதி நவதர்சினி கருணாகரன் அவர்கள்
விரிவுரையாளர், நாடகமும், அரங்கியலும் நுண்கலைத்துறை யாழ்.பல்கலைக்கழகம்.

**ஏற்புரை:**
திரு.இ.ஞானேஸ்வரன் அவர்கள்
குறும்பட இயக்குநர்
(ஆசிரியர், யாழ்/மகாஜனக் கல்லூரி)

இந் நூற்றாண்டு விழாவையொட்டி அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட போட்டிகளின் பரிசளிப்பும் விருந்தினர் கௌரவிப்பும்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம் யா/ மகாஜனக்கல்லூரி.

## யாழ்/ மகாஜனக்கல்லூரி தெல்லிப்பழை

### நூற்றாண்டு விழா

**காலை அமர்வு**
இடம்: பாவலர் துரையப்பாபிள்ளை மண்டபம்
காலம்: 14.10.2010 - காலை 8.30 மணி

**தலைமை:**
திருமதி சிவமலர் அனந்தசயனன் அவர்கள்
அதிபர், யா/மகாஜனக் கல்லூரி

**முதன்மை விருந்தினர்**
திரு.ஆ.சி.நடராஜா அவர்கள்
செயலாளர், கருணைப்பாலம்.

**நிகழ்ச்சிகள்**
★ விசேட ஆராதனை
★ ஸ்தாபகருக்கும், மகாஜன சிற்பிக்கும் மலர்அஞ்சலி
★ வரவேற்புரை
★ தலைமையுரை
★ பிரதம விருந்தினர் உரை
★ சிரேஷ்ட மாணவ தலைவர் கருணைப் பாலத்திற்கு நூற்றாண்டு நிறைவாக அன்பளிப்பு வழங்குதல்

**மாலை அமர்வு**
★ இடம்: கல்லூரியின் திறந்தவெளி அரங்கு
★ காலம்: 14.10.2010 -பி.ப. 3.00 மணி

**தலைமை**
திருமதி சிவமலர் ஆனந்தசயனன் அவர்கள்
அதிபர், யா/ மகாஜனக் கல்லூரி

**முதன்மை விருந்தினர்**
திரு.நா.சிறிகங்காதரன் அவர்கள் (மகாஜனன்)
தலைவர், ப.மா.ச. லண்டன்

**சிறப்பு விருந்தினர்**
திரு.மு.நடராசா அவர்கள் (மகாஜனன்)
உதவிக்கல்விப் பணிப்பாளர் (உடற்கல்வி)
வலிகாமம் வலயம்.

**நிகழ்ச்சிகள்**
★ சின்னப்பா நினைவு நூலகம் திறந்து வைத்தல்
★ விளையாட்டுநிகழ்வுகள்

**துடுப்பாட்டம்-**
அமரர் றோகான் ராஜசிங்கம் அவர்களின் ஞாபகார்த்தப்போட்டி.

**அனுசரணை-**
திரு.சி.சிவகரன் அவர்கள் (அவுஸ்திரேலியா)
★ கரப்பந்தாட்டம்
★ உதைபந்தாட்டம்

**அனுசரணை-**
திரு.செ வேலாயுதம் குடும்பத்தினர் (கட்டுவன்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/ மகாஜனக் கல்லூரி.
(சி/571816)

## ஜாதிக சம்பத Jathika Sampatha

சீட்டிழுப்பு இலக்கம் - 63
திகதி - 09.10.2010
உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றியீட்டும் ஆங்கில எழுத்து N அதிர்ஷ்ட இலக்கம் 03 வெற்றி இலக்கம் 3 9 5 0 8

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | பரிசு |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | N 03 3 9 5 0 8 | ரூ. 18,909,138.00 | - |
| 1 பரிசு | 03 3 9 5 0 8 | ரூ. 2,000,000.00 | - |
| 2 பரிசு | 3 9 5 0 8 | ரூ. 100,000.00 | 03 |
| 3 பரிசு | 9 5 0 8 | ரூ. 10,000.00 | 25 |
| 4 பரிசு | 5 0 8 | ரூ. 1,000.00 | 256 |
| 5 பரிசு | 0 8 | ரூ. 50.00 | 2486 |
| 6 பரிசு | 8 | ரூ. 20.00 | 23991 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | பரிசு |
|---|---|---|---|
| 7 பரிசு | 3 9 5 0 | ரூ. 1,000.00 | 24 |
| 8 பரிசு | 3 9 5 | ரூ. 100.00 | 249 |
| 9 பரிசு | 3 9 | ரூ. 50.00 | 2522 |
| 10 பரிசு | N | ரூ. 20.00 | 9905 |
| 11 பரிசு | N 03 | ரூ. 100.00 | 1188 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,902,020.00

தேசிய லொத்தர் சபை
234/2. காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர அழைப்பிற்கு: 2473360, 2433631
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த புதன் கிழமை சுப்பர் பரிசு ரூ.19,275,632.00

## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இல. 2163 திகதி 09-10-2010

ஆங்கில எழுத்திற்கும் N
வெற்றி எண்கள் 39 59 60 67
போனஸ் இல: 38

ஜக்பொட் பரிசு ரூ. 16,891,900/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 184541 | 20/- | 3,690,820/- |
| 2 இல | 13350 | 100/- | 1,335,000/- |
| 3 இல | 281 | 1,000/- | 281,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 7276 | 40/- | 291,040/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 451 | 1,000/- | 451,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 11 | 10,000/- | 110,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 16,891,900/- | - |
| 1 இல + போனஸ் இல | 8737 | 100/- | 873,700/- |
| 2 இல + போனஸ் இல | 396 | 500/- | 198,000/- |
| 3 இல + போனஸ் இல | 03 | 100,000/- | 300,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 393 | 200/- | 78,600/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 21 | 1,500/- | 31,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 01 | 150,000/- | 150,000/- |
| மொத்தம் | | | 8,790,660/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 10 | 60,000/- | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 215472 | | 9,390,660/- |

| | |
|---|---|
| மாத்தளை | 302404069-3-32 |
| வவுனியா | 302407369-5-29 |
| குருணாகல் | 302401193-5-02 |
| கொழும்பு | 302406149-6-34 |
| பொலன்னறுவை | 302405678-3-44 |
| கம்பஹா | 302405802-6-02 |
| கம்பஹா | 302405823-9-39 |
| களுத்துறை | 302405982-8-14 |
| பதுளை | 302408413-3-44 |
| கொழும்பு | 302407557-7-31 |

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு ரூ.17,395,850/-

வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

# முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடர் மழையினால் மீள்குடியேறிய மக்கள் அவலங்களைச் சந்திக்கின்றனர்

ஒட்டுசுட்டான்,ஒக்.11

முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள்குடியேறிய மக்கள், அங்கு கடந்த சில நாட்களாக இடைவிடாது பெய்துவரும் அடை மழையினால் அவலங்களைச் சந்தித்து வருகின்றனர்.

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் மீள்குடியேறிய மக்களில் பெரும்பாலானவர்களின் வீடுகள் இன்னமும் முழுமையாகத் திருத்தப்படவில்லை. அரைகுறையாகத் தகரம் அடித்தும், தறப்பாளால் மூடியும் மக்கள் தமது வீடுகளில் வசித்து வருகின்றனர். ஆனால் பெரு மழைக்கு இவை தாக்குப் பிடிக்கக் கூடினவாக இல்லை. இதனால் மக்களின் நிலை மிகவும் பரிதாபகரமாக மாறியுள்ளது. மழை நீரில் நனைந்தும், தமது உடைமைகளைப் பாதுகாக்க முடியாமலும் மக்கள் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள்.

இவர்களுக்கு காலபோக நெற்செய்கைக்காக வழங்கப்பட்ட விதை நெல்லை மழைநீரில் இருந்து பாதுகாப்பதில் அதிக சிரமங்களை இந்த மக்கள் எதிர்கொள்கின்றனர்.

அத்துடன் வன்னிப் பெருநிலப் பரப்பில் தற்போது சிறுபோக நெல் அறுவடையும், காலபோக நெல் விதைப்பும் இடம்பெற்று வருகின்றன. ஆனால் மழைகாரணமாக இந்த விவசாய நடவடிக்கைகளுக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால், மீள்குடியேறிய மக்கள் செய்வதறியாது திகைத்து நிற்கின்றனர்.

மேலும் மழை வெள்ளம் காரணமாக போக்குவரத்தும் தடைப் பட்டுள்ளது. இதனால் இந்த மக்களின் அன்றாட நடவடிக்கைகள் தடைப்பட்டுள்ளன. (க-341)

# மீள்குடியேற்றத்திற்கு அனுமதிக்கப்பட்ட போதிலும் சொந்த இடங்களுக்குச் செல்ல முடியாத மக்கள்

ஒட்டுசுட்டான்,ஒக்.11

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் மீள்குடியேறிய மக்களில் சிலர் இன்னமும் தமது சொந்த இருப்பிடங்களுக்குச் செல்ல முடியாத நிலையிலுள்ளனர்.

இவர்களின் வீடுகளில் இராணுவத்தினர் தங்கியுள்ளதால் இந்த நிலை தோன்றியுள்ளது. இந்த மக்கள் மீள்குடியேற்றத்திற்கு அனுமதிக்கப்பட்ட போதிலும் தமது சொந்த இடங்களுக்குச் செல்ல முடியாத நிலையில் உறவினர் வீடுகளிலும், வவுனியாவிலும் தங்கியுள்ளனர்.

இந்த மக்கள் அரசசார்பற்ற நிறுவனங்களால் அமைத்துக் கொடுக்கப்படும் தற்காலிக வீடுகளையோ அல்லது மலசல கூட வசதிகளையோ பெறமுடியாத நிலையில் உள்ளனர். அத்துடன் தம்மால் பயிர் செய்யப்படும் நிலங்கள் பயிர் செய்ய முடியாத நிலையில் உள்ளதாகவும் இவர்கள் கூறுகின்றனர்.

மிக விரைவில் தமது இருப்பிடங்களுக்குச் செல்வதற்கான ஏற்பாடுகளைச் செய்து தருமாறு ஒட்டுசுட்டான் உதவி அரசாங்க அதிபரிடம் இவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-341)

## சிறுவர் தினத்தையொட்டி விளையாட்டுப் போட்டி

வட்டக்கச்சி,ஒக்.11

சிறுவர் தினத்தை முன்னிட்டு கல்மடுநகர் சுதாங்கனி முன்பள்ளியில் விளையாட்டுப் போட்டி இடம்பெற்றது.

கிராம முன்னேற்றச் சங்கத் தலைவர் இ.யோகநாதன் தலைமையில் பிற்பகல் 3 மணியளவில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. பிரதம விருந்தினராக கிளிநொச்சி கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கோ.செல்வராசா கலந்து கொண்டார், பிரதேச சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர், சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர், இராமநாதபுரம் கிழக்கு அ.த.க. பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள் ஆகியோரும் நிகழ்வில் கலந்து கொண்டனர். (த-450)

# கிளிநொச்சி மத்திய கல்லூரியில் ஆசிரியர் தின நிகழ்வுகள்

கிளிநொச்சி,ஒக்.11

கிளிநொச்சி மத்திய கல்லூரியின் ஆசிரியர் தின நிகழ்வுகள் கடந்த 6 ஆம் திகதி மு.ப.9 மணிக்கு கல்லூரியின் உயர்தர மாணவர் மன்றத் தலைவர் இ.ஜீவராசா தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வுக்கு முன்னதாக ஆசிரியர்கள் ஸ்ரீ மீனாட்சியம்மன் ஆலய முன்றிலில் இருந்து மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டு மலர்தூவி நிகழ்வு மண்டபத்திற்கு அழைத்து வரப்பட்டனர். அங்கு தேசியக் கொடியினை பிரதேச இராணுவ அதிகாரியும் கல்லூரிக் கொடியினை கல்லூரியின் பிரதி அதிபர் ஆ.ஆலாலசுந்தரமும் ஏற்றி வைத்தனர். தொடர்ந்து மங்கல விளக்கேற்றப்பட்டு மண்டப நிகழ்வுகள் ஆரம்பமாகின.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி கல்விவலய மாணவர் அபிவிருத்திக்குப் பொறுப்பான பிரதிக்கல்விப் பணிப்பாளர் க.இரத்தினகுமார் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். நிகழ்வில் மாணவர்களது கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தினர் ஆசிரியர்களுக்கான ஆசிரியர் தின பரிசில்களை வழங்கினர். அத்துடன் பழைய மாணவர் சங்கத்தினரால் முன்னாள் அதிபரான க.இரத்தினகுமாருக்கு நினைவுப் பரிசில்களும், கல்லூரிக்கென சுருதிப் பெட்டியும் வழங்கப்பட்டன. (க-405)



முல்லைத்தீவு செம்மலை மகாவித்தியாலயத்தில் இடம்பெற்ற ஆசிரியர் தின நிகழ் வின்போது ஆசிரியர்கள் மாணவர்களால் மாலை அணிவித்து அழைத்து வரப்படுவதைப் படத்தில் காணலாம்.
(படம்: ஆனைக்கோட்டை நிருபர்)

## ஆலயத்திற்கு தொலைபேசி வசதி

கிளிநொச்சி,ஒக்.11

கிளிநொச்சி அருள்மிகு கந்தசுவாமி ஆலயத்திற்கு சீ.டீ.எம்.ஏ தொலைபேசியொன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 7 ஆம் திகதி தமிழ் தேசிய கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனால் இத்தொலைபேசி ஆலய நிர்வாகத்தினரிடம் கையளிக்கப்பட்டது. (க-405)

# மாணவர்களை மத்திய கல்லூரியுடன் தொடர்பு கொள்ள வேண்டுகோள்

கிளிநொச்சி,ஒக்.11

கிளிநொச்சி மத்திய கல்லூரியில் இருந்து 2008, 2009 ஆம் ஆண்டுகளிலும், 2010ஆம் ஆண்டிலும் தரம் -5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றவர்களும், 100 புள்ளிகளுக்குமேல் பெற்றவர்களுமான மாணவர்களை உடனடியாகக் கல்லூரியுடன் தொடர்பு கொள்ளுமாறு கல்லூரியின் பிரதி அதிபர் திருமதி கெங்காதேவி ஜெயராஜ் கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்த மாணவர்களில் பலர் இடம்பெயர்ந்த நிலையில் பல்வேறு இடங்களிலும் வசித்து வருகின்றனர். இவர்களுடன் உடனடியாகத் தொடர்புகொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது. ஆகவேதான் இந்த அறிவித்தலை விடுப்பதாக கல்லூரியின் சார்பில் தெரிவிக்கப்பட்டது. நேரடியாகத் தொடர்பு கொள்ள முடியாதவர்கள் 021320 8201 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (க-405)

# வசதிகள் எதுவும் இல்லாத நிலையில் ஒட்டுசுட்டான் கிராம அலுவலர்கள்

ஒட்டுசுட்டான்,ஒக்.11

அலுவலக வசதியோ அல்லது தளபாட வசதியோ இல்லாமல் ஒட்டுசுட்டான் பிரதேச கிராம சேவை அலுவலர்கள் இன்னல்களுக்கு மத்தியில் கடமையாற்றி வருகின்றனர்.

தற்போது மீள்குடியேறிய மக்களுக்குக் கிராமசேவை அலுவலர்களின் சேவைகள் முக்கியமாகத் தேவையாகவுள்ளன. ஆனால் இந்த அலுவலர்களுக்கு நிரந்தரமான வதிவிடமும், அலுவலகமும் இல்லை. அத்துடன் தமது ஆவணங்களைப் பத்திரமாகப் பேணுவதற்குரிய தளபாட வசதிகளும் இல்லை.




இதனால் இவர்கள் மக்களின் வீடுகளின் ஒரு பகுதியில் பல சிரமங்களுக்கு மத்தியில் கடமையாற்றி வருகின்றனர்.

இக்குறைபாடுகளால் இந்த உத்தியோகத்தர்கள் மனவிரக்தியுடன் தமது கடமைகளை ஆற்றி வருகின்றனர். அத்துடன் இவர்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு முழுசேவையையும் வழங்க முடியாதுள்ளது. இதனால் பாதிக்கப்படுவது யுத்தத்தில் தப்பிப் பிழைத்து மீளக்குடியேறி வந்துள்ள பொதுமக்களே.

ஆகவே கிராமசேவை அலுவலர்கள் தமது பொதுமக்களுக்கான சேவையை நிம்மதியான சூழ்நிலையில் முழுமையாக ஆற்றுவதற்கு ஏதுவாக இவர்கள் தற்போது அனுபவிக்கும் குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட வேண்டுமென்பதே மீள்குடியேறிய மக்களின் வேண்டுகோளாகும். (க-341)

## சின்னம் சூட்டுதல்

கிளிநொச்சி,ஒக்.11

கிளிநொச்சி முழங்காவில் மகாவித்தியாலயத்தின் இந்த ஆண்டுக்கான மாணவத் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு கடந்த 5 ஆம் திகதி மு.ப.9 மணிக்கு பாடசாலை அதிபர் சு.கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் முழங்காவில் பிள்ளையார் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ லம்போதரக்குருக்கள், முழங்காவில் பங்குத்தந்தை வணபிதா மரியதாஸ் ஆகியோர் கலந்து கொண்டு ஆசியுரைகளை வழங்கினர். தொடர்ந்து அதிபர், ஆசிரியர்களால் 46 மாணவர் தலைவர்களுக்கு சின்னங்கள் சூட்டப்பட்டன. (க-405)

## செம்மொழி விழாவை ஒத்தி வைக்கவும்

மன்னார்,ஒக்.11

மன்னாரில் இந்த மாதம் நடைபெறவிருக்கும் தமிழ்ச் செம்மொழி விழாத் திகதிகளைப் பிற்போட வேண்டுமெனக் கோருகிறார் மன்னாரைச் சேர்ந்த சமாதான நீதிவானான அ.கீதபொன்கலன்.

அவர் இது தொடர்பாக மன்னார் தமிழ்ச் சங்கத் தலைவர் அருட்பணி தமிழ்நேசன் அடிகளாருக்கு எழுதியுள்ள கடிதத்தில் மன்னார் மாவட்டத்தின் கிட்டத்தட்ட மூன்றில் இண்டு பகுதி மக்கள் போரினால் பாதிக்கப்பட்டு மீள முடியாத நிலையில் இருப்பதால் இந்த விழாவை இப்போது நடத்துவது உகந்ததல்ல என்று தெரிவித்துள்ளார். அத்துடன் விழாத் திகதிகளைப் பிற்போடுமாறும் அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

# கரைச்சிக் கோட்ட ஆரம்பக் கல்வி மாணவர் ஆக்கத்திறன் போட்டியின் முடிவுகள்

கிளிநொச்சி,ஒக்.11

கிளிநொச்சி கல்வி வலயத் தின் கரைச்சிக் கோட்ட பாடசாலைகளின் ஆரம்பக் கல்வி மாணவர்களுக்கு இடையேயான ஆக்கத்திறன் போட்டிகள் கடந்த 5 ஆம் திகதி கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நடைபெற்றன. இப்போட்டியின் முடிவுகள் வெளியாகி உள்ளன.

**திருக்குறள் மனனப் போட்டி**

தரம் - 1

ச.மதியரசி - கிளிநொச்சி ம.வி, சி.நிதர்சிகா - கனகபுரம் ம.வி, சு.ஜனுசா - உருத்திரபுரம் ம.வி.

தரம் - 2

இ.சங்கமன் -வட்டக்கச்சி ம.வி, ச.சுபா - புனிதபற்றிமா றோ.க.த.க.பா, பு.மிகானா - புனித திரேசா பெண்கள் கல்லூரி.

தரம் - 3

து.சங்கவி - புனித திரேசா பெண்கள் கல்லூரி, ஜெ.ஆன் சுகிர்தா - கிளிநொச்சி இந்து ஆரம்ப வித்தியாலயம், சு.சசிவதனா - உருத்திரபுரம் ம.வி.

தரம் - 4

ர.மதுசா - புனித திரேசா பெண்கள் கல்லூரி, பா.தர்மீகன் - இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பா, ச.ஜனுசா - கிளிநொச்சி ம.வி.

தரம் - 5

தி.கோபிநுஜல் - கிளிநொச்சி ம.வி, அ.திலக்சிகா - இராமநாதபுரம் ம.வி, ஜோ.சதனிகா - உருத்திரபுரம் ம.வி.

**துரித கணிதச் செய்கை**

தரம் -2

யோ.வினுசன் - இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பா, சி.சஞ்சிகா - கிளிநொச்சி ம.வி, கு.அபிசன் - கிளிநொச்சி ம.வி.

தரம் -3

யோ.பிரவிந்தன் - கிளிநொச்சி ம.வி, சி.சிவனருட்செல்வன் - புனித திரேசா பெண்கள் கல்லூரி, ச.பானுசா - கிளிநொச்சி ம.வி.

தரம் -4

இ.நிலாந்தன் - கிளிநொச்சி ம.வி, அ.சென்ஜோன் ஜொன்சிலி - புதுமுறிப்பு விக்கினேஸ்வரா வித்தியாலயம், சி.துரிதா - உருத்திரபுரம் ம.வி.

தரம் - 5

வி.மிதுசிகா - புனித திரேசா பெண்கள் கல்லூரி, அ.தர்மிகா - கிளிநொச்சி ம.வி, சி.ரேணுஜன் - கிளிநொச்சி மத்திய கல்லூரி.

**வாய்ப்பாடு மனனம் செய்தல்**

தரம் - 3

ந.நிதர்சன் - ஸ்கந்தபுரம் இல -1 அ.த.க.பா, ச.நிலக்ஷன் - கனகாம்பிகைக்குளம் அ.த.க.பா, த.அஸ்விற்றா - புனித சிரேசா பெண்கள் கல்லூரி.

தரம் -4

க.தாருகா - வட்டக்கச்சி ம.வி, பா.தர்மிகன் - இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பா, ச.வைனஸ் - கிளிநொச்சி இந்து ஆரம்ப வித்தியாலயம்.

தரம் - 5

சி.ரேணுஜன் - கிளிநொச்சி மத்திய கல்லூரி, இ.நிசாந்தினி - இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பா, க.ஜ துசா - ஸ்கந்தபுரம் இல-1 அ.த. க.பா.

**சிறுவர் நாடகம்**

முதலாமிடம் - கனகபுரம் ம.வி, 2 ஆம் இடம் - கிளிநொச்சி மத்திய கல்லூரி, 3 ஆம் இடம் - கிளிநொச்சி ம.வி. (தொடரும்) (க-405)

# ஒட்டுசுட்டான் மக்களுக்கு சீரற்ற வைத்திய சேவை

ஒட்டுசுட்டான்,ஒக்.11

ஒட்டு சுட்டான் பிரதேசத்தில் மீள்குடியேறிய மக்களுக்கான மருத்துவசேவை மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே வழங்கப்பட்டு வருகின்றது.

இந்தப் பிரதேசத்திலே ஒரேயொரு மத்திய மருந்தகமே உள்ளது. ஆனால் நிரந்தரமான வைத்திய அதிகாரி இல்லை. வவுனியாவிலிருந்து வருகைதரும் வைத்திய அதிகாரி ஒருவரே பதில் கடமையாற்றுகின்றார். இதனால் கிழமை நாள்களில் காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை மட்டுமே மருந்தகம் திறந்திருக்கும். இப்பிரதேச மக்கள் தமக்குரிய மருத்துவ வசதிகளை ஒழுங்காகப் பெறமுடியாத நிலையிலுள்ளனர்.

இந்த மத்திய மருந்தகத்தை முழுநேரமும் இயங்க வைப்பதற்கு ஏதுவாக நிரந்தரமான வைத்திய அதிகாரியொருவரை நியமிக்குமாறும், பிரசவ விடுதி உட்பட சகல வசதிகளையும் ஏற்படுத்தித் தருமாறும் மீள்குடியேறிய மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தப் பிரதேசத்திலே தனியார் வைத்தியசாலை எதுவும் இயங்குவதில்லை. (க-341)

# லிபியாவுக்கு தொழில் தேடிச் சென்ற 30 இலங்கையர் நேற்று நாடு திரும்பினர்

கொழும்பு, ஒக்.11

லிபியா நாட்டுக்குத் தொழில்தேடிச் சென்று நிர்க்கதியாக் கப்பட்ட நிலையில் 30 இலங்கையர் நேற்று ஞாயிற்றுக்கிழமை நாடு திரும்பியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்கள் திரிபோலி நகரிலிருந்து இலங்கைக்குப் புறப்பட்டதாக லிபியாவுக்கான இலங்கைத் தூதுவர் சுதந்த கனேகம ஆராய்சி தெரிவித்துள்ளார்.

தொழில் தேடிச் சென்று நிர்க்கதியான 121 இலங்கையர்கள் தற்போது லிபியாவின் திரிபோலி நகரிலுள்ள முகாமொன்றில் தங்கியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அவர்கள் அனைவரும் தம்மை விரைவில் நாட்டிற்கு அழைத்து வருவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இலங்கை அசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் அவர் கூறினார். (ற)

## பரிசில் தினம்

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தினால் 2009ஆம், 2010ஆம் ஆண்டுகளில் நடத்தப்பட்ட தேசிய கலை, இலக்கியப் போட்டிகளில் பிரதேச மட்டத்தில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில் வழங்கும் நிகழ்வு நாளை செவ்வாய்க் கிழமை இடம்பெறவுள்ளது.

உடுவில் பிரதேச செயலர் செல்வி இ.நவரத்தினம் தலைமையில் பிரதேச செயலக கேட்போர்கூடத்தில் நடைபெறவுள்ள இந் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசனும், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணம் உதவித் தொழில் ஆணையாளர் க.கனகேஸ்வரனும் கலந்து கொள்வர். (201-207)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
## ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



**திருமதி**
**ஒளவை சிவநேயன்**

கடந்த 11.09.2010 அன்று இறைபதமடைந்த எமது குல விளக்கின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று 11.10.2010 திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரின் இல்லத் தில் நடைபெறும். தொடர்ந்து மதிய போச னத்திலும் கலந்து கொள்ளும் வண் ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்புடன்:
**குடும்பத்தினர்.**

''சிவபுரி'
கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

(104440)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



மண்ணில் மலர்வு:
1919.12.15

விண்ணில் உதிர்வு:
2010.09.11

**திருமதி**
**வன்னியசிங்கம்**
**வள்ளிப்பிள்ளை**


அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் கடந்த சனிக்கிழமையன்று (09.10.2010) கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றது. இன்று (11.10.2010) திங்கட்கிழமை மு.ப.11 மணிக்கு எமது இல்லத்தில் ஆத்ம சாந்திப் பிரார்த் தனையும், மதிய போசன நிகழ்வும் இடம்பெறும். அத் தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்பின் திருவுருவே
பாசத்தின் பிறப்பிடமே
ஒளிவிட்ட மாணிக்கமே
ஆலமரமென விழுதுகள்
கோலமிடக் குலம் விளக்கி
வாழ்ந்த நாள்களை
நினைவு கூர்ந்து
தங்களின் ஆத்ம சாந்திக்காகப்
பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர்.
கைதடி தெற்கு,
கைதடி.

(104385)

# மரண அறிவித்தல்



## சிவசாமி குலசேகரம்

கரணவாய் மேற்கு, மண்டான் ஏற்றத்தில் வசிக்கும், சிவசாமியினுடைய மகன் குலசேகரம் சுவிசில் 03.10.2010 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(11.10.2010) திங்கட்கிழமை சுவிசில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
உறவினர், இராசசேகரம்.

மண்டான் ஏற்றம்,
கரணவாய் மேற்கு,
கரவெட்டி.

(104455)

# சைக்கிளுடன் மோதியதில் மாணவியின் கை முறிந்தது

தென்மராட்சி, ஒக்.11

உலக ஆசிரியர் தினத்தையொட்டி ஆசிரியர்களுக்கு 'சொக்லேட்' வழங்கி கௌரவிக்கக் கடைக்குச் சைக்கிளில் சென்ற மாணவி மற்றொரு சைக்கிளுடன் மோதி வீழ்ந்ததில் கைமுறிந்தது. இச்சம்பவம் கடந்த புதன்கிழமை பளையில் இடம்பெற்றது.

புலோப்பளை கிழக்கைச் சேர்ந்த பாவிலுப்பிள்ளை சஜானா (வயது-17) என்னும் மாணவி கை முறிந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (201-207)

# வருஷாப்திக அழைப்பு

## சிவஸ்ரீ
## இ.குமாரசாமிக் குருக்கள்
## பரமேஸ்வரி அம்மா

உலக இயக்கத்தின் நாடியான நவராத்திரி நாளில் மகாலக்ஷுமியின் விரத ஆரம்பமான நாளும் பூர்வபக்ஷ சதுர்த்தித் திதியும் சுவாதி நட்சத்திரமும் கொண்ட இந்நாளில் இ.குமாரசாமிக்குருக்களின் தர்ம பத்தினி பரமேஸ்வரி அம்மா ஈழத்துச் சிதம்பரேஸ்வரனின் பாதாரவிந்தத்தைச் சென்றடைந்து ஒரு வருடம் பூர்த்தியான இன்று (11.10.2010) திங்கட்கிழமை முற்பகல் 9 மணியளவில் எமது இல்லத்தில் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் பங்குகொண்டு அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு, தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் பங்குகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நடுத்தெரு,
காரைநகர்.


(104505)

பிள்ளைகள்,
சகோதரர்கள்.

# ஓராண்டு நினைவலைகள்

## அமரர் சிங்கராஜர் அலோசியஸ்
## தர்மராஜா (சின்னத்துரை)

(ஓய்வுபெற்ற S.D.W. கச்சேரி அம்பாறை)




''உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பிலும் வாழ்வான்''

பப்பா என்று அழைத்த போதெல்லாம்
பாசமுடன் எமை அணைத்து
பற்பல வழிகளிலும் வழிகாட்டி
பண்புடன் நாம் வாழப் பாதைகள் காட்டிய தெய்வமே!
உங்கள் பிரிவு எமக்குப் பெரிதாக இருந்ததுவே
உடைந்த எம் உள்ளங்களை வலுப்படுத்த
உத்தமமிக்க உங்கள் வாழ்வு எமக்கு உரமூட்டுகின்றது
உயர்வான உங்கள் ஆன்மா இறைபதம் சேர நிதமும்
- நாம் வேண்டுகின்றோம்
தர்மத்தின் உறைவிடமே உங்களை நாம் மறவோம்
கணவனாகத் தந்தையாகத் தயவுடன் வாழ்ந்தீர்கள்
தரணியில் நாம் என்றும் உம் வழியில் நடந்திடுவோம்
தந்தையாம் இறைவனிடம் எம்மவர்களுக்காக
-வேண்டிடுவீர்கள்.

நாளை (12.10.2010) செவ்வாய்க்கிழமை சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தில் முற்பகல் 11.30 மணியளவில் நடைபெறும் ஆன்ம சாந்தித் திருப்பலியில் கலந்துகொண்டு, அதனைத் தொடர்ந்து எம் இல்லத்தில் இடம்பெறும் மதியபோசனத்திலும், எம் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.
தொ.பே.: 0212240532, 0772205136.

குடும்பத்தினர்,
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரன்.

(104435)

# 4 இந்தியப் போர்க் கப்பல்கள் இலங்கையை வந்தடைந்தன

## கூட்டுப் போர் ஒத்திகைக்காக

கொழும்பு,ஒக். 11

இலங்கைக் கடற்டையினருடன் இணைந்து பயிற்சி நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக இந்தியக் கடற்படையின் நான்கு கப்பல்கள் இலங்கைக்கு வந்துள்ளன.


திருகோணமலைத் துறைமுகத்தை மூன்று இந்தியக் கடற்படைக் கப்பல்களும் ஒரு கப்பல் கொழும்புத் துறைமுகத்தையும் நேற்றுமுன்தினம் காலை வந்தடைந்தன.

இந்தக் கப்பல்களுக்கு இலங்கைக் கடற்படையினர் தரப்பில் பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது.

எதிர்வரும் 15ஆம் திகதி வரை இந்தக் கப்பல்கள் சிறிலங்காவில் தங்கியிருந்து கூட்டுப் பயிற்சிகளில் ஈடுபடவுள்ளன.

இவற்றில் கொழும்புத் துறைமுகத்துக்கு வந்துள்ள ஐ.என்.எஸ் தரங்கினி என்ற கப்பல் 54 மீற்றர் நீளத்தைக் கொண்டது. இது மாலுமிகளுக்குப் பயிற்சி வழங்கும் கப்பலாகும்.

வருணா, வீர், சர்துல் ஆகிய இந்தியக் கப்பல்கள் திருகோணமலைத் துறைமுகத்தை வந்தடைந்துள்ளன.



கொழும்புத்துறைமுகத்தில் நங்கூரமிட்டுள்ள இந்தியக் கப்பலான 'ஐ.என்.எஸ் தரங்கினி'

தரங்கினி போலவே ஐ.என்.எஸ். வருணவும் கடற்படை மாலுமிகளுக்குப் பயிற்சி வழங்கும் கப்பலாகும்.

54 மீற்றர் நீளம் கொண்ட இது 16 கடற்படையினர் மற்றும் அதிகாரிகளையும் 45 பயிற்சி மாலுமிகளையும் கொண்டது.

ஐ.என்.எஸ் சர்துல் ஈரூடகத் தாக்குதலுக்கான துருப்புகளை தரையிறக்கும் கப்பலாகும். இது 500 துருப்புகளை ஒரே தடவையில் தரையிறக்கும் வசதி கொண்டது.

125 மீற்றர் நீளம்கொண்ட இந்தக் கப்பலில் 11 பிரதான சண்டைத் தாங்கிகளையும், 10 கவச வாகனங்களையும் ஏற்றிச் செல்ல முடியும்.

11 அதிகாரிகளும் 145 கடற்படையினரும் பணியாற்றும் இந்தக் கப்பலில் ஒரு ஹெலிக் கொப்டரும் உள்ளது.

ஐ.என்.எஸ் வீர் 38.6 மீற்றர் நீளம் கொண்ட அதிவேக ஏவுகணைப் படகாகும். 30 கடற்படையினர் பணியாற்றும் இந்தக் கப்பல் 1971 போரின் போது பாகிஸ்தான் போர்க்கப்பல்களை ஏவுகணைத் தாக்குதல் மூலம் மூழ்கடித்தது.

இந்தக் கப்பல்களில் வந்துள்ள இந்தியக் கடற்படையினர் மற்றும் 150 கடற்படைப் பயிற்சி மாலுமிகளுக்கு சிறிலங்கா கடற்படையினர் பயிற்சிகளை வழங்கவுள்ளனர்.

அதேவேளை, இந்தியக் கப்பல்களில் சிறிலங்கா கடற்படையினர் மற்றும் பயிற்சி மாலுமிகளுக்குப் பயிற்சிகள் வழங்கப்படுவதுடன் கூட்டுபோர் ஒத்திகையும் மேற்கொள்ளப்படவுள்ளது. (உ)

# சக்விதி பிள்ளைகள் சர்வதேசப் பள்ளியில்; நுகேகொட மேலதிக நீதிவான் விளக்கம்

நிதிமோசடியிலீடுபட்ட சக்விதி ரணசிங்கவின் பிள்ளைகளிருவரும் நீதிமன்ற உத்தரவுக்கமைய சர்வதேசப் பாடசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். எனினும், இவ்விவகாரம் விமர்சனத்திற்கு உள்ளானதையடுத்து நுகேகொட மேலதிக நீதிவான் அநுர குமார ஹேரத் அது தொடர்பில் விளக்கமளித்துள்ளார்.

"சிறுவர் நன்னடத்தைப் பிரிவு அதிகாரி நீதிமன்றுக்குச் சமர்ப்பித்த அறிக்கையின் அடிப்படையிலேயே சக்வித்தியின் பிள்ளைகள் சர்வதேசப் பாடசாலைகளில் சேர்க்கப்பட்டனர். நீதிமன்றின் தேவைக்கேற்ப பாடசாலை அனுமதி வழங்கப்படவில்லை.

இதுவரை ஆங்கில மொழியில் கல்வி கற்று வந்துள்ள அவர்கள் தொடர்ந்தும் அம் மொழியிலேயே கல்வியைத் தொடர வேண்டும் எனப் பரிந்துரைக்கப்பட்டது.

அதற்கமைய அவர்கள் அனுமதிக்கப்பட்டனர். பெற்றோர் செய்த தவறுக்குப் பிள்ளைகளைப் பலிக்கடாவாக்க முடியாது. அவர்களை வேறு மொழியில் கற்க நிர்ப்பந்தித்தால் எதிர்காலம் பாதிக்கப்படும் என நன்னடத்தை அதிகாரி நீதிமன்றத்திற்குப் பரிந்துரை செய்திருந்தார்'' - இவ்வாறு நீதிவான் கூறினார். சக்விதியின் வழக்கு கடந்த திங்கட்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டது. (சி)

# இரணைமடுப் பகுதியில் சர்வதேச விமான நிலையம்

கிளிநொச்சி, இரணைமடுப் பிரதேசத்தில் 70 மில்லியன் ரூபா செலவில் சர்வதேச விமான நிலையம் ஒன்றை அமைக்க அரசாங்கம் தீர்மானித்திருப்பதாகத் தெரியவருகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளினால் பயன்படுத்தப்பட்ட விமான ஓடு பாதைகளை மையமாகக் கொண்டு விமான நிலையம் அமைக்கப்படவுள்ளது என்றும் குறித்த பிரதேசத்தில் புதைக்கப்பட்டிருந்த சுமார் பத்தாயிரம் நிலக்கண்ணி வெடிகள் அகற்றப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரணைமடுப் பிரதேசத்தில் தற்போதுள்ள விமான ஓடு பாதை 1.6 கிலோ மீற்றர் நீள முடையது. எனவும் இதனை 3 கிலோ மீற்றராக அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

புதிய விமான நிலையத்திற்கு அருகில் சுற்றுலாப் பயணிகளுக்கான விடுதிகளும் அமைக்கப்படவுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-9)

# ஈழத்தமிழரை வெளிநாடுகளுக்கு அனுப்ப முயன்ற தமிழக அரசியல்வாதி கைது!

இந்தியா,ஒக்.11

இலங்கைத் தமிழ் அகதிகளை பாண்டிச்சேரியில் இருந்து வெளிநாடுகளுக்கு அனுப்ப முயற்சித்த குற்றச்சாட்டில் தமிழக அரசியல்வாதி ஒருவர் உட்பட நால்வர் தமிழகப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அரியங்குப்பம் பஞ்சாயத்தின் தி.மு.க. உறுப்பினர் உட்பட நான்கு பேரையே புலனாய்வுத் துறையினர் கைதுசெய்துள்ளனர்.

சட்டவிரோதமாகக் ஆள்களை வெளிநாட்டுக்கு அனுப்ப முயற்சி நடப்பதாகக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்தே இந்த நான்கு பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சென்னையில் வசிக்கும் இலங்கைத் தமிழரான ராமு என்பவர் தமிழர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பும் முயற்சியில் படகு ஒன்றை வாங்குவதற்காக தி.மு.க. கட்சியைச் சேர்ந்த சக்திவேல் என்பவருடன் தொடர்பு கொண்டதாகப் பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. (உ-9)



கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற இஸ்லாமிய விழாவில் எடுக்கப்பட்ட படம்.

நிகழ்வில் வர்த்தக கைத்தொழில் அமைச்சர் ஜனாப் றிசாட் பதியூதீன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாப் உனைஸ் பாறூக் உட்பட விருந்தினர்களை அதிபர் வே.கா. கணபதிப்பிள்ளை, இஸ்லாமிய மன்றத் தலைவர் பிலால் மற்றும் விரிவுரையாளர்கள் வரவேற்கப்படுவதைப் படத்தில் காணலாம்.

# ஏனைய கைதிகளைப் போன்றே பொன்சேகாவும் நடத்தப்படுகிறார்

## அனோமா பொன்சேகா கவலை

கொழும்பு, ஒக். 11

''சிறைச்சாலையில் ஏனைய கைதிகள் போன்றே முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா நடத்தப்படுகிறார்.'' - என்று அனோமா பொன்சேகா கவலை வெளியிட்டுள்ளார்.

எனவும், அவரது உடல் நிலையைக் கருத்திற்கொண்டு நீதிமன்றம் அனுமதி வழங்கிய நிலையிலேயே அவருக்கு உடற்பயிற்சி இயந்திரம் வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது எனவும் அனோமா பொன்சேகா கூறியுள்ளார்.

பொன்சேகா உள ரீதியாகவும் உடல் ரீதியாகவும் ஆரோக்கிய நிலையில் இருக்கிறார் எனவும், சிறைச்சாலை உணவுகளை உட்கொள்கிறார் 'எனது கணவர் ஒரு வலிமையான மனிதர்' எனவும் அவர் கூறினார்.

அதேவேளை ஏனைய கைதிகளுக்கு தொலைக்காட்சி பார்க்கும் வசதி இருக்கும் நிலையில் தமக்கும் தொலைக்காட்சிப் பெட்டி வேண்டுமென சரத் பொன்சேகா கோரியுள்ளார் எனவும் அனோமா பொன்சேகா தெரிவித்தார். (சி)

# கொழும்பு தமிழ்ச்சங்கத்தில் வித்தியாரம்ப வைபவம்

கொழும்பு, ஒக்.11

நவராத்திரி விழாவை முன்னிட்டு கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் எதிர்வரும் 17 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு சிறார்களுக்கு வித்தியாரம்பம் செய்து வைக்கப்படும்.

தமிழ்ச் சங்கத்தலைவர் மு.கதிர்காம நாதன், துணைத்தலைவர் பேராசிரியர் சபா ஜெயராசா ஆகியோர் இதனைத் தொடக்கி வைப்பர்.

பிள்ளைகளுக்கு வித்தியாரம்பம் செய்யவிருக்கும் பெற்றோர் தமது பெயர்களை முற் கூட்டியே பதிவு செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (சி)

# சோயாஅவரை இறக்குமதிக்குத் தடை

கொழும்பு, ஒக். 11

உள்நாட்டு உற்பத்தியாளர்களின் நலன் கருதி வெளி நாட்டிலிருந்து சோயாஅவரை இறக்குமதி செய்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

நிதி திட்டமிடல் அமைச்சு இந்தத் தடையை விதித்துள்ளது.

சுகாதார அமைச்சின் திரிபோஷ பிரிவால் உள்நாட்டு உற்பத்தியைக் கொள்வனவு செய்தற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன என நிதி திட்டமிடல் அமைச்சின் செயலாளர் கலாநிதி பீ.பீ. ஜயசுந்தர தெரிவித்தார்.

தற்சமயம் உள்நாட்டில் குறிப்பாக ராஜரட்ட பிரதேச விவசாயிகள் தாம் அறுவடை செய்துள்ள சோயாஅவரையை சந்தைப்படுத்த முடியாமல் திண்டாடி வருகின்றனர்.

அவர்களுக்கு நிவாரணம் வழங்கும் முகமாக பல அமைச்சுகள் ஒன்றிணைந்து அவர்களிடமிருந்து கிலோ 85 ரூபாவுக்கு சோயாவைக் கொள்வனவு செய்து திரிபோஷ தயாரிப்பதற்கு ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

இந்தக் கொள்வனவுக்கு தேவைப்படும் நிதியை, நிதிதிட்டமிடல் அமைச்சு மூலம் வழங்கிட அரசு தீர்மானித்துள்ளது - இப்படி ஜயசுந்தர தெரிவித்தார். (சி)

# பிரதேச செயலாளர்கள் இருவருக்கு பதவியுயர்வு

யாழ்ப்பாணம், ஒக்.11

கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராக செ.ஸ்ரீனிவாசனும், முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராக சி.ஏ.மோகன்ராஸும் பதவி உயர்வு பெற்றுச் செல்கின்றனர்.

சாவகச்சேரி பிரதேச செயலாளராக செ.ஸ்ரீனிவாசனும், கோப்பாய் பிரதேச செயலாளராக சி.ஏ. மோகன்ராஸும் இதுவரை காலமும் கடமையாற்றி இருந்தனர்.

இவர்களின் இடங்களுக்கு நியமிக்கப்படவுள்ளவர்களின் பெயர்கள் இன்னும் அறிவிக்கப்படவில்லை என்று அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார். (ஒ-15-121)

# தமது லாபங்களுக்காக பொன்சேகாவை பயன்படுத்துகின்றன அரசியல் கட்சிகள்

## பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 11

''தமது அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காகவே கட்சிகள் சரத் பொன்சேகாவைப் பயன்படுத்திக்கொள்கின்றன'' - என்று பொருளாதார அபிவிருத்திப் பிரதி அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சரத் பொன்சேகாவிற்கு விதிக்கப்பட்ட தண்டனையை,பிழையான வகையில் அர்த்தப்படுத்தி நாட்டு மக்களையும் சர்வதேச சமூகத்தையும் திசை திருப்ப சில சக்திகள் முயன்று வருகின்றன.

சரத் பொன்சேகா விவகாரத்தைப் பயன்படுத்தி சிலர் அரசியல் லாபங்களை ஈட்டிக்கொள்ள முயற்சிக்கின்றனர்.

வேறு விடங்கள் எதனையும் பேச முடியாத காரணத்தால் ஜே.வி. பி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகியன சரத் பொன்சேகா கைது விவகாரத்தைப் பூதாகாரப் படுத்தி வருகின்றன.

சரத் பொன்சேகாவிற்கு ஆதரவாக லண்டனில் நடத்தப்பட்ட போராட்டங்களுக்குப் புலி ஆதரவு அமைப்புக்கள் ஒத்துழைப்பு வழங்கியுள்ளன.

அதேவேளை, லண்டனில் நடைபெற்ற எதிர்ப்புப் போராட்டங்களில் சரத் பொன்சேகாவின் பிள்ளைகளும் கலந்து கொண்டனர்.

சரத் பொன்சேகா ஓர் அரசியல் கைதி என அடையாளப் படுத்தி அதன் மூலம் அரசியல் கட்சிகள் பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றன.

- இப்படி அவர் தெரிவித்தார். (ஒ)

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:**



குடும்ப உறுப்பினர்கள் இடையே நிலவி வந்த பிரச்சினை ஒன்று சுமுகமாக முடிவுக்கு வரும். சுபச் செலவுகள் அதிகரிக்கும். எதிர்பாராத வழிகளில் சில உதவிகள் கிடைக்கலாம். வாகன யோகத்திற்கு வாய்ப்பு உண்டு. பெரிய மனிதர்களின் ஆசிகளைப் பெறுவீர்கள். பொழுது போக்கு உல்லாச விடயங்களில் நாட்டம் செல்லும்.

**இடபம்:**



மற்றவர்களுக்கு ஒரு முன்மாதிரியாக செயற்படுவீர்கள். நண்பர்கள் சிலர் தங்களின் மனக்குறைகளை உங்களிடம் சொல்லலாம். மாமன், மைத்துனர்களிடம் உதவிகள் கேட்கலாம். அவசரச் செலவு ஒன்றை சமாளிக்கப் பிறரிடம் கைமாற்று வாங்கலாம். ஆர்ப்பாட்டம் இல்லாமல் அமைதியாகச் செயற்படுவீர்கள். உறவுகள் வலுக்கும் நாள்.

**மிதுனம்:**



கணவன் மனைவி இடையே சிறு சச்சரவுகள் ஏற்படலாம். தொலைபேசியில் உங்களிடம் பேச விரும்பும் ஒருவரிடம் நீங்கள் பேச விரும்பாமல் தவிர்க்கலாம். பிரியமான ஒருவருக்காக கணிசமான பணத்தை செலவிடலாம். நண்பர்கள் சிலர் தங்களின் காரியத்தை சாதிக்க உங்களின் உதவியை நாடலாம். தேவையற்ற பயம் ஆள்கொள்ளும்.

**கடகம்:**



இரண்டு மூன்று நாள்களாக தள்ளிப் போன காரியம் ஒன்று இன்று நடக்கலாம். மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். உறவினர்கள் சிலர் தாங்கள் செய்ய வேண்டிய வேலை ஒன்றை உங்களின் தலையில் சுமத்தி விடலாம். சிலர் தன் தகுதிக்கு மீறி செயற்படுவதை பார்த்து எரிச்சல் அடைவீர்கள். நீண்ட தூர பயணங்கள் செல்லப் போட்ட திட்டம் நிறைவேறும்.

**சிங்கம்:**



செலவில் சிக்கனம் காட்டுவீர்கள். கணவன் மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். குடும்ப உறுப்பினர்களுக்கு தெரியாமல் தந்திரமாக சில காரியங்களைச் செய்வீர்கள். பால்ய நண்பர் ஒருவரின் சந்திப்பு நிகழும். நீண்ட நாள்களாக செல்ல நினைத்த ஒரு இடத்திற்கு செல்லலாம். மனதில் உற்சாகம் குடிகொள்ளும்.

**கன்னி:**



என்னதான் திறமையாக செயற்பட்டாலும், அதை சிலர் குறை சொல்லலாம். பழைய பொருள்கள் சிலவற்றை மாற்றி புதிய பொருள்கள் வாங்குவீர்கள். மாற்று மொழி பேசுவோரை நம்பி ஒப்படைத்த வேலைகள் முடிவடையாமல் போகலாம். வீட்டுக்குத் தேவையான பொருள்கள் வாங்கிக் கொடுப்பீர்கள். சோர்வு, சோம்பல் ஆள்கொள்ளும்.

**துலாம்:**



உல்லாசமான செயல்பாடுகளை தவிர்க்க வேண்டிய நாள். மனதில் இனம்புரியாத சந்தோஷம் குடிகொள்ளும். ஒருவர் மீதுள்ள கோபத்தை மற்றவர்களிடம் காண்பிப்பீர்கள். நீண்ட நாள்களாக உங்களுடன் பேசாத உறவினர் ஒருவர் உங்களைத் தொடர்பு கொண்டு பேசலாம். சிலருடன் வெளியிடங்களுக்குச் செல்லும் சூழ்நிலை உருவாகும்.

**விருச்சிகம்:**



சிறிய வேலை ஒன்றுக்கு பலமுறை அலைய நேரிடலாம். மன அமைதியைப் பாதிக்கும், வெறுப்பை உண்டாக்கும் சம்பவங்கள் நடக்கலாம். நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களைத் தேடி வரலாம். உங்களுக்கு வேண்டிய உறவினர் ஒருவருக்காக நண்பர்களிடம் உதவி கேட்கலாம். வீண் பிடிவாதங்களால் மற்றவர்களின் அதிருப்திக்கு ஆளாகலாம்.

**தனுசு:**



புதிய அனுபவங்களைப் பெறலாம். நெடுநாள்களாக வராமல் இருந்த கடன் மிகுதி ஒன்று திடீரென வரலாம். எடுத்த காரியத்தை எப்படியாவது முடிக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருப்பீர்கள். சிறிய வரவு ஒன்றை எதிர்பார்த்து செய்த வேலையில் கணிசமான ஆதாயம் பெறலாம். விருப்பமான உணவு வகைகளைச் சாப்பிடுவீர்கள்.

**மகரம்:**



எதிலும் தன்னிச்சையாக முடிவுகள் எடுத்து சாதனை படைப்பீர்கள். பொறுப்புகளால் போராட்டமான நிலைமை காணப்படும். உறவினர் ஒருவரின் வீட்டிற்கு முக்கிய வேலையாகச் செல்லலாம். குடும்ப உறுப்பினர்களின் விருப்பங்களை நிறைவேற்றுவதில் அக்கறை காட்டுவீர்கள். வெளியூரில் இருந்து வரும் சிலருக்காகக் காத்திருக்கலாம்.

**கும்பம்:**



சில விடயங்களில் தந்திரமாக செயல்பட நினைப்பீர்கள். பயணங்கள் அனுகூலமாக அமையும். குடும்ப விடயங்களைப் பற்றி மற்றவர்களிடம் விவாதிக்க வேண்டாம். உறவினர்கள் சிலர் உங்களிடம் தங்களின் பெருமைகளைச் சொல்லலாம். முக்கியமான ஒரு விடயத்திற்காக கணிசமான பணத்தைச் செலவிடலாம்

**மீனம்:**



கடினமாக முயற்சித்தும் சில வேலைகள் முடியாமல் போகலாம். பெரிய மனிதர்கள் சிலர் உங்களின் மனம் நோகும் வகையில் பேசலாம். குறுக்கு வழி சிந்தனைகளை தவிர்க்க வேண்டும். எப்படியும் உதவுவதாகச் சொன்ன நண்பர்கள் கடைசி நேரத்தில் கையை விரிக்கலாம். மற்றவர்களைப் பார்த்துப் பொறாமை, ஆதங்கப்படுவீர்கள்.

# யாழ். பாடசாலைகளின் புலமைப் பரிசில் முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஒக்.11

2010ஆம் ஆண்டு, தரம் 5 புலமைப்பரிசில் பெறு பேறுகள் அண்மையில் வெளிவந்துள்ளன. எனவே சித்தியடைந்த மாணவர்களின் விவரங்களை உதயன் தொடர்ச்சியாக வெளியிட்டு வருகிறது. ஒரு தொகுதி மாணவர் விவரம் வருமாறு:

**சாவகச்சேரி மகளிர் கல்லூரி**

இராஜதுரை சஜிதா- 162,தெய்வேந்திரன் பிரணவன்- 160, சிவரஞ்சன் அபாமா- 158, பிரபாகரன் தனுஷ்- 150, இளங்குமரன் சில்வியா- 149, அருட்பிரகாசம் றோசிதா- 143.

**மீசாலை வீரசிங்கம் ம.வி**

அச்சுதன் கீர்த்தனன்- 185, தம்பிராசா தனுஜன்- 143, ஜெயரூபன் குணரூபா- 161, ஸ்ரீதரன் கீர்த்தனா- 157, ரவிச்சந்திரன் லக்சிகா- 156, மாணிக்கராசா சபீதா- 146, ஸ்ரீகாந்தன் அருள்ராஜ்- 168, கோடீஸ்வரன் மலரவன்- 153, சண்முகம் பிரசாந்த்- 149.

**கைதடி நுணாவில் அ.த.க.பாடசாலை**

மயூரன் அரூன்- 143.

**மட்டுவில் கமலாசனி வித்தி**

தெய்வேந்திரன் சஜீகா- 151.

**மட்டுவில் வடக்கு அ.த.க.பாடசாலை**

குலம் நிஸ்மியா- 146.

**மட்டுவில் தெற்கு அ.மி.த.க. வித்தி.**

குகதாஸ் கஜனி- 160.

**மட்டுவில் தெற்கு சாந்தநாயகி வித்தி.**

சிவாஜி சிவானி- 143.

**சரசாலை ஸ்ரீகணேசா வித்தி.**

விஷ்ணுகுமார் கபிலன்- 143, சின்னத்தம்பி நிதுஷா- 144.

**கைதடி முத்துக்குமாரசாமி ம.வி**

விக்னேஸ்வரன் சோபிகன்- 143, ராஜேந்திரன் விதுர்ஷன் 163, தெய்வயோகநாதன் சருஜா- 155.

**கைதடி சேதுகாவலர் வித்தி**

சிவானந்தன் அகிலன்- 157.

**கைதடி விக்னேஸ்வரா வித்தி.**

சிவராசா நிதர்சன்- 160, முத்துலிங்கம் அபிராஜ்- 151.

**கைதடி - நாவற்குழி அ.த.க.பாடசாலை**

அருட்பிரகாசம் ரேணுஷா- 144.

**நாவற்குழி ம.வி**

சரவணமுத்து நிதர்சன்- 143.

**கச்சாய் அ.த.க.பாடசாலை**

மகேந்திரன் கம்சாயினி- 145, தவயோகராசா தர்ஷாளங்கி- 153.

**மிருசுவில் அ.த.க.பாடசாலை**

தவநாதன் ஜீவிதா- 150

**விடத்தற்பளை கமலாசனி வித்தி.**

சிவஞானலிங்கம் யாதவன்- 178.

**கரம்பை அ.மி.த.க.பாடசாலை**

வசந்தரூபன் சானுஜன்- 151.

**குடமியன் அ.த.க.பாடசாலை**

சிவகுருநாதன் தர்மிகா-147.

**வரணி ம:வி**

ஜெகநாதன் அர்ச்சயா- 150.

**மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தி.**

ஸ்ரீராஜசிங்கம் பிரதீப்- 149, லோகேந்திரகுமார் தட்சரூபா- 148.

**புற்றளை மகா வித்தி.**

மா.நவநீதன்- 169, ஜே. விபுலன்- 144, த.ராகவன்- 163, செ.வேணுஜன்- 163, கு. திவ்யா- 157, ம.மதன்- 166, மா. சாருஜா- 154, பூ கீதாஞ்சலி- 150, பா. ஜபுகிரி- 145, ஞா.ஜெயசிகா- 142.

**கொற்றாவத்தை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை**

ஜே.ஓவியா- 150, சி.அனுஷா- 145, ஜே. அர்த்தனன்- 162.

**துன்னாலை மேற்கு மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை**

பு.மாலன்பன்- 171, சி.சிவந்தினா- 161, வி. ஹம் சிகா- 155, க. கவிதன்- 154, மு. யாழினி- 144.

**பொலிகண்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை**

சி.நிரோஜன்- 155, வ. ரேணுகா- 150, அ.கார்ஸ்ரோ- 145.

(201-207-236)

# வாழ்வின் பொருள்



முன்னொரு காலத்தில் இந்தியா ரயில்வேயில் சாதாரண வேலை செய்தவருக்குப் பாராட்டு விழா. வேலையிலிருந்து ஓய்வுபெறும் நாளும் அன்றுதான். வாழ்வில் பல தலைவர்கள் எல்லாம் வந்திருந்தார்கள். அவரைப் பற்றித்தான் பேசினார்கள். இருந்தாலும் எல்லோருக்கும் இந்த அளவுக்குப் பெரிதாக விழா நடந்ததில்லை.

என்ன காரணம் என இவரைப் பற்றி பேசும் போதுதான் புரிந்தது. ஒருவர் பேசினார்.

''இன்று ஓய்வுபெறுபவர் சாதாரணமானவரல்லர். கடமையில் கண்ணாக இருந்தவர். தவறேவிட்டதில்லை. ஒருநாள் கூட விடுமுறை எடுத்ததில்லை. இது பெரிய சாதனை!''

இரண்டாவது நபர் பேசினார்.

'' அவர் இந்த வேலையில் எப்படி சேர்ந்தாரோ அப்படியே கடைசி வரை இருந்தவர். பதவி உயர்வு கூட கிடைக்கவில்லை. மனம் சலிப்படையவில்லை. தன் கடமையைச் செய்தவர் இவர்''

மூன்றாவது நபர் பேசினார்,

''ஒரு சமயம் இவரின் மனைவிக்கு நோய் ஏற்பட்டது. அந்தச் சமயத்தில் வைத்தியசாலையில் சேர்த்துவிட்டு நேராக வேலைக்கு வந்துவிட்டார்''

அவரோட வேலை என்ன தெரியுமா?

தினமும் ரயில் வேஸ்டேஷனுக்கு வருவார். கையிலே ஒரு சுத்தியலோ, இரும்புத்துண்டோ வைத்திருப்பார். நடைமேடையில் வந்து இருப்பார். ரயில் வந்து நிற்கும்.

உடனே இவர் தன் வேலையை ஆரம்பிப்பார். அதாவது ரயில் இன்ஜினில் லே ஆரம்பித்து ஒவ்வொரு பெட்டியா பார்த்து வருவார்.

ஒரு பெட்டியும் இன்னொரு பெட்டியும் இணையும் இடத்திற்குப் போவார். சுத்தியலாலே 2 தட்டு தட்வார். மறுபடியும் வருவார். அடுத்த 2 பெட்டிக்குக்கும் நடுவிலே போவார். வழக்கம் போல தட்டுவார். இதுதான் அவருக்கு ஒப்படைக்கப்பட்ட வேலை! இதை அவர் ஒழுங்காகச் செய்தார்.

இந்த வேலையை அவர் கடைசி வரை தவறாமல் செய்து முடித்தார், அதனாலேயே அவருக்கு இந்தப் பாராட்டு விழா.

விழா நாயகன் பேச ஆரம்பித்தார்.

'' எல்லோரும் என்னை அளவுக்கு அதிகமாக புகழ்ந்து பேசுகிறீர்கள்.

ஏதோ என் கடமையைச் செய்தேன்! அதற்கு சம்பளம் வாங்கினேன்.

இதற்கு இவ்வளவு பெரிய விழா தேவை இல்லை என்பது எனது அபிப்பிராயம்.

ஆனாலும் ஒரு சந்தேகத்தைச் சொல்ல வேண்டும் என நினைக்கிறேன். உண்மைதான்.

ஒவ்வொரு ரயில்வேயிலும்- ஒவ்வொரு பெட்டியினையும் தவறாமல் போய் தட்டியிருந்தேன்.

ஆனால் ஒரு விடயம். ஏன் அப்படித் தட்டினேன் என்பது இந்த நிமிடம் வரைக்கும் எனக்குத் தெரியாது. தட்டச் சொன்னார்கள் தட்டினேன்''

எப்படி இருக்குது இது!

இந்தக் கதை யாருக்கு என்று நினைக்கிறீர்களா. ஏன் வாழுகிறோம் எனத் தெரியாமலே இந்த உலகத்திலே வாழ்பவர்கள் சிலபேர் உண்டு. அவர்களுக்காக.

**கோ.சுவாமிநாதன்.**

# மரங்கள் நமது வரங்கள்

மரத்தை 'தரு' என்பது பழைய தமிழ் மரபு. நிழல் தரும், மழை தரும் , காய் தரும், கனி தரும், காற்றும் தரும், காய்ந்து வீழ்ந்தாலும் விறகு தரும்.இப்படித் தருவதால் தான் அதன் பெயர் தரு.

வள்ளி திருமணப் பகுதியில் அழகான காட்சி ஒன்று. தினைப்புலத்தில் வள்ளி நிற்கிறாள்.வேடுவ வடிவில் வந்த முருகன் காதல் மொழி பேசியும் வள்ளி கனியவில்லை . தந்தை நம்பிராயன் அங்கு வந்துவிட்டான். தப்பிப் பிழைக்கு படி முருகனிடம் மன்றாடிக் கேட்கிறான். அவன் நகரவில்லை. நம்பிராயர் நெருங்கி வரும் போது என்ன அதிசயம் முருகன் நின்ற இடத்தில் வேங்கை மரம் நின்றது. இந்த மரம் முன்பு இங்கு இல்லையே எப்படி வந்தது என்றான் நம்பிராயன். எப்படி வந்தது என்று தெரியாது ஆனால் எனக்குத் தோன்றாத் துணையாக இருக்கிறது இருக்கட்டும் என்றாள்.



வெட்டுவதையே தொழிலாகக் கொண்ட வேடுவரே வெட்டாதா போது மற்றவர்கள் வெட்டலாமா?கண்ண பிரானுக்கு அரச மரம், போதி மரத்தடியில் புத்தர் ஞானம் பெற்றார். புளிய மரத்தடியில் நம்மாழ்வார் ஞானம் தந்தார். குரு, மரத்தடியில் குருவைக் கண்டார். இப்படி ஞானிகளுக்கே நிழல் கொடுத்த பெருமைமிகு மரங்களை நாம் வெட்டலாமா?

**சுகி.சிவம்.**



# துயரைச் சுமந்தபடி கண்ணீரோடு காத்திருக்கிறார்கள்

**போர்** தன்னுடைய எல்லாக் கோரமுகங்களோடும் வன்னியில் விஸ்வரூபமெடுத்திருந்ததால், அதனால் உண்டான அழிவுகளும், அழுகைகளும் இன்னும் நின்றபாடாயில்லை. வன்னியில் நல்லிணக்க ஆணைக்குழுவின் இரண்டாம் நாளின் முதலாவது அமர்வு முடிவுற்ற கண்டாவளையில் இருந்து பெருக்கெடுத்த கண்ணீர் பூநகரிக்கு நாங்கள் செல்லும் வரை எம்மைப் பின்தொடர்ந்து கொண்டே இருந்தது. எல்லோருமே இழப்பின் உச்சக்கட்டத்தில் இருந்தார்கள்.முகாமுக்குள் இருந்தபோது தங்கள் சொந்தங்களின் இழப்புகள் குறித்து இவர்கள் வாய் பேசமுடியாதவர்களாக, நாக்கறுபட்டவர்களாகக் கட்டுண்டு இருந்தார்கள். தாம் ஏதாவது சொல்லப்போய். அது தடுத்துவைக்கப்பட்டிருக்கும் தமது உறவுகளுக்குத் தேவையற்ற சிக்கல்களைத் தோற்றுவித்துவிடுமோ என்ற பயமும் இவர்களிடம் இருந்தது. எப்படியும் பிடித்தவர்கள் விட்டுவிடுவார்கள் என்ற நம்பிக்கைதான் நலன்புரி நிலையத்தில் இருக்கும்போது இந்த மக்களுக்கு ஆறுதல் தந்துகொண்டிருந்த விடயம். ஆனாலும் கானல் நீரைத் துரத்துகின்ற கதையாக 'இதோ வந்துவிடுவார்கள், அதோ வந்துவிடுவார்கள்' என்று ஒவ்வொரு நாளும் தமது உறவுகளின் வருகையை எதிர்பார்த்து விழிகள் பூத்ததுதான் மிச்சம். யாருமே வரவில்லை. குறித்த தொகையான முன்னாள் போராளிகள் சிலரே விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள்.



காணாமல் போன உறவுகளை இந்தக் கடிதங்கள் மீட்டுத் தருமா?

நீண்ட வெளிகளையும் ஆள்களற்ற சூனியப் பகுதிகளையும் தாங்கியபடி விரிந்து கிடந்த மனிதவாசனைக்காக ஏங்கி நிற்கின்ற, பூநகரிக்குச் செல்லும் பாதை முழுதும் கண்ணீர் மனிதர்களையே மீளவும் கண் முன் நிறுத்தியது.

கடைசிச் சண்டை நிகழ்ந்த போது, காணாமல் போன தன் மகளின் புகைப்படத்தை தாங்கியவாறு கண்டாவளையில் அழத்தொடங்கிய தந்தை ஒருவரின் கண்ணீர் இப்போதைக்கும் அடங்கியிருக்காது. அவர் பெயர் புண்ணியசிங்கம். தன்னுடைய 16 வயது மகளான அகிலாவைத் தொலைத்துவிட்டு சிறுபிள்ளைபோல தேம்பித் தேம்பி அழுது கொண்டிருந்தார். பலவந்தமாக இயக்கத்தில் இணைக்கப்பட்ட அகிலா புளியம்பொக்கணையில் நடந்த சண்டையில் காயமடைந்த தகவல் மட்டுமே இவர்களுக்கு இறுதியாகக் கிடைத்திருக்கிறது. அதன் பின்னர் மகள் பற்றிய எல்லாத் தொடர்புகளும் அறுபட்டுப் போயின. அன்றைக்கு அழத் தொடங்கியவர் தான். இன்னமும் அழுது கொண்டேயிருக்கிறார்.

நலன்புரி நிலையத்தில் தங்கியிருந்த போது யாருக்கும் தெரியாமல் வீட்டுக்குள் மட்டுமே - இந்தக் குடும்பத்தால் காணாமல் போன மகளை நினைத்து - மௌனமாக அழ முடிந்திருக்கிறது. பெருங்குரல் வைத்தழுதால் இருக்கின்ற ஏனைய பிள்ளைகளுக்கும் ஆபத்து. அதேவேளை இயக்கத்தில் மகள் இருந்ததாகச் சொன்னால், சில வேளைகளில் பிடிபட்டுப்போன மகள் வேறுமாதிரியான கதைகளைத் தன்னைப் பிடித்தவர்களிடம் சொல்லியிருந்தால் அது அவளின் உயிருக்கே ஆபத்தாகிவிடும் என்று அஞ்சினார்கள். சித்திரவதைகளில் இருந்து தப்புவதற்காக பிடிபட்ட போராளிகள் பலரும் தாம் ஆயுதப்பயிற்சி பெற்றவிடயத்தைப் பெரும்பாலும் ஒத்துக்கொள்வதில்லை எனவும், இந்நிலையில் அவர்கள் பலவந்தமாகப் பிடித்துச்செல்லப்பட்டு ஆயுததாரிகளாக மாற்றப்பட்ட உண்மையைச் சொல்லப்போனால் அது எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்திவிடும் என்ற அச்சம் எல்லோரிடமும் உள்ளூர உறைந்திருந்தது. ஆனாலும் நலன்புரி நிலையத்தில் இருந்த போது அடக்கி வைத்திருந்த வேதனைகள் யாவும் நல்லிணக்க ஆணைக்குழுவின் முன்னால் கட்டுடைத்துப் பாய்ந்து கொண்டிருந்தன. மறந்தும் கூட தம் பிள்ளைகள் இயக்கத்தில் இருந்தார்கள் என்றோ, அவர்களைப் பலவந்தமாக அமைப்பில் சேர்த்த கதைகளையோ சொல்ல முடியாமல் இருந்தவர்கள், இப்போது எதற்கும் துணிந்தவர்களாக மாறிவிட்டார்கள். அழுதழுது உறைந்து போன கண்ணீர்த்துளிகள் இத்தகைய ஒரு வைராக்கியத்தை அவர்களிடத்தே உண்டு பண்ணிவிட்டன. கண்ணீர் கல்லைக் கரைப்பது மட்டுமல்லாது இளகிய மனதுகளை இரும்பாக்கவும் வல்லது. ஒரே நேரத்தில் நேரெதிர்த் தன்மையாக காரியங்களை விழிநீர் ஆற்றக்கூடியது.

மனக்காயங்களை எத்தனை நாளைக்குத் தான் மூடி வைக்க முடியும்? நாளாக நாளாகக் காயங்கள் பெருகுமே தவிர மறையாது. இனிமேலும் பொறுக்க முடியாது. வாய் மூடி மௌனிகளாகத் தொடர்ந்தும் இருந்தால் ஒருபோதுமே தமது உறவுகளைக் காணவே முடி யாது என்ற உண்மையும் உரத்துக் குரல் கொடுப் பதன் மூலமே ஓரளவுக் கேனும் அவர்களைக் கொண்டு வருவதற் கான சாத்தியக் கூறுகளை உருவாக்க முடியும் என்பதுவும் அவர்களுக் குப் புரிந்து விட்டது. அந்தப் புரிதலே இதுநாள் வரையும் விசும்பலாக அவர்களு டைய வீடுகளுக் குள் மட்டுமே ஊற்றெடுத்த கண்ணீர் ,நல்லிணக்க ஆணைக்குழுவின் அமர்வுகளின் போது உலகெங்கும் தெரியும்படி பெருகி ஓடத் தொடங்கியது.



மகள் அகிலாவைக் காணாது அழுது தீர்க்கும் தந்தை

பூநகரியிலும் மதியத்தின் உக்கிரத்தையும் மீறிக்கொண்டு - காணாமல் போனோரின் உறவுகளின் - கண்ணீர் மழை பொழியத் தொடங்கியது. திரும்பும் இடமெல்லாம் விழிநீரோடு அலைகின்ற மனிதர்கள். ஆனாலும் அவர்கள் எல்லோரிடத்திலும் என்றைக்கோ ஒருநாள் தம் உறவுகள் வருவார்கள் என்ற நம்பிக்கையின் சிறுதுளி ஒட்டியிருந்ததையும் அவதானிக்கமுடிந்தது. முன்னர் பார்த்தது போலவே எல்லோர் கைகளிலும் கடிதங்களும், புகைப்படங்களும். இங்கும் பலருக்கு கடிதம் எழுதுவது எப்படியென்று தெரிந்திருக்கவில்லை. வெற்றுக்காகிதங்களுடன் ஆங்காங்கே நிறுத்தப்பட்டிருந்த வாகனங்களை மேசைகளாக்கி பரபரப்புடன் தமது மனப்புழுக்கங்களை வரிகளின் வழியே கொட்டித்தீர்த்துக் கொண்டிருந்தனர்.

இருபது வயதுக்குட்பட்ட இரு சகோதரிகள் கைகளில் கடிதங்களுடன் பூநகரிப்பிரதேச செயலகத்தினுள் வழங்கப்பட்டுக்கொண்டிருந்த சாட்சியங்களை உன்னிப்பாகப் பார்த்துக்கொண்டிருந்தனர். அவர்களில் மூத்தவரின் நெற்றியில் குங்குமப்பொட்டு. சிறுவயதிலேயே திருமணம் முடிக்கவேண்டிய கட்டாயத்தை காலமும், போரும் அவளுக்கு ஏற்படுத்தியிருக்கின்றன.

''இயக்கம் எல்லாரையும் பிடிச்சுக் கொண்டு போறதால கனபேர் இளம் வயதிலேயே கலியாணம் முடிச்சிட்டினம். நானும் படிச்சுக்கொண்டிருக்கேக்கதான் கலியாணம் கட்டினனான்.எண்டாலும் அவங்கள் பிடிக்கிறதை நிப்பாட்டேலை. எவ்வளவு நாள்தான் ஒளிச்சிருக்க முடியும். ஆமி முன்னேறிக்கொண்டு வர, வர நாங்கள் இருக்கிற இடமும் சின்னனாகிக் கொண்டே வந்தது. அது ஆக்களைப் பிடிக்க இன்னும் வசதியாப் போட்டுது. அப்பிடித்தான் என்ர அவரும் பிடிபட்டவர். பிறகு அவர் எங்கையெண்டு தெரியாது. ஆமியிட்ட பிடிபட்டிருக்க வேணும். (பக்கத்தில் இருந்த சகோதரியைச் சுட்டிக்காட்டி) இவா என்ர தங்கச்சி. அப்பாவோட இருந்தவா. சண்டை நேரத்தில அப்பாவுக்கு காலில காயம். கடைசிநேர அமளிக்குள்ளால அவரைப் பாதுகாப்பாகத் தூக்கிக் கொண்டு வரமுடியேலை. அதாலை அவரை ஆமியிட்ட ஒப்படைச்சம். இப்பதான் தெரியுது அது எவ்வளவு பிழை எண்டு. அப்பாவுக்கு வயசு 54. ஆனா அவரையும் இவங்கள் என்னவோ செய்து போட்டாங்கள். எங்கட கண்ணுக்கு முன்னால அப்பாவைப் பொறுப்பெடுத்தவங்கள் இப்ப அப்படியான ஒரு ஆளை தாங்கள் கையேற்கவில்லை எண்டு சத்தியம் செய்யாத குறையாச் சொல்றாங்கள்.பேசாமல் கொஞ்சம் கஷ்ரப்பட்டாலும் பரவாயில்லை எண்டு அப்பாவைக் கொண்டந்திருக்க வேணும். எங்கட அப்பாவை நாங்களே கையால குடுத்திட்டு அந்தரிக்கிறம். கட்டினவரும் இல்லை. அப்பாவும் இல்லை. இப்படி உலகத்தில வேற எங்க கொடுமை நடக்கும்?''

எல்லோரையும் போலவே அந்தப் பெண்ணின் கதையும் கண்ணீருடன்தான் சொல்லப்பட்டது. இன்னும் நிறையக் கண்ணீர்க் கதைகள். தமது கதைகளைக் கேட்டு ஆறுதல் சொல்வதற்கேனும் யாராவது கிடைக்கமாட்டார்களா? என்று ஏங்கியபடி அவர்கள் தொடர்ந்தும் அலைந்தபடியே இருந்தனர். கண்ணீர் மனிதர்களிடம் இன்னொரு ஆதங்கமும் பரவலாக வெளிப்பட்டது.

**ஒள்ண்யன் டிலீப்**

''எங்கட பிள்ளையளை 'வைபோஸா' (பலாத்காரமாக) நாங்கள் கதறக் கதற பிடிச்சுக் கொண்டு போனவங்களையெல்லாம் விட்டிட்டாங்கள். ஆனா எங்கட அப்பாவிப்பிள்ளையள மட்டும் தடுப்பில வைச்சிருக்கிறாங்கள். அநியாயங்கள் செய்தவர்கள் - தங்களது பிள்ளைகளை வலுக்கட்டாயமாக ஆயுததாரிகளாக மாற்றுவதில் சூத்திர தாரியாக நின்றவர்கள் - நிம்மதியா இருக்க ஒண்டுமே தெரியாத அப்பாவியளை மட்டும் வதைக்கிறாங்கள்''

இந்த ஆதங்கத்தைப் பலர் துணிந்து சொல்லத்தொடங்கி விட்டார்கள். சிலர் வாய்மொழியிலான சாட்சியத்தின் போதும் இதனைப் பதிவு செய்யத்தவறவில்லை. ஆணைக்குழுவின் அமர்வு முடிந்தது, வெள்ளை வாகனங்கள் புழுதியைக் கிளப்பிக்கொண்டு, தம் பாதையில் பறக்கத்தொடங்கின. இப்படி அடுத்த



உறவுகள் கிடைக்கும்வரை அவர்களின் அடையாள அட்டைகளோடு அலைதலே இவர்களின் வாழ்வோ?

முறையும் வரப்போகின்ற ஏதோ ஒரு ஆணைக்குழுவுக் காகவோ. விசாரணைக்குழுவுக்காகவோ மீண்டும் கண்ணீர்க் கதைகளுடனும் கனத்த மனதுடனும் வெள்ளைக்காகிதங்கள், புகைப்படங்களுடனும் விழி நீர் வற்றும் வரை காத்திருக்கத் தொடங்குகிறார்கள் துயரை மட்டுமே சுமக்க நிர்ப்பந்திக்கப்பட்ட கண்ணீர் மக்கள்.

***

# விவசாய ஆய்வு மாநாட்டுக்கு ஆக்கங்கள் கோரப்படுகின்றன

கண்டி, ஒக்.11

பேராதனை பல்கலைக்கழக விவசாய பட்டப்பின்படிப்பு நிறுவனத்தின் வருடாந்த ஆய்வுமாநாடு எதிர்வரும் நவம்பர் மாதம் 25, 26 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

கன்னொருவ விவசாயத் திணைக்கள தாவர மரபுரிமை நிலையத்தில் மாநாடு நடைபெறும். இந்த ஆய்வு மாநாட்டுக்கான ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன. (சி)


## லைடன் புடைவை நிலையம்

இல.410, ஆஸ்பத்திரி வீதி (பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்

அதிரடி விலைக்கழிவு 11.10.2010 - 05.11.2010 வரை

எமது அன்பிற்கினிய வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க

தீபாவளியை முன்னிட்டு

ஆடவர், பெண்களுக்கான அனைத்துத் துணி வகைகளுக்கும் கழிவுண்டு.

ரெடிமேட் ஆடைகளுக்கு அதிகூடிய கழிவு உண்டு.


## மணிவிழா வாழ்த்துக்கள்



திருமதி

யோ.கணேசபிள்ளை அவர்கள்

(கணிதபாட ஆசிரிய ஆலோசகர், தென்மராட்சிக் கல்வி வலயம்)

கண்ணென விளங்கும் கணித பாடத்தை
பொன்னெனப் புகுத்திப் பொருத்தமுறவே
கண்ணியமான கணிதபாட ஆலோசகராய்
எண்ணம் வென்று இதயம் கவர்ந்தனை
மண்ணில் நூறு ஆண்டுகள் வாழி!

கணிதபாட ஆசிரியர்கள்,
தென்மராட்சிக் கல்வி வலயம்.

(F/571823)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



ஜே.எவ்.எக்ஸ்.செல்வநாயகம்

(முன்னாள் உதவி அரசாங்க அதிபர், நெடுந்தீவு, ஊர்காவற்றுறை)

நெடுந்தீவைச் சேர்ந்த ஜே.எவ்.எக்ஸ் செல்வநாயகம் அவர்கள் 06.10.2010 யாழ். பல்கலைக்கழகத்தில் அதி விசேட சித்தியில் பிராந்திய திட்டமிடல் முதுமாணி (Regional Planning) பட்டம் பெற்றமைக்காக அவரைப் பாராட்டி வாழ்த்துவதுடன் மேலும் பல பட்டங்களைக் பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
நண்பர்கள்
சி.வீரகத்திப்பிள்ளை சட்டத்தரணி,
எஸ்.கோபாலசிங்கம், வே.சுந்தரலிங்கம்,
எஸ்.கணபதிப்பிள்ளை.

நெடுந்தீவு. (F/571825)

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி இலக்கங்கள்

1232 சிகப்பு

கும்பம் 08 25 42 44 08-10-2010

ஜக்பொட் பரிசு ரூபா. 5,996,900/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 229,167 | 20/- | 4,583,340/- |
| 2 இலக்கங்கள் | 21,094 | 40/- | 843,760/- |
| 1 இல. + லக்கினம் | 20,868 | 60/- | 1,252,080/- |
| 2 இல. + லக்கினம் | 1,916 | 200/- | 383,200/- |
| 3 இலக்கங்கள் | 559 | 1000/- | 559,000/- |
| 3 இல. + லக்கினம் | 57 | 10,000/- | 570,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 5,996,900/- | - |
| பிரதான சீட்டிழுப்பில் பரிசுகளின் மொத்தம் | | | 8,791,380/- |
| இரண்டாம் வாய்ப்புக்கான பரிசுகள் | 619 | | 608,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 274,283 | | 9,399,380/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகைரூபா 6,509,025/-

### இரண்டாவது வாய்ப்பு

வெற்றி இலக்கங்கள்

கன்னி 01 05 17 45

ஜக்பொட் பரிசு ரூபா. 1,100,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 3 இலக்கங்கள் | 616 | 500/- | 308,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 100,000/- | 300,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 1,100,000/- | - |
| இரண்டாவது வாய்ப்புக்கான மொத்தத் தொகை | 619 | | 608,000/- |

அடுத்த வெள்ளிக்கிழமைக்கான இரண்டாவது வாய்ப்பின் ஜக்பொட் ரூபா.1,200,000/-

# உலோகப் பொருள்களின் ஏற்றுமதிக்கு ஜனாதிபதி ஆறுமாதத் தடை விதித்தார்

கொழும்பு,ஒக். 11

உலோகப் பொருள் ஏற்றுமதியை ஆறுமாத காலத்துக்குத் தடை செய்ய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.

உள்நாட்டு சிறுகைத்தொழில் உற்பத்தியாளர்களின் நன்மைகருதி இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அரச திணைக்களங்கள் மற்றும் நிறவனங்களில் வெளியேற்றப்படும் இரும்பு அல்லாத உலோகக் கழிவுகளை இலங்கை தொழில்நுட்ப அபிவிருத்திச் சபைக்கு வழங்க அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

பாரம்பரிய கைத்தொழில் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பித்திருந்தார்.

அமைச்சரவைப் பத்திர அங்கீகாரத்தை அடுத்து ஜனாதிபதி உலோகப் பொருள் ஏற்றுமதியை ஆறு மாத காலத்துக்குத் தடுப்பதற்கான தடை உத்தரவை பிறப்பித்துள்ளார்.

பித்தளை, வெள்ளி, வெண்கலம் போன்ற கழிவு உலோகங்களை கொள்வனவு செய்கின்ற பலர் திட்டமிட்டு இவற்றை சட்ட விரோதமாக ஏற்றுமதி செய்து வருகின்றனர்.

இதனால் இவ்வாறான உலோகப் பொருள்கள் சார்ந்த சிறு கைத்தொழிலில் ஈடுபடுபவர்கள் மூலப் பொருளைப் பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமங்களை நோக்குகின்றனர். மேலும் இவற்றுக்கு அதிக விலையையும் கொடுக்க நேரிடுகின்றது.

இதனைத் தடுப்பதற்கும் உள்ளூர் சிறுகைத்தொழில் உற்பத்தியாளர்களின் நன்மை கருதியும் இவ்வாறான பொருள்களை ஏற்றுமதி செய்வதற்கு ஆறுமாத காலத்துக்குத் தடை விதிக்க ஜனாதிபதி உத்தரவிட்டதாகத் தகவல் ஊடகத் துறை அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்தார். (ற)

## மாணவர்களுக்கான சித்திரப் போட்டி

சுன்னாகம், ஒக்.11

'சுகமாக வாழ்வதற்காய் சூழலைப் பேணுவோம்' என்ற தலைப்பில் வடமாகாணப் பாடசாலை மாணவரிடையே சுவரொட்டிச் சித்திரப் போட்டி ஒன்று நடைபெறவுள்ளது.

அண்மைக்காலத்தில் மக்களுக்குச் சவாலாகவுள்ள நோய்கள் தொடர்பாகப் பாடசாலை மாணவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடன் இச் சுவரொட்டிச் சித்திரப் போட்டி இடம் பெறவுள்ளது.

இப்போட்டி விதிமுறைகளாக 24 அங்குல அகல, நீளம் கொண்டதாக வர்ண ஓவியங்களாக வரைய வேண்டும் எனவும்-

சித்திரத்தின் பின்புறம் மாணவர் பெயர், தரம், பாடசாலை ஆகிய விவரங்களுடன் அதிபரால் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தரம் 8,9,10,11 மாணவர்களை உள்ளடக்கிய கீழ்ப்பிரிவு தரம் 12,13 மாணவர்களை உள்ளடக்கிய மேற்பிரிவு என இரு பிரிவுகளாக நடைபெறும் இப்போட்டியில் வலய, மாகாண மட்டங்களில் பணப் பரிசிலும், சான்றிதழும் வழங்கப்படுவதுடன் வெற்றியீட்டிய பாடசாலை களுக்கும் பரிசுகள் வழங்கப்படும் என மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் மு.இராதாகிருஷ்ணன் அறிவித்துள்ளார்.

(201-38)

## ஆடு, மாடுகளை கட்டி வளர்க்குமாறு அறிவுறுத்து

நவாலி, ஒக்.11

ஆனைக்கோட்டை, நவாலி பகுதிகளில் கட்டாக் காலியாகத் திரியும் ஆடு, மாடுகளைக் கட்டி வைத்து வளர்க்குமாறு ஆனைக்கோட்டை விவசாய சம்மேளனம் அறிவித்துள்ளது.

இப்பகுதிகளில் பெரும்போக நெற்செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் குடியிருப்பாளர்கள் தங்களது ஆடு,மாடு, பன்றிகளைக் கட்டி வைத்து வளர்க்குமாறும் தவறின் பிடிபடும் மிருகங்களுக்கு தண்டப் பணம் அறவிடப்படுமென்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(201-100)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



வேலணை ப.நோ.கூ. சங்கத்தின் சிரேஷ்ட பணியாளர்

திருமதி சிறீதரன் ஜெயகௌரி (B.A. Hons)

அவர்கள் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் சிறப்பு கலைமாணிப் பட்டம் பெற்று 26 ஆவது பட்டமளிப்பு விழாவில் 06.10.2010 இல் வேந்தரால் பட்டமளிப்பு பெற்றதையிட்டு பெருமகிழ்ச்சியடைவதுடன் எதிர் காலத்தில் மேலும் பல பட்டங்கள் பெற்று சீரும் சிறப்பும் பெற்று வாழ அவரைப் பாராட்டி அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

தலைவர்,
பணிப்பாளர்கள்,
பணியாளர்கள்.

வேலணை ப.நோ.கூ. சங்கம்,
வேலணை.

(571809)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



தர்மிலா சிவானந்தம்
B.Sc. (Hons) 1st Class



சிவானந்தம் சதீசன்
B.A. (Hons)

யாழ்.பல்கலைக்கழக 26ஆவது பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெற்ற தென்மராட்சிக் கோட்டக் கல்விப் பணிப்பாளர்

திரு.கு.சிவானந்தம்

தம்பதியரின் செல்வங்களாகிய நீவிர் மேலும் பல பட்டங்கள் பெற்று சிறப்பாக வாழ வாழ்த்துகிறோம்.

வாழ்த்துவோர்:
திரு.சி.தர்மராஜா குடும்பத்தினர்,
திரு.க.க.ஈஸ்வரன் குடும்பத்தினர்.

(சி/571824)

## මහජන සම්පත / மஹஜன சம்பத / Mahajana Sampatha

08.10.2010 OFFICIAL RESULTS

Draw Number 2302

Winning Letter: R  Winning Numbers: 2 3 2 9 7 5

Right to left Prize structure

| Prize | Letter | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | Amount | Prizes |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| Super Prize | R | 2 | 3 | 2 | 9 | 7 | 5 | Rs. 10,000,000/= | - Prize |
| 1st Prize | | 2 | 3 | 2 | 9 | 7 | 5 | Rs. 2,000,000/= | 02 Prizes |
| 2nd Prize | | | 3 | 2 | 9 | 7 | 5 | Rs. 100,000/= | 12 Prizes |
| 3rd Prize | | | | 2 | 9 | 7 | 5 | Rs. 10,000/= | 144 Prizes |
| 4th Prize | | | | | 9 | 7 | 5 | Rs. 1,000/= | 1328 Prizes |
| 5th Prize | | | | | | 7 | 5 | Rs. 100/= | 13177 Prizes |
| 6th Prize | | | | | | | 5 | Rs. 20/= | 130480 Prizes |

Left to Right Prize Structure

| Prize | Letter | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | Amount | Prizes |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7th Prize | | 2 | 3 | 2 | 9 | 7 | | Rs. 10,000/= | 10 Prizes |
| 8th Prize | | 2 | 3 | 2 | 9 | | | Rs. 1,000/= | 129 Prizes |
| 9th Prize | | 2 | 3 | 2 | | | | Rs. 100/= | 1326 Prizes |
| 10th Prize | | 2 | 3 | | | | | Rs. 50/= | 13049 Prizes |
| 11th Prize | R | | | | | | | Rs. 20/= | 52248 Prizes |

Total Prizes won in this Draw
Rs. 13,954,310.00

Prizes of Rs. five lakhs or over are liable to govt taxes. winner must produce the National ID card and claim prizes. winning tickets are valid for a period of 6 months from the date of the drow.

Enriching your lives - enriching your land
National Lotteries Board
234/2 Galle Road, Colombo 03. Tel: 2470662, 4607000, Hotline: 2433631 website: www.nlb.lk

# நாடளாவிய ரீதியில் டெங்கு ஒழிப்பு பக்றீரியா விசிறும் பணிகள்; கம்பளையில் சுகாதார அமைச்சர் ஆரம்பித்து வைத்தார்

கம்பளை, ஒக்.11

தேசிய டெங்கு ஒழிப்பு வாரத்தின் ஆரம்ப நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை கம்பளை நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாக சுகாதார அமைச்சர் மைத்திரிபால கலந்து கொண்டார்.

மத்திய மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ, முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க உட்படப் பிரமுகர்கள்பலரும்கலந்துகொண்டனர்

இங்கு உரையாற்றிய சுகாதார அமைச்சர் கூறியவை வருமாறு:-

நாட்டில் தொடரும் மழையால் டெங்கு நோய் பரவும் வேகம் அதிகரிக்கும் என்று அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே நாம் தற்போது டெங்கு விழிப்புணர்வு வாரத்தை பிரகடனம் செய்து வேலைகளை மேற்கொண்டு வருகின்றோம்.

யுத்தத்தை வெற்றிகரமாக முன்னெடுத்த இராணுவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை டெங்கு நோய்க்கு எதிரான யுத்தத்தை முன்னெடுக்கின்றது. பொலிஸாரும், இராணுவத்தினரும் செலுத்தும் அக்கறை மக்கள் மத்தியில் விழிப்புணர்வைப் பெருக்கியுள்ளது.

டெங்குநோய் தொடர்பான ஒழிப்புணர்வு பாடசாலை மட்டத்தில் இருந்தே மேற்கொள்ளப்பட வேண்டும்.

1934ஆம் ஆண்டு மலேரியா நோய் நாட்டில் 20,000 பேரைப் பலி கொண்டது. இதைக் கட்டுப்படுத்துவதற்கு சுமார் 60 ஆண்டுகள் சென்றன. எனினும் டெங்கு நோயைக் கட்டுப்படுத்த அதிக



காலம் செல்லவிட முடியாது. ஏனெனில் உயிரைத் திரும்பப் பெற முடியாது. டெங்கு சுகாதாரத் துறைக்குப் பெரும் சவாலாக மாறியுள்ளது.

எனவே, ஜனாதிபதி தலைமையில் டெங்கு ஒழிப்பு செயலணியை நிறுவி வேலைத் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றோம். இதில் வெற்றி பெற மக்களின் ஒத்துழைப்பு அவசியம்.

டெங்கு ஒழிப்புக்கு பி.ரி.ஐ. பக்றீரியா 2 இலட்சத்து 60 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் செலவில் இறக்குமதி செய்யப்படுகின்றது. உள்ளூரிலும் உற்பத்தி செய்யப்படுகின்றது. இதில் பத்தாயிரம் அலகுகள் நாடு முழுவதும் விசிறப்படும்.

எமது நாட்டு மக்கள் நுளம்புகளுடன் தொடர்புபட்ட நோய்களில் போதிய அனுபவம் கொண்டவர்கள். டெங்கு நுளம்பைக் கட்டுப்படுத்தும் வேலைத் திட்டத்திற்கு மக்களின் ஒத்துழைப்பு கிடைக்குமாயின் பல லட்சம் அமெரிக்க டொலர்களை செலவிடத் தேவையில்லை - இப்படி அமைச்சர் தெரிவித்தார். (ளி)

## சிறுமி படுகொலை தந்தைக்கு விளக்கமறியல்

புசல்லாவை, ஒக்.09

கடந்தமாதம் 28 ஆம்திகதி கம்பளை, வட்டதெனிய - கோணடிக்கா தோட்ட மேற்பிரிவில் ஏழுவயதுச் சிறுமி படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகத் தின்பேரில் கைது செய்யப்பட்ட சிறுமியின் தந்தையை எதிர்வரும் 28 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கம்பளை மாவட்ட நீதிவான் உத்தரவிட்டார்.

சந்தேகநபரிடம் விசாரணைகளை மேற்கொண்டுவந்த கடுகண்ணாவைப் பொலிஸார் சந்தேகநபரை நேற்று நீதிமன்றில் ஆஜர் செய்த போது நீதிவான் உபாலி குணவர்த்தன மேற்படி உத்தரவைப் பிறப்பித்தார். (ளி)




## நானு ஓயா பகுதியில் மண்சரிவு போக்குவரத்துகள் ஸ்தம்பிதம்

மலையகப் பிரதேசங்களில் தொடர்ந்தும் மழை பெய்துவருகின்றது. கடுங்காற்றுடன் கூடிய கனத்த மழை பெய்துவருவதால் ஆங்காங்கே மண்சரிவுகளும், பல்வேறு அனர்த்தங்களும் ஏற்பட்டு வருகின்றன.

மழையால் நானுஓயா - தல வாக்கலை மற்றும் கண்டி - கபரகலை பிரதான வீதிகளில் கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை முதல் போக்குவரத்தில் பெரும் சிக்கல் ஏற்பட்டது. நானுஓயா - தலவாக்கலை பிரதான வீதியில் ஏற்பட்டுள்ள பெரும் மண்சரிவு காரணமாக அங்கு பெரும் போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டது. இதேவேளை, கண்டி - கபரகலை பிரதான வீதிக்கு குறுக்காக பெரும் மரம் ஒன்று முறிந்து விழுந்துள்ளதால் அங்கும் இந்த போக்குவரத்திற்கு தடங்கல் ஏற்பட்டது.

மண்திட்டை அகற்றும் பணிகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் விரைவில் வாகனப் போக்குவரத்து வழமைக்கு திரும்பும் என நானு ஓயா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி வல்பொல தெரிவித்தார்.

இதேவேளை, கடந்த புதன்கிழமை இரவு பெய்தகடும் மழையால் கண்டி - கபரகலை பிரதான பாதையின் ஹந்தல எனும் இடத்தில் பாரிய மரமொன்று முறிந்து வீழ்ந்துள்ளது. இதனால் அப்பகுதியினூடான போக்குவரத்துக்கள் பாதிக்கப்பட்டன. (ளி)

## 10 கிராமங்களை உள்ளடக்கி சப்ரகமுவவில் சுற்றுலா வலயம்

கொழும்பு,ஒக். 11

சப்ரகமுவ மாகாணத்திற்கு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் முகமாக பத்துக் கிராமங்களை உள்ளடக்கிய சுற்றுலா வலய மொன்றை உருவாக்குவதற்கு மாகாணசபை நடவடிக்கை எடுத்துள்ளது.

கம்பளை, கந்தகிரிய, சிங்கராஜ, கூடுவ, ரஞ்சமடம், வவுல்பன, ஹிரிகல்குஹாவ, பத்தலேகல, இஹல கோட்டே மற்றும் உதுவன்கந்த ஆகிய கிராமங்களை உள்ள டக்கியே இவ்வலயம் உருவாக்கப்படவுள்ளது.

இரண்டுகோடி ரூபா செலவில் முன்னெடுக்கப்படும் இத்திட்டத்தின் மூலம் 600 குடும்பங்கள் நிரந்தர வருமானத்தைப் பெறும்.

மேலதிகமாக 2,000 பேருக்கு சமயாசமய, சுழற்சிமுறையிலான தொழில் வாய்ப்புக் கிட்டும் - எனப் பலராலும் எதிர்ப்பார்க்கப்படுகிறது. (ளி)

---

# உணவு - குடி தண்ணீருக்காக ஆழ்கடலில் படாத பாடுபட்டோம்!

### பல நாள்கள் கடலில் தத்தளித்து கரை திரும்பிய மீனவர்கள் தெரிவிப்பு



கொழும்பு, ஒக்.09

உணவுக்காகவும், குடி தண்ணீருக்காகவும் நாங்கள் படாத பாடுபட்டோம். கடல் மீனைப் பிடித்து, எங்களிடமிருந்த 'காஸ்' மூலம் சுட்டுச் சாப்பிட்டோம். மழை நீரைச் சேமித்து, குடி தண்ணீராகப் பயன்படுத்தினோம்.

இவ்வாறு ஆழ் கடலுக்கு ஓகஸ்ட் 19 ஆம் திகதி மீன் பிடிக்கச் சென்று, காணாமற் போய் இம் மாதம் 6ஆம் திகதி புதன் கிழமை வீடு திரும்பியுள்ள மூன்று மீனவர்களும் தங்கள் அனுபவத்தைத் தெரிவித்துள்ளார்கள்.

இம் மூன்று மீனவர்களில் ஒருவரான கணபதி சிவராசா (வயது - 55) தாங்கள் அனுபவித்த இடர்பாடுகளைப் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:-

ஓகஸ்ட் மாதம் 19 ஆம் திகதி நாங்கள் மூன்று மீனவர்களும் வாழைச்சேனைக் கடலிலிருந்து ஆழ் கடலுக்கு மீன் பிடிக்கச் சென்றோம். எனினும் எதிர்பாராத விதமாக எமது படகின் இயந்திரம் பழுதடைந்துவிட்டது.

படகின் இயந்திரத்தை சரி செய்யப் பல்வேறு முயற்சிகளை எடுத்தோம். ஆனால் அவை கைகூடவில்லை. படகில் நாங்கள் கொண்டு சென்ற உணவும், குடி தண்ணீரும் முடிவடைந்து விட்டன. இந்த நிலையில் 'காஸ்' எரிவாயு மாத்திரமே எம்மிடம் எஞ்சியிருந்தது.

ஒக்ரோபர் 22 ஆம் திகதி தொடக்கம் 24 ஆம் திகதி வரை உணவுக்காகவும், குடி தண்ணீருக்காவும் படாத பாடுபட்டோம். கடல் மீன்களைப் பிடித்து எங்களிடமிருந்த 'காஸ்' மூலம் சுட்டுச் சாப்பிட்டோம். மீனில்லாத சந்தர்ப்பத்தில் கடல் ஆமைகளைப் பிடித்து அவற்றைச் சுட்டு உணவாக உட்கொண்டோம். மழை நீரைச் சேகரித்து குடிப்பதற்காகப் பயன்படுத்தினோம்.

இந்நிலையில் எமது படகு கடல் காற்றினால் திசை தெரியாத பகுதிக்கு அடித்துச் செல்லப்பட்டது.

இந்நிலையில் 24 ஆம் திகதி றோலர் படகொன்று வெகு தூரத்தில் வருவதை அவதானித்தோம். இதையடுத்து கையிலிருந்த சாரத்துக்குத் தீ மூட்டி அந்த றோலர் படகை நோக்கி சைகை செய்தோம்.

அன்றிரவு 7.30 மணியளவில் எங்களது பழுதடைந்த படகின் அருகில் அந்த றோலர் படகு வந்தது. அதில் வந்தவர்கள் எங்களை கயிற்றைப் போட்டு தங்களின் படகில் ஏற்றினார்கள். உடனே பிஸ்கட்டும் குடி தண்ணீரும் எங்களுக்குத் தந்தார்கள்.

எங்களது இயந்திரம் பழுதடைந்த படகையும் அவர்களின் றோலர் படகில் கட்டி இழுத்துக் கொண்டு வந்தோம். ஆனால் வழியில் எமது பழுதடைந்த படகு அறுந்து வீழ்ந்து கடலில் மூழ்கிவிட்டது.

பின்னர் இம் மாதம் 6ஆம் திகதி நாம் அவர்களின் உதவியுடன் திருமலைத் துறைமுகத்தை வந்தடைந்தோம். இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளார். (ளி)

## கெவிளியாமடுவில் சிங்களக் குடியிருப்புகள் அதிகரிப்பு; தமிழ் விவசாயிகள் விவசாயம் செய்ய முடியாத நிலை

### நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன் தெரிவிப்பு



மட்டக்களப்பு, ஒக். 11

மட்டக்களப்பு பட்டிப்பளை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கெவிளியா மடுவில் சிங்களப் பெரும் பான்மையின மக்களின் குடியிருப்புகள் அதிகரித்துள்ளன. இதனால் தமிழ் விவசாயிகள் இப்பிரதேசத்தில் விவசாயம் செய்ய முடியாத நிலை உருவாகியுள்ளது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

இப்பிரதேசத்துக்கு கடந்த செவ்வாய்க்கிழமை சென்று திரும்பிய நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன், தமிழ் விவசாயிகள் இப்பிரதேசத்தில் விவசாயத்தில் ஈடுபடுவதற்கான எந்தவிதமான அடிப்படை வசதிகளும் இதுவரை செய்து கொடுக்கப்படவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஏற்கனவே பெரும்பான்மை மக்களின் 40 குடியிருப்புக்கள் அமைக்கப்பட்டிருந்தன. ஆனால் இப்போது இவை 250 ஆக அதிகரித்துள்ளன. இந்நிலையில் தமிழ் மக்களின் மேய்ச்சல் தரைக்காக ஒதுக்கப்பட்டு எல்லை வகுக்கப்பட்ட காணிகளிலும் பெரும்பான்மை இனத்தவர்கள் விவசாயத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் அங்கு கால் நடைகளைக் கொண்டு செல்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தச் செயல் பற்றி நடவடிக்கை எடுக்குமாறு நான் கோரியிருந்தேன். எனினும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான பஸில் ராஜபக்ஷவும் மீள்குடியேற்றப் பிரதி அமைச்சர் வி.முரளிதரனும் இது விடயமாக அடுத்த கூட்டத்தில் ஆராயப்படும் எனத் தெரிவித்தனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ளி)

## கிழக்கு மாகாணக் கல்வித்துறையை மேம்படுத்துவதே அடுத்த இலக்கு

### ஆசிரியர் தின விழாவில் கி.மா. முதலமைச்சர் உரை

திருகோணமலை, ஒக்.11

பல்வேறு பிரச்சினைகள் காரணமாகக் கிழக்கு மாகாணக் கல்வித்துறை பின்னடைவைத் தழுவியுள்ளது. படிப்படியாக இப் பின்னடைவிலிருந்து கிழக்கு மீட்கப்படும். இனிவரும் காலங்களில் எமது இலக்கு கல்வித்துறையிலேயே பதிந்திருக்கும்.

இவ்வாறு கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன், உலக ஆசிரியர் தினத்தையொட்டி திருகோணமலை விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற ஆசிரியர் தின விழாவில், பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.




திருகோணமலை கல்வி அலுவலகம், இவ் விழாவிற்கான ஏற்பாடுகளை மிக விரிவாகச் செய்திருந்தது.

கடந்த புதன்கிழமை, பிற்பகல் 3 மணியளவில் ஆரம்பமான இவ் விழாவில், மாகாணக் கல்விப் பணிப்பாளர் எம்.ரி.நிசாம், கிழக்கு மாகாண கல்வி, காணி, விளையாட்டுத் துறை அமைச்சின் உதவிச் செயலாளர் சி.தண்டாயுதபாணி, வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி. எஸ்.கே. ஆனந்தராஜா ஆகியோர் சிறப்பு அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தொடர்ந்து பேசுகையில் கூறியவை வருமாறு-

''கல்வித் துறையில் ஏற்பட்டுள்ள பெரும்பின்னடைவுபடிப்படியாக அதேவேளை துரிதமாக நீக்கப்பட்டு வருகிறது.

ஆசிரியர்கள் எவ்வித சாக்குப் போக்கும் சொல்ல முடியாது, உற்பத்தித்துறையில் மாகாண ரீதியில் 5 ஆவது இடத்தில் உள்ள இந்த மாகாணம் கல்வியில்தான் பின்னடைவு கண்டுள்ளது.


இனிவரும் காலங்களில் எமது இலக்கு கல்வித்துறையிலேயே இருக்கும். கல்வி முன்னேற்றம் அரசியல்வாதிகளின் கைகளிலேயே முற்றும் முழுதாக தங்கியிருக்கவில்லை.

ஆசிரியர்களாகிய உங்களின் பொறுப்பு அளப்பரியது.

ஆசிரியர்களாகிய உங்களின் பொறுப்பு அளப்பரியது. உங்கள் பிரச்சினைகள் எது வாக இருந்தாலும் என்னிடம் வந்து தெரிவியுங்கள். அவை தீர்த்து வைக்கப்படும். நாம் ஒருங் கிணைந்து இந்த மாகாண கல்வித் துறையைக் கட்டி உன்னத நிலைக்கு எழுப்புவோம்."- இப்படி அவர் குறிப்பிட்டார். (ளி)

உ
சிவமயம்
ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நம

# 45ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் 56ஆவது பிறந்தநாள் நினைவும்.



அமரர்

## சந்தனம் ஆச்சாரி சவுந்தரராஜன்

(துர்க்கா நகைப்பூங்கா உரிமையாளர்)

தோற்றம் 12.10.1954 மறைவு 28.08.2010

ஐயா! சாமிகளா அடிவயிறு பதறுதையா!!
பூப்பூத்த மரமொன்று சுட்டெரிஞ்சு போனதையா
வாசலில நட்டுவச்ச வாழைமரஞ் சாஞ்சதையா
வாயாரப்பேசி நின்ன வண்ணமுகம் முடிந்ததையா
பெருமரத்த சுத்திநின்ன புல்லெல்லாம் பூத்ததையா
கோபக் காத்தடிச்சி ஆலமரம் வீழ்ந்ததையா
தொண்டை அடைக்கின்ற துக்கம் மனம் பிசையுதையா
கண்தூங்க முடியாம நினைவுகளும் நீளுதையா
நிகழ்கின்ற ஒரு நொடியும் நிகழாத மறுநொடியும்
கதறி அழத்தானே தோனுதையா
கற்பூரம் ஏத்தி வச்சா கரைந்துதான் போகுமென்பார்
உயிரெல்லாம் ஒருநாளில் ஓய்ந்துதான் போகுமென்பார்
யதார்த்தம் புரிந்தாலும் எம்மனசு ஏற்கலியே
முன்னேறி முன்னேறி நாம வான்முட்டி நின்னாலும்
வித விதச்ச கமக்காரன் உங்களைத்தான் காணலியே
மாசமில்ல வருசமில்ல யுகங்கள்தான் கடந்தாலும்
எம் சந்ததியின் நாள்கள்வரை உம் நினைவு மாளாது.

கடந்த 28.08.2010 இறைவனடி சேர்ந்த எமது குடும்ப விளக்கின் அந்தியேட்டிக் கிரியைகள் புரட்டாதித் திங்கள் 25ஆம் நாள் இன்று (11.10.2010) திங்கட்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (12.10.2010) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அமரரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.

இல.38, கில்னர் லேன்,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

# கொழும்புத்துறை செபமாலை அன்னை ஆலயம்



எஸ்.யேசுதாஸ்

வடபுலத்தின் அழகு நகராகத் திகழும் யாழ். நகரின் கிழக்குப் பகுதியில் எழில் வளம் மிகுந்த அழகுறு கிராமமாக கொழும்புத்துறை மிளிர்கிறது. கத்தோலிக்க திருச்சபைக்கும் சைவசித்தாந்தத்திற்கும் தமிழ் வளர்ச்சிக்கும், கலையுயர்வுக்கும் மேன்மையூட்டும் கேந்திர முக்கியம்பெற்ற கிராமமாகும்.

கத்தோலிக்க மறையைப் பரப்பும் நோக்குடன் துன்பத்தை துச்சமென மதித்து துணிவோடு யாழ்.பகுதிக்கு வந்த முக்திப் பேறுபெற்ற யோசேவாஸ் அடிகளின் பாதம் பதிந்த புனித பிரதேசம் இதுவாகும். இன்னும் பல சிறப்புகள் பொதிந்த கொழும்புத்துறையின் மத்திய பகுதியில் வனப்புமிகு கம்பீர தோற்றத்துடன் அமைதியான சூழலில் நிமிர்ந்து நிற்கிறது. கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலயம் .

பாலகன் இயேசுவை கரங்களில் தாங்கி நின்று பாதம் பணியும் பக்தர்களுக்கு அருள் மழை பொழிந்து பாதுகாத்து வருகிறாள். இறைவனின் அன்னை மரியாள், இறை மனித உறவுப்பிணைப்புக்கு ஜெபம்தான் அடித்தளம் என்பதை உணர்த்த புனித சாமிநாதருக்கு ஜெபமாலை என்னும் பரலோக ஏணியைக் கொடுத்தவள் தான் இந்த அன்புத்தாய்.

120 ஆண்டுகள் பழமைமிக்க இவ் ஆலயத்தின் தோற்றம் 1890ஆம் ஆண்டு தொடங்கியதாக அறிய முடிகிறது. ஒல்லாந்தர் காலத்திற்கு முன்னரே இங்கு ஓலைக் கொட்டிலால்ஆன ஆலயம் இருந்து வந்தது. ஒல்லாந்தரின் மத ஒழிப்பு நடவடிக்கையால் அங்கிருந்த மாத சொரூபத்தை முன்னோர்கள் மறைத்து வைத்தனர்.

பின்னர் நிலைமை சீரானதும் பின் வந்த சந்ததியினர் தாம் வணங்க சொரூபம் இல்லையே என்று ஏங்கியவேளை அங்கு நின்ற வேப்பமரப்பொந்துக்குள் மாதா சொரூபம் கண்டெடுக்கப்பட்டது. கொட்டில் ஆலயத்தை அகற்றி ஆயர் பொஞ்சின் ஆண்டகையின் ஆளுகைக் காலமான 1880இல் செங்கற்களால் கட்டப்பட்டது. மடுப்பதியின் அடிக்கல்லை நாட்டியவரும் இவரே என்பது குறிப்பிடத்தக்கது.

1886இல் வணபிதா ஓபிளனகன் அடிகளார் இவ்வாலயத்தை இடித்து புனித பத்திரிசியார் ஆலயத்தைக்கட்ட முற்பட்டார். அப்போது ஒரு ஆச்சரியம் நிகழ்ந்தது. முடிவுறும் நிலையில் இருந்த ஆலயம் முழுவதும் ஒரு நாள் இடிந்து விழுந்துவிட்டது. எனவே அன்னையின் ஆலயம்தான் அமைய வேண்டுமென்பது இறைசித்தம்போலும் என்பதை உணர்ந்த முன்னோர்கள் தமது காணிகளை வழங்கி புதிய மாதா கோயிலைக் கட்ட முன்வந்தார்கள்.

கொழும்புத்துறை அநாதை விடுதிக்கு பொறுப்பு வகித்த அருட்திரு ஜே. பி. மியரீ அடிகளாரின் வழிநடத்தலில் அருட்திரு பூலோகசிங்கம் அடிகளார் 1890இல் முருகைக்கல், செங்கல், சுண்ணாம்புக்கலவை கொண்டு அக்கால கட்டடக்கலை வடிவத்திலான ஆலயத்தை அமைக்கத் தொடங்கினார். பின்னர் பணிபுரிந்த அருட்திரு கௌதியர் அடிகளின் அயராத முயற்சியால் இந்த ஆலயம் கட்டி முடிக்கப்பட்டது.

சிறிய தொகையான கத்தோலிக்கரே அந்நேரத்தில் வாழ்ந்தபோதும் மடுப்பகுதிக்கு செல்லமுடியாதவர்களும் வந்து தரிசிக்கும் வகையில் தீர்க்க தரிசனத்துடன் விலாசமான ஆலயத்தை மேலைத்தேச குருக்களுடன் இணைந்து இவ்வூர் மக்கள் அமைத்துள்ளதை அறியமுடிகிறது.

அன்னை மரியாளை பாதுகாவளியாகக் கொண்ட மக்கள் வருடத்தில் பல விழாக்களை எடுத்து மகிமைப்படுத்தி வந்தார்கள். மடுப்பதியின் ஞாபகமாக ஆடி 2ஆம் திகதி திரிதின ஆராதனைகளுடன் திருவிழா நடைபெற்று வருகிறது. யாழ்.நகரப் பகுதி மக் கள் திரளாக வந்து அன்னையின் ஆசி பெற்றுச் செல்வர்.

பெருந்திருவிழா ஒக்ரோபர் முதல் ஞாயிற்றுக்கிழமை அன்று நடைபெற்று வருகிறது. ஒன்பது நாள்கள் வழிபாடுகள் நடைபெற்று இறுதி நாளில் பழைய சிற்பக்கலை மிகுந்த சருவலைக்கூட்டில் அன்னையை வைத்து கிராமத்தைச் சுற்றி வருவார்கள். விருத்தம், மன்றாட்டுப்பாடல் என்பன அக்கால கலைஞர்களால் பாடப்படும். மேள,பான்ட் இசைகளும் வாண விளையாட்டுக்களும் சிறப்பம்சமாக இருக்கும்.

அக்காலத்தில் குருக்கள் பற்றாக்குறையால் கொழும்புத்துறை அநாதைமடக் குருவின் பொறுப்பிலும், பாசையூர் பங்கு வழிமீசமாக திருநெல்வேலி புனித சவேரியார் ஆலய குருக்களின் பராமரிப்பிலும், பாண்டியன்தாழ்வு பங்குகளாலும் நிர்வகிக்கப்பட்டு வந்துள்ளது.

காலப்போக்கில் இங்கு பணிபுரிந்த குருக்களின் அயராத ஆன்மீக, ஆலய கட்டுமானப் பணிகளின் வெளிப்பாடாக மக்களின் இறை விசுவாசமும் ஆலய வளர்ச்சியும் பெரும் முன்னேற்றப் பாதையில் பயணிக்க தொடங்கியது.

மேலைத்தேச குருவான அருட்திரு லெபோன் அடிகளார் 1958இல் ஆலய புனரமைப்புப் பணிகளில் முழு வீச்சுடன் செயற்பட்டார். பழுதடைந்திருந்த கூரையின் மேற்பகுதியை உயர்த்தி பிற்பக்க இரட்டைக் கூரையாக அமைத்தார்.

1962 இல் பங்குத் தந்தையாக இருந்த அருட் திரு.வசன்பேர்க் அடிகளார் தனது தாய் நாட்டிலிருந்து உதவி பெற்று பீடப்பகுதியை உயர்த்தி பிற்பக்க விறாந்தையை உள்ளடக்கி திருப்பலி ஆயத்தங்களை மேற்கொள்ளும் அறைவீட்டைக் கட்டினார். அத்தோடு இன்றுவரை பாவிக்கப்படும் கொடிமரம் மற்றும் மின்னிணைப்பு வசதிகளை ஏற்படுத்தினார்.

1965-1971 காலப்பகுதியில் அருட்திரு சந்தியாப்பிள்ளை, பிரான்சிஸ்குலாஸ் அடிகளாரால் சேதமடைந்திருந்த ஆலயத்தின் நிலப்பகுதிகள் சீரமைக்கப்பட்டன. அருட்திரு அதிரியான் யோசேப் அடிகள் 1972இல் இன்று காணப்படும் போட்டிக்கோ (முன்மண்டபம்)விற்கு அடிக்கல் இட்டு ஆரம்பித்து வைத்தார்.

அருட்திரு லூயிஸ் பொன்னையா அடிகள் பங்குத்தந்தையாக இருந்தபோது 1974இல் வன்னிக் காட்டிலே இருந்து அருள்புரிந்து வரும் மருதமடு அன்னை யாழ்.குடாநாட்டுக்கு பவனியாக எடுத்து வரப்பட்டாள். அவ்வேளையில் ஒருநாள் இவ் ஆலயத்தில் தரித்து வழிபாடுகள் நடத்தப்பட்டமை வரலாற்றில் மறக்கமுடியாது.

பழமைவாய்ந்த முகப்புப் பகுதியை புதுப்பொலிவுடன் அமைக்க விரும்பிய அருட்திரு கிறிஸ்ரியன் வாஸ் அடிகள் 1977இல் பழைய கலைவேலைப்பாடுகள் அழிவுறாத வகையில் உள்ளூர் தொழிலாளர்களின் உதவியுடன் நிறைவேற்றினார். துண்டிச் சந்தியில் வரவேற்பு மாதா சொரூபமும் நிறுவப்பட்டது.

இவ்வாலயத்தைச் சேர்ந்த மக்கள் தமது பாதுகாவலி மரியாளின் வணக்க ஸ்தலத்தின் பணிகளை சிரமதானமுறையில் நிறைவேற்றுவதில் வல்லவர்கள்.

அனைத்துத் துறை தொழிலாளர்களும் இங்கே உள்ளமை இதற்கு அனுகூலமாக அமைகிறது. பொருள்கள் கிடைத்துவிட்டால் பணி நிறைவுற்றதற்கு சரி என பங்குத் தந்தையர்கள் கூறுவதுண்டு.

அந்த வகையில் 1981ஆம் ஆண்டு அருட்திரு மகேந்திரன் அடிகளின் காலத்தில் முன்மண்டபத்தையும் பாரிய ஆலய மணியையும் உருவாக்கியதோடு மணிக்கோபுர வேலைகளையும் ஆரம்பித்து வைத்தார்.

1984இல் மணிக்கோபுர வேலைகள் அருட்திரு பிரான்சிஸ் அடிகளாரால் நிறைவேற்றப்பட்டது. அருட்திரு சாள்ஸ், அருட்திரு யேசுரட்ணம் அடிகளார்களின் முயற்சியால் ஆலய கைக் கோயில்கள் அமைக்கப்பட்டு பீடப்பகுதி அழகுபடுத்தப்பட்டது.

அன்னையின் வரங்களால் வாழ்வு பெற்றவர்கள் ஏராளம். அவர்கள் தமது நன்றிகளை வெளிப்படுத்தத் தவறுவது இல்லை, 1999ஆம் ஆண்டு வடிவமைக்கப்பட்ட சித்திரதேர் பின்னர் உருவாக்கப்பட்ட லூர்து அன்னை கெபி, தற்போது எழுப்பப்பட்டுள்ள மதில் சுவர், மற்றும் பெறுமதிமிக்க ஆலயப் பொருள்கள் பலவும் பக்தர்களின் தாராள மனதால் கிடைத்த அன்பளிப்புகளாகும்.

தஞ்சமென்று ஓடிவரும் அடியவர்களுக்கு அடைக்கலம் தரும் மரியாளின் நிழலில் பாதுகாப்பு பெற்றவர்கள் அநேகர் - 1984 90களில் இடம்பெற்ற கரையோர இடப்பெயர்வுகளின்போது நூற்றுக்கண குடும்பங்கள் இப்பகுதியில் ஆறுதல் அடைந்தனர். அதேவேளை ஆலயத்தின் தென்னந்தோப்புகள், கட்டடங்கள், பொருள்களுக்கும் பெரும் இழப்பு ஏற்பட்டது.

பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய குழுவின் நிர்வகிப்பில் இருந்து வந்த இவ்வாலயத்தை நிர்வாக இலகுபடுத்தல், மற்றும் கிராம வளர்ச்சி, ஆன்மீக உயர்ச்சியை




கருத்திற்கொண்டு யாழ்.ஆயர் பேரருட்திரு தோமஸ்சவுந்தரநாயகம் ஆண்டகை தனிநிர்வாக பாங்காக 2003ஆம் ஆண்டு டிசம்பர் 8ஆம் திகதி முதல் இயங்க வைத்தார்.

புதிய பங்கின் முதல் தந்தையாக அருட்திரு அன்ரன் மத்தாயஸ் அடிகள் பொறுப்பேற்றார். இவரது மறுமலர்ச்சி மிக்க ஆன்மீக வழிகாட்டலும், துரித செயற்பாடுகளும் மக்களை பல்துறை வளர்ச்சிப்பாதையில் வழி நடத்தி செல்கிறது.

இயேசு கிறிஸ்துவின் அன்பு, தியாகம், பரிவு போன்ற பண்புகள் மக்களுக்கு ஊட்டப்பட்டு சமூக உதவிச் செயல்கள் முன்னெடுக்கப்படுகின்றன. சுனாமியின் போதும் வன்னியில் மீள் குடியமர்ந்த மக்களுக்கும் இவ் ஆலய மக்களால் பல்வேறு உதவிகள் வழங்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. ஏ-9 பாதை அடைபட்டு மக்கள் உணவின்றி அலைந்தவேளை இப்பங்கில் மதிய உணவு வழங்கப்பட்டமை மரியன்னையின் உதவிடும் பண்பை உணர்த்துகிறது.

மறைக்கல்வி வகுப்புகள், கலந்துரையாடல்களை நடத்தும் பொருட்டு குருக்கள் தங்குமிட வசதியுடன் கூடிய மண்டபம் 2006இல் கட்டப்பட்டது. 2009ஆம் ஆண்டு நற்கருணை சிற்றாலயம் அமைக்கப்பட்டு அமைதிச்சூழலில் இறைவனோடு உரையாடி விசுவாசத்தை ஆழப்படுத்தும் வழிகளை உருவாக்கியுள்ளார் இன்றைய பங்குத்தந்தை.

நீண்ட கத்தோலிக்க பாரம்பரியமும், ஆன்மீகப்பற்றும் கொண்ட இப்பங்கு குடும்பங்களிலிருந்து இறை வார்த்தையை அறிவிக்க 3 குருக்கள் தம்மை அர்ப்பணித்துள்ளனர். இரண்டு கன்னியர்கள் துறவறம் பூண்டுள்ளதோடு இன்னும் சிலர் ஆரம்ப துறவற நிலையில் உள்ளனர்

அமைதி நிறைந்த பக்திமய சூழலில் வீற்றிருந்து மதபேதமின்றி அருள் மழை பொழிந்து வரும் கொழும்புத்துறை செபமாலை அன்னை ஆலய மக்களின் ஆன்மீக எழுச்சியும் நேர்த்தி மிகு வழிபாட்டு முறைகளும் ஏனைய மக்களுக்கும் முன்னுதாரணமாகத் திகழ்வதில் சந்தேகமில்லை.

# அரச ஊழியர்களுக்கான மொழித்தேர்ச்சிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரல்

யாழ்ப்பாணம்,ஒக்.11

இலங்கைப் பரீட்சைத்திணைக்களம் மற்றும் அரச கரும மொழித்திணைக்களம் ஆகியன அரச ஊழியர்களிடமிருந்து சிங்களமொழி மட்டம் 111இற்கான எழுத்துப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரியுள்ளதாக யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அறிவித்துள்ளார்.

இந்த எழுத்துப் பரீட்சை எதிர்வரும் நவம்பர் மாதம் நடத்தப்படவுள்ளது. மேற்படி பரீட்சைக்குரிய பாடத்திட்டம், பரீட்சை நடைமுறை விதிகள்,மாதிரி வினாத்தாள்கள், விண்ணப்பப் படிவ மாதிரி மற்றும் ஏனைய விவரங்கள் www. languages.gov.lkஎன்ற அரச கரும மொழிகள் திணைக்கள இணையத்தளத்தில் பார்வையிட முடியும்.

இந்த இணையதளத்திலிருந்து பெற்றுக்கொண்ட விண்ணப்பப்படிவ மாதிரிக்கு அமைய விண்ணப்பப் படிவங்களை பூர்த்தி செய்து உரிய நிறுவனத் தலைவரின் பணிந்துரையுடன் எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைக் கிளை, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம்,பெலவத்த, பத்தரமுல்ல என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவேண்டும்.

விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'அரச கரும மொழித் தேர்ச்சி எழுத்துப் பரீட்சை -2010' எனக் குறிப்பிடுதல் வேண்டும். (எ-201)

# போக்குவரத்தை ஸ்தம்பிக்கச் செய்த வரிக்குதிரை

தப்பியோடி நெடுஞ்சாலையில் உலவிய வரிக்குதிரையால் தென்னாபிரிக்கத் தலைநகரான ஜோஹனஸ்பேர்க் நெடுஞ்சாலையில் சில மணிநேரம் பெரும் வாகன நெரிசல் ஏற்பட்டது.

இந்த வரிக்குதிரை 20 வயது நிரம்பியது. இது தான் தங்கியிருந்த தோட்டத்தின் மாற்றுப் பாதையிலுள்ள வாயிலினூடாகத் தப்பியோடி ஏழு கிலோ மீற்றர் தொலைவிலுள்ள நெடுஞ்சாலையை அடைந்தது. அதுமட்டுமல்லாமல் நெடுஞ்சாலையில் அங்குமிங்கும் உலாவிக் கொண்டிருந்தது. இதனால் வானகமோட்டிகள் சிரமத்திற்கு ஆளாகினர்.

இந்தக் காட்சியைக் கண்டு வியப்படைந்த அந்த நெடுஞ்சாலையில் அடிக்கடி பயணிப்போர் உள்ளூர் வானொலி நிலையத்துடன் தொடர்புகொண்டு இதனைத் தெரிவித்தனர்.

இதனைக் கேள்வியுற்ற பொலிஸார் உடனே அந்த இடத்திற்கு விரைந்து வந்தனர். வரிக்குதிரையைத் துரத்திச்சென்று வேலியிடப்பட்ட ஒரு இடத்தில் அதனை அடைத்தனர். ஆனால் பொலிஸாருக்கு இதுவொரு இலகுவான வேலையாக இருக்கவில்லையெனத் தெரிவிக்கப்படுகின்றது. அவர்கள் நெடுஞ்சாலையை மூன்றுமுறை கடந்து இதனைத் துரத்தியதாகச் சம்பவத்தைக் கண்டவர்கள் தெரிவித்தனர். வரிக்குதிரை ஓரிடத்தில் நிலையாக நிற்காது என்றும் அங்குமிங்கும் அலைந்து திரியும் சுபாவமுடையது என்றும் அருகிலுள்ள குடியிருப்பாளர்கள் தெரிவித்தனர். (க)

## மரண அறிவித்தல்

### திருமதி பாலசுப்பிரமணியம் சிவபாக்கியம்
(முன்னாள் பெண் பரிசாரகர், யா/போதனா வைத்தியாலை)



அல்லைப்பிட்டி, 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இல.56, பிரப்பங்குளம் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணத்தை நிரந்தர வதிவிடாகவும் கொண்ட திருமதி பாலசுப்பிரமணியம் சிவபாக்கியம் நேற்று (10.10.2010) ஞாயிற்றுக் கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா- செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான மனோன்மணி, செல்லத்தம்பி, நடராசா ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவியும் கணேசபிள்ளை, காலஞ்சென்ற பாலேஸ்வரி மற்றும் சிவனேஸ்வரி (பிரதேச செயலகம்- உடுவில்), பாலேஸ்வரன் (தே.வீ.அ.சபை- மன்னார்), சிவசுப்பரமணியம், சீதாலட்சுமி, பாஸ்கரன் (டோகா), காலஞ்சென்ற சந்திரேஸ்வரி மற்றும் இரட்னேஸ்வரி ஆகியோரின் பாசமிகு தாயும் திரேசா, செந்தில்மதி, நாகேந்திரம் ஆகியோரின் அன்பு மாமியும் பிடல்கஸ்ரோ, பொபிசாண்ட், கஜேந்தினி, செந்தூரன், பவித்ராயணி, மதுரா, யூலிகா, திலக்ஷன், கம்ஷன், தரணிகா, சர்மினி, பாமினி, தாரணி ஆகியோரின் செல்லப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.10.2010) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.56, பிரப்பங்குளம் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (104508)

தகவல்:
பா. சிவனேஸ்வரி -மகள்
(பிரதேச செயலகம், உடுவில்).

## மரண அறிவித்தல்

### திருமதி செல்லம்மா கனகசபாபதி



மருதங்கேணியைப் பிறப்பிடமாகவும் வதிரி, கரவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகசபாபதி செல்லம்மா 09.10.2010 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ந.கனகசபாபதி (ராஜா பேக்கரி, செல்லம் பேக்கரி உரிமையாளர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற ஆறுமுகம்- வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மகளும் மணிவண்ணன் (லண்டன்), மதிவதனி, மதிசூடி (லண்டன்), மதியழகன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற முருகேசு, வேலுப்பிள்ளை, பூரணம், இரத்தினம் (கண்டாவளை) ஆகியோரின் சகோதரியும் விஜிதா (லண்டன்), வல்லிபுரநாதன் (ஹாட்லிக் கல்லூரி), வதனி (லண்டன்), தர்ஜினி (ஜேர்மனி) ஆகியோரின் மாமியாரும் சஜித், சஞ்சய், பிரியங்கா, அரண், சுஜீவன், திருபரன், சங்கீர்த்தனா, சேயன், தரணி, அருண், திவ்வியா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (11.10.2010) திங்கட்கிழமை பி.ப. ஒரு மணிக்கு அவரின் இல்லத்தில் இடம்பெற்று வதிரி ஆலம்கட்டை மயானத்தில் தகனஞ் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ராஜா பேக்கரி,
வதிரி கரவெட்டி.
தொ.பே: 0212264295 (104512)

தகவல்:
குடும்பத்தினர்.

# பாதீனியம் தொடர்பான விழிப்புணர்வு

நாவற்குழி,ஒக்.11

இருபாலை தெற்கில் பரவ ஆரம்பித்திருக்கும் பாதீனியம் தொடர்பாக பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டும் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை காலை9 மணிக்கு கிராம அலுவலர் கோ.ஜெயந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சுற்றுச்சூழல் பாதுகாப்பில் அக்கறையுள்ள கிராமப் பெரியவர்கள் பாதீனிய ஒழிப்பு தொடர்பான கருத்துக்களை வழங்கினர்.அத்துடன் பிடுங்கபட்ட பாதீனியக் களைகள் பொதுமக்களுக்குக் காண்பிக்கப்பட்டு அது தொடர்பான தீமைகள் பற்றி பொதுமக்களுக்கு விளக்கமளிக்கப் பட்டது. இலகு வேலைத்திட்டத்தின் கீழ் பராமரிப்பற்ற காணிகளில் பாதீனிய ஒழிப்பு வேலைகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றன. (201-121)

# சிறுவர் தினவிழா

யாழ்ப்பாணம்,ஒக்.11

வலி.தென் மேற்கு மானிப்பாய் பிரதேச சபையின் சிறுவர் தின நிகழ்வுகள் அண்மையில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி.தென்மேற்கு பிரதேசசபை செயலாளர் திருமதி பு.சிவலிங்கம் கலந்து கொண்டு சிறப்பித்தார். (எ-302)

## அவனியை விட்டு அகன்று ஆண்டுகள் ஆறில்....



அவனியில்:
17.04.1953

அக்கினியில்:
18.09.2004

திதி: சதுர்த்தி
(11.10.2010)

### திருமதி திலகவதி குமரவேல்
(முன்னாள் பொது முகாமையாளர், ப.நோ.கூ.சங்கம், சுன்னாகம்)

அவனியை விட்டு அகன்று
ஆண்டுகள் ஆறில்
இன்பமாய் கூடி வாழ்ந்த நாள்களை நினைத்து
ஈரவிழிகளுடன் எம்மை தவிக்கவிட்டு
உள்ளத்தை உறைய வைத்து
ஊர்போற்ற வாழ்ந்த உத்தமியை
எண்ணி ஏகாந்தமாய் நாம் இங்கே...
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

'திருவேரகம்'
முத்துக்கிருஸ்ணர் வீதி, சுன்னாகம்.

குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### திருமதி பதுமநிதி அருணாசலம்



கொக்குவில், குளப்பிட்டியைச் சேர்ந்தவரும் தற்போது லண்டனில் வசித்து வந்தவருமான திருமதி பதுமநிதி அருணாசலம் அவர்கள் 09.10.2010 சனிக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம்-சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற நடராசா-இராசம்மா தம்பதியரின் மருமகளும் அருணாசலம் (முகாமையாளர், புறூக் பொன்ட் கொம்பனி, முன்னாள் தலைவர், கொக்குவில் கிராமசபை, கொக்குவில் நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்) அவர்களின் அருமை மனைவியும் கிருபாகரன் (லண்டன்), திவாகரன் (லண்டன்), பிரபாகரன் (லண்டன்), அருள்நிதி (லண்டன்), இசைவாணி (லண்டன்), லலித்தா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும் தவமலர் (லண்டன்), நிறோசனா (லண்டன்) , சந்திரகாந்தி (லண்டன்), ஜீவானந்தன் (லண்டன்), நிர்மலன் (லண்டன்), பகலவன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், சங்கநிதி, தவநிதி ஆகியோரின் அருமைச் சகோதரியும் காலஞ்சென்ற கந்தசாமி (பொறியியலாளர்) மற்றும் கார்த்திகேசு (சேவையர்), கணேஸ் (பொறியியலாளர்), இராசலட்சுமி (மாத்தளை), தனலட்சுமி (மலேசியா), விஜயலட்சுமி (மாத்தளை), காலஞ்சென்ற தபானந்தம் (ஓய்வூதியர்) மற்றும் பழனிவேற்பிள்ளை (முன்னாள் அதிபர், கொக்/ஞானபண்டித வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

59, பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்
T.P: 0044-2082623996 (1045515)

தகவல்:
திருமதி சங்கநிதி தபானந்தம்,
திருமதி தவநிதி பழனிவேற்பிள்ளை
(உடன் பிறப்புக்கள்).

# அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற ஜனநாயகத் தலைவரை விடுவிக்குக

## சீனாவுக்கு அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா கோரிக்கை

வாஷிங்டன், ஒக். 11

அமைதிக்கான நோபல்பரிசு வழங்கப்பட்டுள்ள சீனத் தலைவர் லி ஜியாபோவை சீன அரசு விடுதலை செய்யவேண்டும் என்று அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா கேட்டுக் கொண்டுள்ளார்.

சீனாவைச் சேர்ந்த ஜனநாயகத் தலைவர் லி ஜியாபோ இலக்கியவாதியும் கல்லூரி பேராசிரியருமாவார். இவர் ஜனநாயக ஆட்சி கோரி பல்வேறு போராட்டங்களை நடத்தியவர்.

இவர் ஆட்சியை கவிழ்க்க சதி செய்தார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டு 11 ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்து வருகிறார். கடந்த டிசெம்பர் மாதம் முதல் இவர் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்.

இவருக்கு நோர்வேயைச் சேர்ந்த நோபல் அறக்கட்டளை, அமைதிக்கான நோபல் பரிசை அளித்துள்ளது. இந்திய நாணயப்படி ரூ. 6 கோடியே 60 இலட்சம் ரொக்கப் பணத்துடன் கூடிய இந்தப் பரிசு எதிர்வரும் டிசம்பர் மாதம் 10ஆம் திகதி ஆஸ்லோவில் நடைபெறும் விழாவில் வழங்கப்படுகிறது.

இந்த நிலையில் சிறையிலிருக்கும் லி ஜியாபோவை விடுதலை செய்யவேண்டும் என்ற முதல் குரலை அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா எழுப்பியிருக்கிறார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

லிவுக்கு நோபல் பரிசு வழங்கியதன் மூலம், நோபல் பரிசுக்குழு ஒரு துணிச்சல்காரரைத் தேர்ந்தெடுத்துள்ளது.

இவர் சட்டப்பூர்வமான ஆட்சி, ஜனநாயக நெறிமுறைகள், மனித உரிமை ஆகியவற்றை அடைவதற்காக அமைதியான முறையில் போராடி வருகிறார்.

ஒவ்வொரு மனிதனின் - ஒவ்வொரு பெண்ணின் - குழந்தையின் மனித உரிமைகள் மதிக்கப்படவேண்டும் என்பதை இந்தப் பரிசு நமக்கு நினைவுபடுத்துகிறது. எனவே லிவை விடுதலை செய்யும்படி நான் சீன அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

லி தான் நம்பிய கொள்கைக்காக தன் வாழ்க்கையை தியாகம் செய்தவராவார். அவரைத் தேர்ந்தெடுத்த நோபல் குழுவை நான் பாராட்டுகிறேன். நான் ஏற்கனவே ஒஸ்லோ நகரில் நடந்த விழாவில் கூறியபடி, அனைத்து மனிதர்களின் அபிலாஷைகளுக்கும் அமெரிக்கா குரல் எழுப்பும் என்பதை மீண்டும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

- இவ்வாறு ஒபாமா கூறினார்.

வெளிநாட்டு அமைச்சர் ஹிலாரி கிளின்டனும் லிவுக்கு நோபல் பரிசு வழங்கியமையை வரவேற்றுள்ளார். அவரைத் தேர்ந்தெடுத்த நோபல் குழுவினரையும் அவர் பாராட்டியுள்ளார்.

# பங்களாதேஷில் புயல் மழைக்கு 15 பேர் பலி; 50 பேர் மாயம்!

டாக்கா, ஒக். 11

பங்களாதேஷில் கடந்த 3 நாள்களாகப் புயல் வீசியது. இதனால் இடைவிடாத மழை பெய்தது. ஒரே நாளில் 12 அங்குல மழை பெய்தது. இந்தப் புயல் மழை காரணமாக ஏற்பட்ட வெள்ள பெருக்கு ஊருக்குள் புகுந்தது.

இவற்றில் வீடுகள் இடிந்து விழுந்ததில் 15 பேர் பலியாயினர். 50 பேரைக் காணவில்லை. மழை வெள்ளத்துக்கு வீடுகள் இடிந்து விழுந்ததில் 5 இலட்சம் பேர் வீடுகளை இழந்தனர்.

கடலோரப் பகுதிகளில் மக்கள் குடிசைகளில்தான் வசித்து வருகிறார்கள். அங்கு 5 அடி உயரத்துக்கு அலை அடித்தது.

பங்களாதேஷில் ஒவ்வொரு ஆண்டும் புயல் மழைக்குப் பலர் பலியாகிறார்கள். கடந்த 2007ஆம் ஆண்டு வீசிய புயலுக்கு 3 ஆயிரத்து 500 பேர் பலியானார்கள்.

# பயணிகள் கப்பலில் தீ 249 பேர் உயிர் தப்பினர்

பேர்ளின், ஒக. 11

லிதுவேனியாவைச் சேர்ந்த ஒரு பயணிகள் கப்பல் ஜேர்மனியிலுள்ள கீல் துறைமுகத்திலிருந்து கிளைமீடியா நகருக்குப் புறப்பட்டுச் சென்றது. இதில் 249 பேர் பயணம் செய்தனர்.

சனிக்கிழமை இரவு ஜேர்மனியிலுள்ள பால்டிக் கடல் பகுதியில் சென்றபோது கப்பலின் மேல் தளத்தில் திடீரென தீப்பிடித்தது. காற்று அதிவேகமாக வீசியதால் தீ மளமளவென வேகமாகப் பரவியது.

இது குறித்து ஜேர்மனியிலுள்ள துறைமுக அதிகாரிகளுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து மீட்புப் பணி முடுக்கிவிடப்பட்டது. தீயை அணைக்கும் பணியில் தீயணைப்புக் கப்பல்கள் ஈடுபடுத்தப்பட்டன. அவை விரைந்து சென்று தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டன. பயணிகளை மீட்க 6 சிறிய கப்பல்கள் அனுப்பப்பட்டன.

மேலும், ஹெலிக்கொப்டரும் அனுப்பப்பட்டது. இதனால் முதல் தளத்தில் பிடித்த தீ மேலும் பரவாமல் தடுக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து கப்பலில் பயணம் செய்த 249 பேரும் உயிருடன் மீட்கப்பட்டனர்.

இதற்கிடையே, இந்தத் தீ விபத்தில் 26 பேருக்கு இலேசான காயம் ஏற்பட்டது. இவர்கள் அனைவரும் ஹெலிக்கொப்டர் மூலம் ஜேர்மனியிலுள்ள வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். அங்கு அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்படுகிறது.

தொழில்நுட்பக் கோளாறே தீ விபத்துக்குக் காரணம் எனக் கூறப்படுகிறது. விபத்துக்குள்ளான கப்பல் 650 அடி நீளம் உடையது.

# பெயரைச் சொல்லி என்னை அழையுங்கள் மக்களுக்கு நேபாள மன்னர் வேண்டுகோள்

காத்மாண்டு, ஒக். 11

என்னை பெயரைச் சொல்லி அழையுங்கள் என்று நேபாளத்தின் கடைசி மன்னரான ஞானேந்திர ஷா, மக்களுக்கு அன்பு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நான் என்றைக்கோ உங்களுள் ஒருவராக மாறிவிட்டேன். இதனால் என்னை மன்னரென்றோ, வேறு அடைமொழியுடனோ நீங்கள் அழைப்பதை நான் விரும்பவில்லை. அதில் எனக்கு துளியும் உடன்பாடும் இல்லை. 'ஞானேந்திரா' என்று எனது பெயரை சொல்லி அழைத்தால்தான் நான் மகிழ்ச்சி அடைவேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நேபாளத்தின் கடைசி மன்னரான ஞானேந்திரா, அவரது மருமகள் ஹிமானி ஷாவின் பெயரில் தன்னார்வத் தொண்டு நிறுவனம் ஒன்றை தொடங்கியுள்ளார்.


இந்தத் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தை வெள்ளிக்கிழமை காத்மாண்டுவில் தொடங்கி வைத்து பேசிய ஞானேந்திரா, தன்னை பெயரைச் சொல்லி அழைக்குமாறு மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாட்டில் ஸ்திரமற்ற அரசியல் சூழல் நிலவுகிறது. சர்வதேச பொருளாதார நெருக்கடியால் நம் நாடும் கடுமையாகப் பாதிப்படைந்துள்ளது. இதனால் மக்கள் கடும் அவதிக்குள்ளாகியுள்ளனர். இது என்னை வேதனையில் ஆழ்த்தியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இனிமேலும் மக்களைவிட்டு ஒதுங்கியிருக்க விரும்பவில்லை. மக்களை நேரடியாகச் சந்தித்து அவர்களுக்குச் சேவை செய்யவேண்டும் என்ற முடிவுக்கு வந்துவிட்டேன். இதைக் கருத்தில் கொண்டுதான் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தை தொடங்கியுள்ளேன் என்றும் ஞானேந்திரா கூறியுள்ளார்.

இந்த நிகழ்ச்சியில் ஹிமானி ஷா பேசுகையில், இப்போது தொடங்கப்பட்டுள்ள தன்னார்வத் தொண்டு நிறுவனம் 5 பகுதிகளில் சேவை புரியவுள்ளது. அதாவது, நலிவடைந்த பெண்களுக்கு இலவச மருத்துவ வசதி, ஏழை மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை அளித்தல், சமூக மேம்பாட்டுக்குப் பாடுபடுதல், வேலைவாய்ப்பை உருவாக்குதல், முதியோர்களுக்கு உதவுதல் போன்ற சேவையை ஆற்றவுள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார்.

நேபாளத்தின் 240 ஆண்டுகால மன்னராட்சிக்கு எதிராக மாவோயிஸ்ட்கள் ஆயுதம் ஏந்திப் போராடி அதை முடிவுக்கு கொண்டுவந்தனர். அரசியல்சாசன சபை, 2008ஆம் ஆண்டு மன்னராட்சியை அதிகாரபூர்வமாக முடிவுக்கு கொண்டுவந்தது. தற்போது தன்னார்வத் தொண்டு நிறுவனத்தை மன்னர் தொடங்கியுள்ளார்.



மலேசிய முதல் விண்வெளி வீரர் டாக்டர் ஷேக் முஸாபர் சுக்குர் ஷேக் முஸ்தபா தனது மணமகள் டாக்டர் ஹலினா மொஹம்மத் யூனுஸை நேற்று 10.10.2010 அன்று புட்ராஜாயாஸ் மசூதியில் சம்பிரதாயபூர்வமாக மணந்துகொண்டபோது பிடிக்கப்பட்ட படம்.

# மும்பை குடிசை வாசிகளிடம் பிரிட்டிஷர் பாடம் கற்க வேண்டும்

## சொல்பவர் இளவரசர் சார்ள்ஸ்

லண்டன், ஒக். 11

உலகிலேயே மிகப்பெரிய குடிசைப் பகுதியான தாராவியில் வசிக்கும் மக்களின் வாழ்க்கை முறை குறித்து பிரிட்டிஷ் இளவரசர் சார்ள்ஸ் புகழாரம் சூட்டியுள்ளார்.

தாராவி மக்களின் வாழ்க்கை முறை தன்னை வெகுவாக கவர்ந்துவிட்டது என்றும், அவர்களிடமிருந்து பிரிட்டன் நகரங்களில் வசிக்கும் மக்கள் பாடம் கற்றுக்கொள்ள வேண்டும் என்றும் சார்ள்ஸ் தான் எழுதியுள்ள 'ஹார்மோனி' என்ற புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

தாராவி குடிசைப் பகுதியைச் சென்று பார்வையிட்டபோது அங்கு வசிக்கும் மக்களின் செயல்பாடுகளை அறிந்து ஆச்சரியப்பட்டேன். அவர்கள்வாழ்க்கை முறையை நேர்த்தியாக அமைத்துக்கொண்டுள்ளனர். எல்லாவற்றிலும் ஒழுங்கை கடைப்பிடிக்கின்றனர்.

பிரிட்டனிலுள்ள நகரங்கள் எல்லாம் தாராவியை முன்மாதிரியாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் சார்ள்ஸ் தனது புத்தகத்தில் எழுதியுள்ளார். தாராவியில் வசிக்கும் மக்கள், பயன்பாட்டுக்கு பின்னர் பொலித்தீன் பை உள்ளிட்ட குப்பைகளை அப்படியே கீழே போட்டு சுற்றுச்சூழலை அசுத்தப்படுத்துவதில்லை. அவற்றை தன்மைக்கு ஏற்றவாறு தனித்தனியாகப் பிரித்து மறுசுழற்சிக்கு அனுப்பி வைக்கின்றனர்.

அவர்களின் இந்தச் செயலுக்கு அரசு எவ்வித உதவியும் செய்யவில்லை. அவர்களாகவே செய்து வருகின்றனர். அவர்களின் இத்தகைய செயல் பாராட்டுக்குரியது.

சார்ள்ஸ் எழுதியுள்ள இத்தனை விடயங்கள் அடங்கிய ஹார்மோனி என்ற புத்தகம் அடுத்த வாரம் வெளியிடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## உலக அரங்கில்

# வட கொரிய தொழிலாளர் கட்சி விழாவில் ஜனாதிபதி பங்கேற்பு

பியோங்யாங், ஒக். 11

வடகொரியாவிலுள்ள பியோங்யாங் நகரில் நடந்த மக்கள் தொழிலாளர் கட்சியின் 65ஆவது ஆண்டு விழாவில் வடகொரிய ஜனாதிபதி கிம் ஜோங்-2 தன் மகன் கிம் ஜோங்யுன் உடன் கலந்துகொண்டார். விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட சீன ஜனாதிபதி ஹூ ஜிண்டாவோ இருநாடுகளுக்கிடையே உள்ள உறவுகள் குறித்துப் பேசினார்.

தற்போது பொது நிகழ்ச்சிகள் எதிலும் கலந்துகொள்ளாமல் இருந்து வந்த கொரிய ஜனாதிபதி இந்த விழாவில் தன் மகனுடன் கலந்துகொண்டார். மேலும் அமெரிக்க அமைச்சர் ஒருவர் இப்போதைய வடகொரிய ஜனாதிபதி தன்னுடைய பொறுப்புகளை மகனிடம் ஒப்படைக்கவேண்டும் எனக் கருத்து தெரிவித்திருந்தார்.

# ஹங்கேரியில் மூன்று கிராமங்கள் இரசாயனக் கழிவுகளால் பெரும் பாதிப்பு

புடாபெஸ்ட், ஒக். 11

ஹங்கேரியில் அலுமினிய தொழிற்சாலையில் தேக்கி வைக்கப்பட்டிருந்த இரசாயன கழிவு தேக்கம் உடைந்து ஊருக்குள் புகுந்ததால் ஏழு கிராமங்கள் மூழ்கியுள்ளன.

இவற்றில் ஆறு பேர் பலியாகியுள்ளனர். ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான ஹங்கேரியில் தலைநகர் புடாபெஸ்டுக்கு 160 கி.மீ. தொலைவில் அஜ்கா என்ற ஊர் உள்ளது.

இங்கு பெரிய அலுமினிய தொழிற்சாலை உள்ளது. தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் இரசாயன கழிவுகள் ஏரி போன்ற இடத்தில் தேக்கி வைக்கப்பட்டன.

கடந்த 95ஆம் ஆண்டு முதல் இந்தத் தொழிற்சாலையிலிருந்து வெளியேற்றப்பட்ட கழிவுகள் இந்தக் கழிவு தேக்கத்தில் தேங்கியிருந்தன.

கடந்த ஐந்து நாள்களுக்கு முன்னர் இந்தக் கழிவு தேக்கத்தின் சுவரில் உடைப்பு ஏற்பட்டு இரசாயன கழிவுகள் பெருக்கெடுத்து ஊருக்குள் புகுந்தது. சேறும் சகதியுமான இரசாயன கழிவுகள் பெருக்கெடுத்து ஏழு கிராமங்களை மூழ்கடித்துள்ளது.

இதனால், பயிர்கள் சேதமடைந்தன. கால்நடைகள் செத்து மிதக்கின்றன. ஆறு பேர் உயிரிழந்துள்ளனர். ஏராளமானவர்கள் பல்வேறு உடல் கோளாறுகளால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஐரோப்பாவின் இரண்டாவது மிகப்பெரிய நதி டனுபி. 10 நாடுகள் வழியாக இந்த நதி ஓடுகிறது. அலுமினிய தொழிற்சாலையிலிருந்து உடைப்பெடுத்த இரசாயன கழிவுகள் தற்போது இந்த நதியில் கலந்துள்ளன.

இதனால், டனுபி ஆற்றில் ஏராளமான மீன்கள் செத்து மிதக்கின்றன. ஹங்கேரி பிரதமர் விக்டர் ஓர்பான் சம்பவ இடங்களை ஹெலிக்கொப்டர் மூலம் பார்வையிட்டு அவசர நிலையை அறிவித்துள்ளார். கழிவுகள் பாய்ந்த அனைத்து இடங்களும் சிவப்புநிற சகதியாகக் காணப்படுகிறது. இந்தக் கழிவுகளில் ஆர்சனிக்கும், பாதரச கழிவுகளும் மிகுந்துள்ளதால் உயிர் இழப்போரின் எண்ணிக்கை அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது.

### இலங்கைப் பல்கலைக்கழகங்களின் விளையாட்டு விழா

# 6 தங்கம், 5 வெள்ளி, 10 வெண்கலங்களுடன் யாழ். பல்கலைக்கழகத்துக்கு மூன்றாவது இடம்

யாழ்ப்பாணம், ஒக். 11

இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான விளையாட்டு விழாவில் 6 தங்கம், 5 வெள்ளி, 10 வெண்கலப் பதக்கங்களை சுவீகரித்தது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி. 105 புள்ளிகளைபெற்று மூன்றாவது இடத்தைப் பெற்றது.

இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான 10 ஆவது விளையாட்டு விழா கொழும்பு மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமையும் நேற்று ஞாயிற்றுக்கிழமையும் நடைபெற்றது.

இதில் ஆண்களுக்கான 400 மீற்றர் தடை தண்டல் போட்டியில் ஐங்கரன் முதலாவது இடத்தைப் பெற்றுத் தங்கப்பதக்கத்தினையும் கோபிநாத் இரண்டாவது இடத்தைப் பெற்று வெள்ளிப்பதக்கத்தையும் பெற்றனர்.

ஆண்களுக்கான நீளம்பாய்தல் நிகழ்வில் ஸ்ரீநிவாஸ் இரண்டாமிடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தையும் -

ஆண்களுக்கான உயரம்பாய்தல் நிகழ்வில் துசிதரன் இரண்டாமிடத்தைப் பெற்று வெள்ளிப்பதக்கத்தையும் -

ஆண்களுக்கான 800 மீற்றர் ஓட்டத்தில் றூபிநாத் மூன்றாமிடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தையும் பெற்றுக் கொண்டனர்.

பெண்களுக்கான 800 மீற்றர் ஓட்டத்தில் யாழினி மூன்றாமிடத்தைப்பெற்று வெண்கலப் பதக்கத்தையும் பெற்றுள்ளார்.

ஆண்களுக்கான 110 மீற்றர் தடை தாண்டல் போட்டியில் கோபிநாத் முதலாவது இடத்தைப்பெற்று தங்க பதக்கத்தினையும் ஐங்கரன் மூன்றாமிடத்தைப் பெற்று வெண்கலபதக்கத்தினையும் கைப்பறினர்.

ஆண்களுக்கான 400 மீற்றர் ஓட்டத்தில் ரெரோன் கொடிற்றோர் இரண்டாமிடத்தைப்பெற்று வெள்ளிப் பதக்கத்தினையும்.

ஆண்களுக்கான உயரம்பாய்தலில் ஜெயரூபன் இரண்டாம் இடத்தைப்பெற்று வெள்ளிப்பதக்கத்தினையும்

பெண்களுக்கான முப்பாய்ச்சல் நிகழ்வில் கீர்த்திகா இரண்டாமிடத்தைப் பெற்று வெள்ளிபதக்கத்தினையும்.

ஆண்களுக்காள முப்பாய்ச்சல் நிகழ்வில் கஜேந்திரன் 3 ஆம் இடத்தைப்பெற்று வெண்கல பதக்கத்தினையும் பெற்றனர்.

பெண்களுக்கான 100 மீற்றர் தடைதாண்டல் போட்டியில் கீர்த்திக 3 ஆம் இடத்தைப் பெற்று வெண்கலப்பதக்கத்தினையும்.

பெண்களுக்கான 4x400 அஞ்சல் ஓட்டத்தில் யாழ்.பல்கலைக்கழக அணி 3 ஆம் இடத்தைப்பெற்று வெண்கலப்பதக்கத்தினையும்.

ஆண்களுக்கான 4x400 அஞ்சல் ஓட்ட நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக அணி முதலாவது இடத்தைப் பெற்று தங்க பதக்கத்தினை பெற்றுள்ளனர்.

இதில் ஆண்கள் பிரிவு தடகளப் போட்டியில் 71 புள்ளிகளைப் பெற்று யாழ்.பல்கலை முதலாமிடத்தை பெற்றது. (6-23)

## உதைபந்தாட்ட அரையிறுதிகளில்...

வலி.வடக்கு, ஒக். 11

உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலைகளின் 13 வயதுப் பிரிவினர்களுக்கு இடையே நடைபெற்ற உதைபந்தாட்ட போட்டி அரையிறுதி ஆட்டங்களின் முடிவுகள் வருமாறு:-

சுன்னாகம் கந்தரேடை தமிழ் கந்தையா வித்தியாலயத்திற்கும் புன்னாலைக்கட்டுவன் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அணிக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாலயம் 1:0 என்ற கோல் கணக்கில் புன்னாலைக்கட்டுவன் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையை வெற்றி கொண்டது.

ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயத்திற்கும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம் 2:0 என்ற கோல் கணக்கில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியை வெற்றி பெற்றது. (6-86)

## சுப்பிரமணியம் ஞாபகார்த்தக் கிரிக்கெட் அளவெட்டி வேள்ட் லெவன் வெற்றி

வலி.வடக்கு, ஒக். 11

அளவெட்டி மத்திய விளையாட்டுக் கழகம் அமரர் சுப்பிரமணியம் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்காக நடத்தும் 16 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய கிரிக்கெட் போட்டி ஆட்டத்தில் அளவெட்டி வேள்ட் லெவன் விளையாட்டுக் கழகம் 6 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

தெல்லிப்பழை பூமா விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் உடுவில் மத்திய விளையாட்டுக் கழகமும் அளவெட்டி வேள்ட் லெவன் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய உடுவில் மத்திய விளையாட்டுக் கழகம் 16 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 94 ஓட்டங்களைப்பெற்றது.

லதீஸ் 24, லோறன்ஸ் 23, கயன் 11 ஓட்டங்களைப் பெற்றனர்.

வேள்ட் லெவன் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த தயாளன் 16 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும், டினுசன் 22 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், ஜெயச்சந்திரன், நிரோசன் முறைய 4, 16 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

95 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய லேள்ட் லெவன் விளையாட்டுக்கழகம் 15 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 97 ஓட்டங்களைப் பெற்றது வெற்றி இலக்கை அடைந்தது.

தயாளன் 34, விமலேஸ் 25, நிரோஜன் 13 ஓட்டங்களைப் பெற்றனர்.

உடுவில் மத்தி விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த செந்தூரன், சஞ்சஜன், வசி முறையே 14, 19, 21 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு விக்கெட்டை கைப்பற்றினர். (6-86)





யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அவை நடத்தும்

**மாபெரும் பளு, வலு தூக்கும் போட்டி**

**(Weight Lifting & Power Lifting)**

உதயன் நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அவையும் யாழ்.பல்கலைக்கழக பளுதூக்கும் அணியும் இணைந்து நடத்தும் யாழ்.மாவட்ட ரீதியிலான போட்டி.

- ★ யாழ். மாவட்டத்துக்குட்பட்ட அனைத்து வீரர்களும் கலந்துகொள்ள முடியும்.
- ★ இடம்: யாழ்.பல்கலைக்கழக மைதானம்
- ★ காலம்: ஒக்ரோபர் 16 ஆம், 17 ஆம் திகதிகளில்
- ★ விண்ணப்பப்படிவங்களை யாழ்.பல்கலைக்கழக உடற்கல்வி அலகில் பெற்றுக்கொள்ளலாம்.
- ★ இன்று வெள்ளிக்கிழமை முதல் விண்ணப்பப் படிவங்கள் விநியோகிக்கப்படும்.
- ★ விண்ணப்ப முடிவுத் திகதி : 15.10.2010


## சிறுவர் தினக் கரப்பந்தாட்டம்; மன்னார் அணி இறுதியாட்டத்தில்

வலி.வடக்கு, ஒக். 11

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு வடமாகாண மாவட்ட அணிகளும் அனுராதபுர மாவட்ட அணியும் பங்கு பற்றிய கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் மன்னார் மாவட்ட அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

ஜனாதிபதியின் பணிப்பின் பேரில் வடக்கின் வசந்தம் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் ஆதரவுடன் கிளிநொச்சி கல்வி வலயம் நடத்திய கரப்பந்தாட்டப் போட்டியின் அரையிறுதியாட்டத்தில் மன்னார் - முல்லைத்தீவு அணிகள் மோதின.

கிளிநொச்சி இந்துக் கல்லூரி மைதானத்தில் இந்த ஆட்டம் இடம் பெற்றது.

மூன்று சுற்றுக்களைக்கொண்ட இந்த ஆட்டத்தில் முதல் சுற்றை முல்லைத்தீவு மாவட்ட அணி 25:22 புள்ளிகள் பெற்று வெற்றி பெற்றது.

அடுத்த இரண்டுசுற்றுக்களையும் மன்னார் மாவட்ட அணி 25:21, 25:22 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தெரிவானது. (6-86)




## மகாஜன நூற்றாண்டுவிழா கிரிக்கெட் யாழ்ப்பாணக் கல்லூரிக்கு வெற்றி

வலி.வடக்கு, ஒக். 11

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி நூற்றாண்டு விழாவையொட்டி யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 5 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய 6 பேர் பங்கு பற்றும் கிரிக்கெட் போட்டி ஆட்டத்தில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி வெற்றிபெற்றது.

மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டி ஆட்டத்தில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோதயாக் கல்லூரி 5 ஓவர்கள் நிறைவில் 2 விக்கெட்டுக்களை இழந்து 54 ஓட்டங்களைப் பெற்றது.

சுஜி 3 பௌண்டறிகள் 2 சிக்ஸர்களுடன் 31 ஓட்டங்களையும் ஸ்ரீ கஜன் 15 ஓட்டங்களைப் பெற்றனர். யாழ்ப்பாணக் கல்லூரியைச் சேர்ந்த ஸ்ரீ குகன் 9 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

55 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரி 3.5 ஓவர்களில் 56 ஓட்டங்களை விக்கெட் இழப்பின்றி பெற்று வெற்றி இலக்கை அடைந்தது.

இதில் சீராளன் நான்கு ஆறுகளுடன் 37 ஸ்ரீ குகன் 13 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றுக் கொண்டனர். (6-86)





யாழ்.சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகமும் மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்க யாழ். கிளையும் இணைந்து பிரான்ஸ் பழைய மாணவர் சங்கத்தின் அனுசரனையுடன் யாழ்.மத்திய கல்லூரி கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் ஜெயா கனகநாயகம் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக யாழ்.மத்திய கல்லூரியின் இல்லங்களுக்கு இடையே நடத்திவந்த ருவென்ரி - 20 கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் மத்திய கல்லூரியில் இடம் பெற்றது.

அதன் ஆரம்பநிகழ்வின்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

யாழ்.மத்திய கல்லூரி அதிபர் எல்.ஓங்காரமூர்த்தி கழக கொடியினை ஏற்றுவதினை முதலாவது படத்திலும் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட பிரான்ஸ் பழைய மாணவர் சங்க தலைவர் முத்துகுமாருக்கு அதிபர், வீரர்களை அறிமுகம் செய்து வைப்பதினை இரண்டாவது படத்திலும் காணலாம். *(படங்கள்: தமிழினியன்)*

## யாழ்.மத்திய கல்லூரியின் ருவென்ரி -20 கிண்ணம் வென்றது புள்ளோ இல்லம்

யாழ்ப்பாணம், ஒக். 11

ஜெயா கனகநாயகம் வெற்றிக்கிண்ணத்தைக் கைப்பற்றியது யாழ்.மத்திய கல்லூரியின் புள்ளோ இல்லம்.

யாழ்.சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம் மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்க யாழ். கிளையும் இணைந்து பிரான்ஸ் பழைய மாணவர் சங்கத்தின் அனுசரணையுடன் யாழ்.மத்திய கல்லூரி இல்லங்களுக்கு இடையே நடத்திய முன்னாள் கிரிகெட் அணித் தலைவர் ஜெயா கனகநாயகம் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்கான ருவென்ரி-20 கிரிகெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் நேற்று காலை யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. இதில் லிஞ்ச இல்ல அணியை எதிர்த்து புள்ளோ இல்ல அணி மோதியது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய புள்ளோ இல்ல அணி 20 ஓவர் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 124 ஓட்டங்களைப் பெற்றது. இதில் டார்வின் 48 ஓட்டங்களையும் எடின் 32 ஓட்டங்களையும் தமது அணிக்காக பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் லிஞ்ச் இல்ல அணி வீரர்களான சௌமிதரன் 4 ஓவர்கள் பந்து வீசி 24 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், வதுசணன் 4 ஓவர்கள் பந்து வீசி 19 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

125 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென களம் இறங்கிய லிஞ்ச் இல்ல அணி 18.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 112 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

இதில் வதுசணன் 37 ஓட்டங்களையும், தர்சன் 18 ஓட்டங்களையும் சௌமிதரன் 9 ஓட்டங்களையும் பெற்றன.

பந்து வீச்சில் புள்ளோ இல்ல வீரர்களான வில்சன் 4 ஓவர்கள் பந்து வீசி 12 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும், டார்வின் 3 ஓவர்கள் பந்து வீசி 4 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும், எடின் 4 ஓவர்கள் பந்து வீசி 21 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். (6-23)

## உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 11

ஊர்காவற்றுறை சென். அன்ரனிஸ் கல்லூரி, யாழ்.மத்திய கல்லூரிகளின் 14, 16, 18, 20 வயது பிரிவு அணிகளுக்கு இடையிலான சிநேக பூர்வ உதைபந்தாட்டப் போட்டிகள் நாளைமறுதினம் புதன்கிழமை யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன. (6-23)

# ஆஸ்திரேலியாவுக்கு எதிரான 2ஆவது டெஸ்ட்:

# இந்திய அணி தடுமாற்றம்!



பெங்களூர், ஒக். 11

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணி தடுமாற்றத்துடன் ஆடி வருகிறது.

இந்தியா-ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான 2ஆவது டெஸ்ட் போட்டி பெங்களூரில் நடைபெற்றுவருகிறது.

இதில், நாணயச் சுழற்சியில் வென்று ஆட்டத்தை ஆரம்பித்த ஆஸ்திரேலிய அணி, முதல் நாள் ஆட்ட நேர முடிவின்போது, முதல் இன்னிங்ஸிற்காக 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 285 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது.

பின்னர் நேற்றுத் தனது ஆட்டத்தைத் தொடர்ந்த ஆஸ்திரேலிய அணி, சகல விக்கெட்டுகளையும் இழந்து 478 ஓட்டங்களைப் பெற்றது.

முதல்நாள் முடிவில் ஆட்டமிழக்காது இருந்த நோர்த் நேற்று சதமடித்தார். அவருக்கு பக்க பலமாக ஆடிய பெய்ன் 59 ஓட்டங்களோடு ஆட்டமிழந்தார். அதன் பின்னர் சிறப்பாக ஆடி 158 ஓட்டங்களைக் குவித்த நிலையில் நோர்த் பவிலியன் திரும்பினார். இந்த இணையின் வீழ்ச்சிக்குப் பின்னர் அவுஸ்திரேலிய அணியின் விக்கெட்டுக்கள் மளமளவென்று வீழ்ந்தன. ஜோன்சன் 0, ஹற்றிஸ் - 17, ஹில்ப்நாஸ் - 16, ஜோர்ஜ் - 2 ஓட்டங்களைப் பெற்றார்கள்.

இந்திய அணிசார்பில் ஹர்பஜன்சிங் 4 விக்கெட்டுக்களையும், ஓஜா 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்கள்.

பின்னர், தனது முதலாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இந்திய அணிக்கு ஷேவாக்கும் முரளி விஜய்யும் சிறப்பான ஆரம்பத்தை வழங்கினர். எனினும் ஹில்ப்நாசின் பந்தில் ஜோன்சனிடம் பிடிகொடுத்து 30 ஓட்டங்களோடு ஷேவாக் ஆட்டமிழந்தார். அதன் பின் இந்திய அணியின் சுவர் என வர்ணிக்கப்படும் ராகுல்ராவிட் களமிறங்கிய போதும் ஒரு ஓட்டத்தோடு ஜேன்சனின் பந்துவீச்சில் ஆட்டமிழந்து ரசிகர்களுக்கு அதிர்ச்சியளித்தார். எனினும் தொடர்ந்து களமிறங்கிய சச்சினும் மறுமுனையில் ஆட்டமிழக்காதிருந்த முரளிவிஜய்யும் இந்திய அணிக்கு நம்பிக்கையூட்டினர். அவுஸ்திரேலிய வீரர்களின் பந்துவீச்சை நாலாபுறமும் சிதறடித்தனர். நேற்றைய ஆட்ட நேர முடிவின்போது 02 விக்கெட்டுகள் இழப்புக்கு 128 ஓட்டங்களைப பெற்றது.

இதில் முரளிவிஜய் 42 ஓட்டங்களையும், சச்சின் டெண்டுல்கர் 44 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழக்காது இருந்தனர்.(எ)

## சானியாவுக்குவெள்ளிப்பதக்கம்



புதுடில்லி, ஒக்.11

கொமன்வெல்த் போட்டிகளில் நேற்றுமுன்தினம் நடந்த டென்னிஸ் போட்டியின் இறுதியாட்டத்தில் சானியாவுக்கு வெள்ளிப்பதக்கம் கிடைத்தது.

டென்னிஸில் தங்கம் வெல்வார் எனப் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட சானியா, இறுதியாட்டத்தில் போராடித் தோல்வியடைந்தார்.

ஆஸ்திரேலியாவின் அனஸ்டசியா ரோடினோவாவை எதிர்த்து ஆடிய சானியா, தங்கப்பதக்கத்தை நிர்ணயிக்கும் கடைசிச் செற்றில் 'டை பிரேக்கர்' வரை சென்று தோல்வியைத் தழுவி ஏமாற்றமளித்தார்.

3-6, 6-2, 6-7 (3-7) என்ற செற் கணக்கில் தோல்வி கண்ட சானியா மிர்ஷா வெள்ளிப்பதக்கத்துடன் தனது ஆட்டத்தை முடித்துக்கொண்டார்.

வெண்கலப் பதக்கத்திற்கான ஆண்கள் இரட்டையர் ஆட்டத்தில், இந்தியாவின் லியாண்டர் பயஸ்-மகேஷ் பூபதி ஜோடி 6-3, 7-6 (7-4) என்ற நேர் செற் கணக்கில் சக நாட்டவர்களான ரோகன் போபண்ணா-சோம்தேவ் தேவ்வர்மன் ஜோடியை வீழ்த்தி வெண்கலப்பதக்கத்தைப் பெற்றது.

## பஞ்சாப், ராஜஸ்தான் அணிகள் நீக்கம்!

ஐ.பி.எல். தொடரிலிருந்து பஞ்சாப், ராஜஸ்தான் அணிகள் நீக்கப்பட்டுள்ளன.

ஐ.பி.எல். நிர்வாகக் குழுக் கூட்டம் நேற்று மும்பையில் நடைபெற்றது. இதன்போதே ஐ.பி.எல். 4ஆவது தொடரில் பஞ்சாப், ராஜஸ் தான் அணிகள் பங்கேற்கத் தடை விதிக்கப்பட்டது.

பஞ்சாப், ராஜஸ்தான், கொச்சி அணிகளிடம், அந்த அணிகளின் உரிமையாளர்கள் குறித்து விளக்கம் அளிக்கும்படி, ஐ.பி.எல். நிர்வாகம் சம்பந்தப்பட்டவர்களுக்கு நோட்டீஸ் அனுப்பியிருந்தது.

எனினும, அவர்கள் சரிவரப் பதிலளிக்காதமையாலும், அவர்களுக்கு வழங்கப்பட்ட கெடு முடிவடைந்தமையாலும், பஞ்சாப், ராஜஸ்தான், அணிகளுக்குத் தடை விதிக்கப்பட்டது.

அதேவேளை, ஐ.பி.எல். தொடருக்காகப் புதிதாக இணைக்கப்பட்ட கொச்சி அணியிடம் விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது.

## உலகக் கிண்ணத் தொடருடன் முரளி ஓய்வு

சென்னை, ஒக். 11

''அடுத்த உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் முடிவடைந்த பின்னர், சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வுபெற எண்ணியுள்ளேன்.''



- இவ்வாறு இலங்கை அணியின் 'சுழல் மன்னன்' முரளிதரன் கூறியுள்ளார்.

சர்வதேச டெஸ்ட் போட்டிகளில் 800 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய முரளிதரனுக்கு, சென்னையில் நேற்று பாராட்டு விழா இடம்பெற்றது.

இதன்போது உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியவை வருமாறு:-

எனது 20 வருட கிரிக்கெட் வாழ்க்கை திருப்தியளிக்கும் வகையில் உள்ளது. இளைய சமூகத்திற்கு வாய்ப்புக் கொடுக்கும் காலம் வந்துவிட்டது. அதனால், நான் ஓய்வுபெற விரும்புகிறேன்.

அந்த வகையில், ஆசியக் கண்டத்தில் நடைபெறவுள்ள உலகக் கிண்ணத் தொடரின்போது நான் ஓய்வுபெற எண்ணியுள்ளேன்.

அதேவேளை, உலகக் கிண்ணத் தொடருக்கு முன்னர் நடைபெறவுள்ள ஆஸ்திரேலியத் தொடரில் நான் பங்கேற்கவுள்ளேன். அத்துடன், ஐ.பி.எல். தொடரிலும் சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்காகத் தொடர்ந்து விளையாடுவேன்.

- இப்படி முரளிதரன் தெரிவித்தார்.




## மலேஷிய வீரருக்குத் தடை!

புதுடில்லி, ஒக். 11

விதிமுறைகளை மீறி எதிரணி வீரரைத் தாக்கியதால் மலேஷிய ஹொக்கி அணி வீரருக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கொமன்வெல்த் ஆண்கள் ஹொக்கிப் போட்டியில் கடந்த வெள்ளியன்று நடந்த ஆட்டத்தில் மலேஷிய வீரர் பைசல் சாரி, ஸ்கொட்லாந்து கோல் காப்பாளர் அலிஸ்டரை, போட்டி விதிமுறைகளை மீறி இடித்தார்.

இந்தச் சம்பவத்தை போட்டியின்போது நடுவர்கள் கவனிக்கவில்லை. பின்னர் வீடியோவில் இது தெளிவாகத் தெரிந்தது. இது குறித்து விசாரணை நடத்திய தொழில்நுட்ப அதிகாரிகள், பைசல் சாரிக்கு 2 ஆட்டங்களில் விளையாடத் தடை விதித்தனர்.

## சிம்பாப்வே அணிக்கு எதிரான ஆட்டம்; தென்னாபிரிக்காவுக்கு இலகு வெற்றி!

புளோயம்போன்டைன், ஒக். 11

சிம்பாப்வே அணிக்கு எதிரான முதலாவது 'இருபது-20' போட்டியில், தென்னாபிரிக்க அணி 7 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது.

தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள சிம்பாப்வே அணி, 2 போட்டிகளைக் கொண்ட 'இருபது-20' தொடரில் விளையாடிவருகிறது.

முதலாவது போட்டி நேற்றுமுன்தினம் புளோயம்போன்டைனில் நடந்தது.

நாணயச் சுழற்சியில் வென்ற சிம்பாப்வே அணி, முதலில் துடுப்பெடுத்தாடியது.



ஆரம்ப வீரரான பிரண்டன் ரெய்லர் (0) ஏமாற்றமளித்தார். பின்னர் இணைந்த மசகட்சா - சிபாபா ஜோடி, தென்னாபிரிக்கப் பந்துவீச்சை எளிதாகச் சமாளித்தது.

இந்த ஜோடி 2ஆவது விக்கெட்டுக்காக 76 ஓட்டங்களைச் சேர்த்த நிலையில் சிபாபா (52) ஆட்டமிழந்தார். மறுமுனையில் அதிரடி காட்டிய மசகட்சா, 63 பந்துகளில் 2 சிக்ஸர்கள், 6 பவுண்டரிகள் உட்பட 72 ஓட்டங்களைச் சேர்த்துச் சென்றார்.

பின்னர் வந்த அணித்தலைவர் சிகும்பரா (10), கோவன்ட்ரி (12 - ஆட்டமிழக்காமல்), டபெங்வா (12 - ஆட்டமிழக்காமல்) ஆகியோர் ஓரளவு கைகொடுத்தனர்.

நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 168 ஓட்டங்களை சிம்பாப்வே அணி சேர்த்தது.

தென்னாபிரிக்க அணி சார்பாக பந்துவீச்சில், பர்னல் 2 விக்கெட்டுகளையும் திரான் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பின்னர், எட்டக்கூடிய இலக்கை விரட்டிய தென்னாபிரிக்க அணிக்கு ஸ்மித் - போஸ்மன் ஜோடி சிறப்பான ஆரம்பத்தைக் கொடுத்தது. முதல் விக்கெட்டுக்காக 90 ஓட்டங்களைச் சேர்த்தபோது, போஸ்மன் (33) ஆட்டமிழந்தார்.

பின்னர் அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய ஸ்மித் (58) நம்பிக்கையளித்தார். அடுத்து வந்த இங்கிராம் (3) ஏமாற்றினார். பின்னர் இணைந்த டுமினி (35) - மில்லர் (36) ஜோடி இறுதிவரை ஆட்டமிழக்காது நிலைத்து நின்று ஆடி, அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றனர்.

இறுதியில் தென்னாபிரிக்கா அணி, 15.5 ஓவர்களில் 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 169 ஓட்டங்களைப் பெற்றது. இதன்மூலம் 7 விக்கெட்டுகளால் இலகு வெற்றிபெற்றது.

சிம்பாப்வே அணி சார்பாக பந்துவீச்சில் உட்சேயா 2 விக்கெட்டுகளையும், கிரிமர் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.


### கொமன்வெல்த் போட்டிகளில் முதல் 10 இடங்களில் உள்ள நாடுகள் பெற்ற பதக்கங்களின் பட்டியல்

(நேற்று மாலை வரையானது)

| நாடு | தங்கம் | வெள்ளி | வெ.கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஆஸ்திரேலியா | 55 | 33 | 35 | 124 |
| இந்தியா | 28 | 18 | 21 | 67 |
| இங்கிலாந்து | 25 | 45 | 29 | 99 |
| கனடா | 19 | 12 | 23 | 54 |
| தென்னாபிரிக்கா | 09 | 10 | 09 | 28 |
| நைஜீரியா | 07 | 07 | 09 | 23 |
| மலேஷியா | 06 | 06 | 07 | 19 |
| சிங்கப்பூர் | 05 | 05 | 06 | 16 |
| கென்யா | 05 | 03 | 03 | 11 |
| நியூஸிலாந்து | 02 | 15 | 05 | 22 |

* இலங்கை ஒருவெள்ளிப் பதக்கத்தையும், ஒரு வெண்கலப் பதக்கத்தையும் பெற்று 21ஆவது இடத்தில் உள்ளது.

## 50ஆவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்



**Dr.B.ANANDKUMAR - JP**

நம் நிலப் பெருமை கண்டாய் - பின்
நாம் கண்ட துயர் கண்டாய்
நம் வாழ்வு சிறந்திட எண்ணி
நம் கண்ணீர் துடைத்திடத் துணிந்தாய்
கல்வி தந்தாய் கலைகள் தந்தாய்
நம் வயிறார உணவு தந்தாய்
நம் தமிழ் போற்றிக் காக்கும்
நற்பணி எமதேயாக
நல் உழைப்பைத் தந்தாய்
தந்தையாய் தாயாய் நின்றாய்

அகவை ஐம்பதில் கால்பதிக்கும் எம் தந்தையே!
உங்கள் ஐநூறு குழந்தைகள் நாம்
வாழ்த்துகின்றோம்! வணங்குகின்றோம்!
வாழிய வாழிய வென்று! என்றும்
வாழ்த்துவோம் எங்கள் வாழ்நாளெல்லாம்!

Gods Own Children Foundation,
140,Temple Road,
Jaffna.

குழந்தைகள், ஆசிரியர்கள்,
உத்தியோகத்தர்கள்,
நிர்வாக உத்தியோகத்தர்கள்.

## கருங்குளவிகள் கொட்டியதில் இருவர் காயம்

தென்மராட்சி, ஒக். 11

மழையுடன் வீழ்ந்த ஓலையை வெட்டிய இருவர் கருங்குளவிகளால் தாக்கப்பட்டனர்.

பளை அரசர் கேணியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த க.பேபி (வயது - 67), நடராசா சசிதரன் (வயது - 24) ஆகியோரே குளவிகளால் தாக்கப்பட்டவர் ஆவர்.

இவர்கள் இருவரும் பளைப் பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

(ஒ-207)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**ஜெ.நிலக்சன்**

(யா/புனித றோக்ஸ் றோ.க.வித்)

2010 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை யில் 164 புள்ளிகளைப் பெற்று பாடசாலை வரலாற்றில் முதல் தடவையாக சித்தியடைந்ததையிட்டு இவரை பாராட்டி வாழ்த்துகின்றோம். இச்சாதனைக்கு வித்திட்ட அதிபர், ஆசிரியர்கள், பெற்றோரையும் பாராட்டுகின்றோம்.

பாடசாலைச் சமூகம், நலன் விரும்பிகள்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



மட்டுவிலைச் சேர்ந்த

**செல்வி தவராசா வனிதா**

அவர்கள் 06.10.2010 அன்று யாழ்.பல்கலைக்கழகப் பொதுப் பட்டமளிப்பு விழாவில் திட்டமிடலில் சிறப்புப் பட்டம் பெற்றமையையிட்டு வாழ்த்துவதுடன் அவர் மேலும் பல பட்டங்கள் பெற்று பல்லாண்டு வாழ்கவென பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அப்பா-தவராசா
அம்மா-செந்தராணி
அக்கா-மேகலா
தம்பி-விமல்
தங்கை-சுமிதா

மட்டுவில் கிழக்கு,
சாவகச்சேரி.

(164443)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



06.10.2010 அன்று யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 26ஆவது பட்டமளிப்பு விழாவில் குடித்தொகையியல் அபிவிருத்தியில் முதுகலைமாணிப் பட்டம் பெற்ற சிறந்த குரல்வளமும் ஆளுமையும் கொண்ட எமது பிரதேச செயலக முகாமைத்துவ உதவியாளர்

**திருமதி கவிதா தவேஸ்வரன்**

அவர்கள் மேலும் பல பட்டங்களும் பதவிகளும் பெற்று வாழ்வில் சிறப்புற வாழ்த்துகிறோம்.

பிரதேச செயலகம்,
பருத்தித்துறை.

வாழ்த்துபவர்கள் :
கிருபா, சுரேன், சுபா, சுதா,
யோகேஸ், ராஜேஸ்.

(ஜ/571835)

## 50 ஆவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்



**Dr.B.ANANDKUMAR - JP**

அகவை ஐம்பதில் கால்பதிக்கும் தலைவரே உம்மை
உவகை பொங்க வாழ்த்துகின்றோம்
வளர்க உம்புகழ் பல்லாண்டு -நீங்கள்
வாழ்க என்றும் நூற்றாண்டு!

ஆழ்கடல் கடந்து கற்றுவந்தீர்
அமைதியிழந்த மண்ணை மதித்தீர்- கல்விப்
பெருமை தழைத்திருந்த நாம்! இங்கே
தளர்ந்திருந்த நிலை கண்டீர்! அதற்காய்
அயராது உழைத்து நின்றீர்!
தளராது நிற்கின்றீர்.


காலம் இனிப் பதில் கூறும்!
காலத்தால் அழியா உம்புகழ் இனி என்றும்
உங்கள் மூத்தார் தபால் அமைச்சர் C.சிற்றம்பலமும்
முதல் மேயர் பொன்னம்பலமும் கல்விக்காய் உழைத்த
கனகரட்ணமும் கனகரட்ண வித்தியாலய அதிபர் ஆ.சோமசுந்தரமும்
நிலையாய் வரலாற்றில் நிற்பது போல் நீங்களும் நிலைக்க
வாழ்த்துகிறோம்! வளர்க உம் புகழ் பல்லாண்டு!
நீங்கள் வாழ்க என்றும் நூற்றாண்டு.

BRITISH BUSINESS SCHOOL
140.Temple Road,
Jaffna.

BRITISH BUSINESS SCHOOL
மாணவர்கள், ஆசிரியர்கள்,
பெற்றோர்கள்,
உத்தியோகத்தர்கள்,
நிர்வாக உத்தியோகத்தர்கள்.

(ஏ/571834)

## 50 ஆவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்



**Dr.B.ANANDKUMAR - JP**

அகவை ஐம்பதில் கால்பதிக்கும் அன்புத் தந்தாய் உம்மை
வாழ்த்துகிறோம் நாங்கள் - நலமாய் வாழ்க.

உறவிழந்தோம் உயிரிழந்தோம்
உடைமைகள் யாவும் இழந்தோம்
வசதி இழந்தோம், வாழ்விழந்தோம்
கண்ணான கல்வி இழந்தோம்
கலங்கிநின்றோம் காக்கவந்தீர்
வேலி இல்லா பயிராய் நாங்கள்
வாடி நின்ற வேளையிலே
புலோலி சிறுவர் கிராமத்திலே
தேடி வந்து வாழ்வு தந்தீர்.

கல்வி என்ன கலைகள் என்ன
கலங்காத மனமும் தந்தீர்
தலை நிமிர்ந்து வாழ்ந்தோம் வாழ்வோம்- எங்கள்
தந்தையாய் தலைவனாய் நீங்கள் நின்றால்
என்றும் நாங்கள் வாழ நீங்கள் வேண்டும்
இன்று நீங்கள் வாழ இறைவனை வேண்டி
ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் என்ன
அதற்கு மேலும் நலமாய் வாழ
வாழ்த்துகின்றோம்
புலோலி சிறுவர்கள் நாங்கள்.

புலோலி சிறுவர் கிராமம்,
புலோலி தெற்கு, புலோலி,
பருத்தித்துறை.

குழந்தைகள்,
உத்தியோகத்தர்கள்,
நிர்வாக உத்தியோகத்தர்கள்.

## மேசன் வேலை ஆள்கள் தேவை

பருத்தித்துறை வீதி, கட்டப்பிராயில் அமைந்துள்ள LINGASH BUILDINGS CONSTRUCTIONS இற்கு மேசன் மற்றும் கூலி ஆள்கள் தேவை. மேசனுக்கு 900 ரூபாவும் கூலியாளுக்கு 800 ரூபாவும் சம்பளம் வழங்கப்படும்.
தொடர்பு: 077 9003158
077 9749345

## Calling for Tender - Teaching Hospital, Jaffna

The above advertisement appeared in Uthayan page 28 on 10.10.2010. It has been pointed out that the date depicting up to which the tender form may be collected is wrong. It must be read as '**Tender form may be collected from Director, Teaching Hospital, Jaffna up to 15.10.2010**' please.

## விற்பனைக்குண்டு

நவாலி தெற்கு, அந்திரான் ஒழுங்கை, மானிப்பாயில் சகல வசதிகளும் உடைய கல்வீடு விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:-021-7200810.

## வீடு விற்பனைக்கு

செல்வச்சந்நிதி, தொண்டைமானாறு பருத்தித்துறை பிரதான வீதிக்கு மிக அண்மையில் 3/4 பரப்புக் காணியில் 3 அறைகள் கொண்ட வீடும், கிணறும் மிக நியாய விலையில் விற்கப்படும்.
தொடர்பு: 0777 066084 (சந்திரன்)

## விற்பனைக்குண்டு

புலோலிதெற்கு,கொடிகாமம் வீதியில் அமைந்துள்ள 3½ பரப்பு காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குஉண்டு.தரகர் தேவையில்லை. தொடர்பு:-
0789405843, 0776132266
(மாலை 4மணிக்கு பின்பு)

# தினமும் 3 சிறுமிகள் மீது பாலியல் வல்லுறவு

நாளாந்தம் நாட்டில் சராசரியாக மூன்று சிறுமியர் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்படுகின்றனர் எனத் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைத் தலைவி அனோமா திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இவ் வருடம் ஜனவரி முதல் ஜூன் வரையான காலப்பகுதிக்குள் 480 சிறுமிகள் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டுள்ளனர் என்ற அதிர்ச்சித் தகவலைப் பொலிஸ் தலைமையகத்தின்புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. கடந்த வருடம் இது தொடர்பாக 925 முறைப்பாடுகள் பதிவாகியிருந்தமை குறிப்பிடத் தக்கது.

இன்று அனைத்து வகையிலும் பின்தங்கிய நிலையில் வாழ்பவர்கள் தோட்டப்புற மக்களே.

ஆனால், அப்பிரதேசங்களிலேயே அதிகளவு சிறுமிகள் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டுள்ளனர் எனப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த வருடம் சிறுமிகள் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்படுவது தொடர்பாக அநுராதபுரம், கேகாலை ஆகிய மாவட்டங்களில் மொத்தமாக 108 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றன. இம் மாவட்டங்களிலேயே அதிகளவு சிறுவர் துஷ்பிரயோகங்கள்கடந்தவருடம் இடம் பெற்றன.

## திருத்தி வாசிக்கவும்

நேற்று 10.10.2010 அன்று 30ஆம் பக்கத்தில் பிரசுரமான செல்வி பாக்கியதாசன் லோஜினி என்பவரது பாராட்டி வாழ்த்துகின்றோம் விளம்பரத்தில் வாழ்த்துவோர் வரிசையில் தந்தையின் பெயர் தவறுதலாக விடுபட்டுள்ளது. தந்தை பாக்கியதாசன் என்றும், அண்ணியின் பெயரை சோபிதா என்றும் திருத்தி வாசிக்கவும்.

## THE ROYAL COLLEGE OF JAFFNA

3 மாதங்களில் ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்கப்பயில By: ந.விக்னேஸ்வரன்
ஆச்சாரி 426(302),K.K.S.
வீதி,யாழ்ப்பாணம்,பிளாக்வீதி சங்கானை.
தொ.பே.இல-077-6751649

## தேவை

யாழ்.நகரை அண்டியதாக கணனி வகுப்பு நடத்துவதற்கு வீடு வாடகைக்குத் தேவை.
தொடர்பு: 0773446194




கொறணா
சுடு நீர் சவர்
ஒரு வருட உத்தரவாதம்
ரூ 5450/-
டயிட்டஸ் ஸ்டோர்ஸ்
கோட்டை 2439422 லிபர்ட் பிளாசா

## கடை விற்பனைக்கு

யாழ்.நகரில் கஸ்தூரியார் வீதியில் ராஜா தியேட்டருக்கும் கன்னாதிட்டிச் சந்திக்கும் இடையில் அமைந்துள்ள கடை விற்பனைக்குண்டு. தொடர்பு: 071 9134767

## வேலை ஆள் தேவை

யாழ். பெரியகடை வீதியில் அமைந்துள்ள ஆபிசா சில்வர் கடைக்கு புடைவை விற்பனையில் அனுபவம் வாய்ந்த பெண் பிள்ளைகள் தேவை. பழக விரும்புபவர்களும் விரும்பத்தக்கது. (அம்பிகாவதி அழகு மாடத்திற்கு முன்னால்)
தொடர்பு: 125, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.
0772250836, 0718813312

## தவறிவிட்டது

இல.119, உதயநகர் மேற்கு, கிளிநொச்சி என்றும் முகவரியுடைய அருணாசலம் தர்மராஜா என்பவரின் தேசிய அ.அ (641734136V) மற்றும் சாரதி அனுமதிப்பத்திரம், முகாம் அடைட்டை என்பன அடங்கிய சிறிய பேஸ் மாங்குளத்திலிருந்து கிளிநொச்சியை நோக்கி வந்து கொண்டிருக்கையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். பாலியல் கடைச்சல் தொழிலகம், தென்னிந்திய திருச்சபைக்கு அருகில், கிளிநொச்சி.
தொடர்பு:- 0775737937

## லொறி விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள இசுசூ எல்ப் 250 தொடர்இலக்கம்41சிறி ×××× லொறி உடன்விற்பனைக்குண்டு. முழு மரபொடி, 10 1/2 அடி நீளமானது, இரட்டைப் பற்றரி, 9/10, 10/10 சனி, ஞாயிறு காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை பார்வையிடலாம். இடம் - 325, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (அன்னசத்திரம் கோயில் முன்பாக)
தொ.பே- 0773459224

## வேலைக்கு ஆள் தேவை

பான்சி கடைக்கு அனுபவம் உள்ள பெண்பிள்ளை தேவை.
இராமசி பென்சி கவுஸ்,
கல்வியங்காடு. தொ.பே:0772487852

## ஓடுகள் விற்பனைக்குண்டு

பாவித்த நல்ல நிலையிலுள்ள 1000 ஓடுகள் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 29/5, றக்கா றோட், யாழ்ப்பாணம்
தொ.பே: 021 222 8020

## அலுவலகத்துக்கு வீடு தேவை

ஆங்கிலம் மற்றும் கணனி கற்கை நெறிகளை நடத்துவதற்கு யாழ்.நகரத்துக்கு அண்மித்த பிரதேசங்களில் சிறிய/பெரிய வீடு வாடகைக்கு உடனடி யாகத் தேவை.
(104410) 0777415161

## காணி விற்பனைக்குண்டு

கீரிமலை வீதியில் சீரணி சந்திக்கருகில் 9 ½ பரப்பும், 11 பரப்பு நெல்வயல் காணியும், வீடு கட்டக் கூடிய சுமார் 4 ½ பரப்பும் விற்பனைக்குள்ளது.
தொடர்பு- 0712 781 601

# BRIGHT INN

## A/C & Non A/C Rooms Available

- ★ அனைத்து வசதிகளுடன் கூடிய குளிரூட்டப்பட்ட, குளிரற்ற தனி அறை மற்றும் குடும்ப அறைகள் உண்டு.
- ★ அனைத்து தரமான சுவைமிகுந்த யாழ்ப்பாண (சைவ, அசைவ) உணவுவகை மேலைத்தேய சைனிஸ் உணவுகள், சூப், குளிர்பானங்கள் அனைத்தையும் ஒரே இடத்தில் உங்களின் தேவைக்கேற்றவாறு ஓடர் செய்து பெற்றுக்கொள்ளலாம்.
- ★ மதிய, இரவு உணவுகள் Takeaway முறையில் குடும்பமாய் உண்டு மகிழவும் வசதிகள் உண்டு.

No.51, Sivan Road, Thrunelveli, jaffna.
Tel/Fax: 021-2221889
Tel: 021-4922334



# முதலாம் ஆண்டு நினைவு தினம்



தோற்றம்:
20.04.1959

மறைவு:
22.09.2009

திருமதி
நவரத்தினராசா
லதாமலர்
(குமுதெனி, அல்வாய் வடமத்தி)

திதி: (11.10.2010) சதுர்த்தி

என்றென்றும் எம் மனதில்
நீங்காத நினைவுகளுடன்
மலர் முகமாய் வாழ்ந்து கொண்டிருக்கும்
எங்கள் குடும்பத்தின் குலவிளக்கே
உங்கள் நினைவுடனே
என்றென்றும் வாழ்ந்திடுவோமே

''குமுதெனி''
அல்வாய் வடமத்தி. (104078)

குடும்பத்தினர்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

பிறப்பு
19 * 04 * 1930



இறப்பு
11 * 09 * 2010

கோப்பாய் மத்தியைச் சேர்ந்த

**பொன்னையா சுந்தரலிங்கம் (சுந்தரய்யா)**

கடந்த 11.09.2010 சனிக்கிழமை இறைபதமெய்திய அமரர் பொன்னையா சுந்தரலிங்கம் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (11.10.2010) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: இவ்வழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

*வேம்படி, கோப்பாய் மத்தி, கோப்பாய்.* - குடும்பத்தினர்.

# கண்ணீர் அஞ்சலி



திருமதி
**பாலசுப்பிரமணியம் சிவபாக்கியம்**
56/04, பிரப்பங்குளம் வீதி, யாழ்ப்பாணம்.

கரைச்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் பொதுமுகாமையாளர் திரு. இ.கணேசபிள்ளை அவர்களின் தாயாரான திருமதி சிவபாக்கியம் பாலசுப்பிரமணியம் அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில் பங்குகொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், பணியாளர்கள்,
கரைச்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்.
A 135 - A9 வீதி, பரந்தன்.

# மரண அறிவித்தல்



லயன் சொர்ணலிங்கம் பாலகிருஷ்ணன்
(முன்னாள் பிரதி அதிபர், மானிப்பாய் இந்துக் கல்லூரி, முன்னாள் ஆசிரியர், கொக்குவில் இந்துக் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி)

நவாலியூர் அமரர் கலையரசு சொர்ணலிங்கம் தம்பதியரின் ஏக புத்திரன் லயன் பாலகிருஷ்ணன் அவர்கள் 10.10.2010 அதிகாலை காலமானார். இறுதிக் கிரியை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
அ.பாலகிருஷ்ணன்
மனைவி

லோட்டன் வீதி, மானிப்பாய்.
தொ.பே: 0779027835, 0774611224, 0773164619

# அறிவித்தல்



முன்னாள் கியூடெக் கரித்தாஸ் நிறுவனத்தின் கிளிநொச்சி/ முல்லைத்தீவு நிவாரண/ புனர்வாழ்வு இணைப்பாளரும் கிளிநொச்சி அரசசார்பற்ற நிறுவனங்களின் முன்னாள் தலைவரும், கரைச்சி வடக்கு/ கிளிநொச்சி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் பொது முகாமையாளரும் கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைவரும் ஆகிய இ.கணேசபிள்ளை அவர்களின் தாயார்

திருமதி **பாலசுப்பிரமணியம் சிவபாக்கியம்**

10.10.2010 அன்று இறைவனடி சேர்ந்தார். இறுதிக்கிரியைகள் 11.10.2010 மு.ப. 10 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறும்.

**இ.கணேசபிள்ளை** *(மகன்)*.

# காணிப் பிரச்சினை தீர்க்கப்படா விடின் கிழக்கில் இன மோதல்கள் வெடிக்கும்!

## நல்லிணக்க ஆணைக்குழு முன் முஸ்லிம் தரப்பு சாட்சியம்

கொழும்பு, ஒக். 11

கிழக்கில் காணிப் பிரச்சினைக்கு விரைவான தீர்வு காணப்படாது விட்டால் எதிர்காலத்தில் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களிடையே பாரிய இன வன்முறைகள் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகிவிடும் - என்று ஓட்டமாவடியில் நேற்று இடம்பெற்ற நல்லிணக்க ஆணைக்குழு அமர்வில் முஸ்லிம்கள் சாட்சியமளித்தனர்.

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ள படிப்பினைகள் மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழுவின் மட்டக்களப்பு மாவட்டத்திற்கான இரண்டாம் நாள் அமர்வு நேற்று ஓட்டமாவடி பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது. இந்த அமர்வில் சாட்சியமளிப்பதற்கு பெண்கள் உட்பட கணிசமான முஸ்லிம்களும் சில தமிழர்களும் சாட்சியமளித்தனர்.

குறிப்பாக இம்மாவட்டத்தில் காணி தொடர்பாக தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த முஸ்லிம்களின் மீள்குடியேற்றம் தொடர்பாக தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவே முஸ்லிம்கள் அமைப்பு ரீதியாகவும், தனிப்பட்ட ரீதியாகவும் தமது சாட்சியங்களில் தெரிவித்திருந்தனர்.

காணி, கல்வி மற்றும் உரிமைகள் அனைத்திலும் இனங்களிடையே சமவாய்ப்பு இருந்தால்தான் பிரச்சினைகளின்றி வாழ முடியும் என ஓட்டமாவடி ரகுமத் பள்ளிவாசல் நிர்வாக சபை செயலாளர் ஐ.எல்.டி சாகிபு சாட்சியமளித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 26 சதவீதம் முஸ்லிம்கள் வாழ்ந்தாலும் 22 சதுர கிலோ மீற்றர் நிலப்பரப்பிற்குள் அவர்கள் முடங்கிக் கிடக்கின்றனர் எனச் சுட்டிக்காட்டிய அவர், இம்மாவட்டத்தில் காணிப் பிரச்சினைக்கு விரைவான தீர்வு காணப்படாது விட்டால் எதிர்காலத்தில் தமிழ் மற்றும் முஸ்லிம்களிடையே பெரிய அளவில் இன வன்முறைகள் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகிவிடும் - என்று கூறினார்.

வாகரைப்ப பிரதேசத்திலுள்ள மதுரங்கேணி குளத்திலிருந்து 1985 மற்றும் 1990 ஆம் ஆண்டு இன வன்முறைகளின்போது வெளியேறிய முஸ்லிம்களின் மீள் குடியேற்றத்தின் அவசியத்தை வலியுறுத்திய விவசாயி எம்.பி.எம் முஸ்தபா, அங்கு ஏற்கனவே வாழ்ந்த முஸ்லிம்களின் குடியிருப்பு காணிகளில் தமிழர்கள் குடியிருப்புகளை அமைத்திருக்கின்றனர் எனவும், முஸ்லிம்களுக்குச் சொந்தமான காணிகளை தமிழர்கள் அபகரித்துள்ளனர் எனவும் தெரிவித்தார்.

இந்த அமர்வின்போதும் காணாமல் போனவர்கள் தொடர்பாக பலர் சாட்சியமளித்திருந்தார்கள்.

காணிப்பிரச்சினைகள் தொடர்பாக முஸ்லிம்கள் தமது சாட்சியங்களில் குறிப்பிட்டிருந்தாலும் தமிழர் தரப்பிலிருந்து சாட்சியமளிக்க எவரும் பங்கேற்கவில்லை.

இதனைத் தவிர காணாமல் போனவர்கள் தொடர்பாக நான்கு பேர் ஆணைக்குழுவிடம் இரகசியமான முறையில் சாட்சியமளித்தார்கள்.

### இந்தியாவிற்கு தங்கம் கடத்த முற்பட்ட பெண்கள் கைது

கொழும்பு, ஒக். 11

கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஊடாக இந்தியாவிற்குத் தங்கம் கடத்த முற்பட்ட இரண்டு பெண்களை சுங்க அதிகாரிகள் கைதுசெய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சுமார் இருபது இலட்சம் ரூபா பெறுமதியான தங்கத்தை இவ்வாறு கடத்த முயற்சித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த இரண்டு பெண்களும் சந்தேகத்திற்கு இடமான வகையில் செயற்பட்டனர் எனவும், சுங்கப் பிரிவினர் சோதனைகளை நடத்தியபோது தங்கம் கடத்தப்பட்டமை அம்பலமாகியது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

67 மற்றும் 48 வயதுடைய கொழும்பை வசிப்பிடமாகக் கொண்ட பெண்களே இவ்வாறு தங்கத்தை கடத்தியுள்ளனர்.

### சண்டேலீடர்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீட்டப்பட்டுள்ளதாக குறிப்பட்டுள்ளது.

வெள்ளைக்கொடியேந்திய வண்ணம் சரணடைய வந்த தமிழீழ விடுதலைப் புலிகளை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ சுட்டுக் கொல்ல உத்தரவிட்டார் என சரத் பொன்சேகா கூறியதாக ' சண்டே லீடர்' முன்னர் செய்தி வெளியிட்டிருந்தது. இது தொடர்பில் தற்போது கொழும்பு மேல் நீதிமன்றத்தில் சரத்பொன்சேகாவுக்கு எதிரான விசாரணை நடைபெற்று வருவது தெரிந்ததே.

ப்டெரிக்கா ஜான்ஸ் கடந்த வாரம் நீதிமன்றதில் சாட்சியம் அளித்தபோது -

சரத்பொன்சேகாவை தாம் பேட்டி கண்ட போது எடுத்துக்கொண்ட குறிப்புகள் கொண்ட குறிப்புப் புத்தக்தை இரகசியப் பொலிஸார் கேட்டதன் பேரில் தாம் வழங்கியதாகவும் -

அதனை அவர்கள் பழுதாக்கிய நிலையில் திருப்பிக் கையளித்தனர். நான் குறிப்புப் புத்தகத்தை முழுயையாகவே அவர்களிடம் கொடுத்தேன்-

நான் பேட்டிகளை நடத்தும் போது ஒலிநாடாவையே பயன்படுத்துவது உண்டு. ஆனால் இம்முறை குறிப்புப் புத்தகத்தை பயன்படுத்தினேன் - என்று உறுதி அளித்தார். (அ)


A/L - 2011, 2010 விவசாய விஞ்ஞானம்
Paper Class
ஆரம்பம் : 16.10.2010
Sat : 8.00 am - 3.00 pm.
Sun : 8.00 am - 3.00 pm.
DMI - JAFFNA
ஆசிரியர் : வை. சசிகுமார்



காணி விற்பனைக்கு
உடுவில் வீதி, மானிப்பாயில் 2½ பரப்புக் காணி உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு : 0772831923


### பொன்சேகாவுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்னிப்புக்கோரி ஜனாதிபதி யிடம் மண்டியிட மாட்டர்கள். ஆனால், பயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டுவந்த பொன்சேகாவுக்குத் தண்டனை வழங்கிய ஜனாதிபதிதான் இந்நாட்டு மக்களிடம் மன்னிப்புக்கோர வேண்டும்.

ஜே.வி.பியால்தான் பொன்சேகாவுக்கு இந்த நிலைமை என்று அரசு கூறுகின்றது. ஆனால், தண்டனை வழங்கப்பட்டிருப்பது வேறு குற்றத்திற்காக. அப்படியென்றால் எதற்காக அவருக்குத் தண்டனை வழங்கப்பட்டது என்று அரசு தெளிவாகக் கூறவேண்டும் - என்றார். (ஒ-சி)

### கட்சி தாவிய.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரச்சினைகள் தொடர் பாக கூட்டமைப்பினரிடம் தெளிவுபடுத்தியுள்ளனர்.

அத்துடன், அம்பாறை மாவட்டத்தில் அக்கரைப்பற்று மற்றும் கல்முனை ஆகிய பிரதேசங்களில் கட்சியின் காரியாலயங்களைத் திறக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது எனக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதன்போது கூறியுள்ளனர்.

இதேவேளை, அம்பாறை மாவட்ட விஜயத்தின்போது மக்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்ள், அடிப்படைப் பிரச்சினைகள் மற்றும் சில குறைபாடுகள் என்பவற்றை இன்றைய தினம் இடம் பெறவுள்ள அம்பாறை மாவட்ட அரச அதிபர் சுனில் கன்னங்கராவுடனான சந்திப்பின்போது முன்வைக்கப்படும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தெரிவித்துள்ளனர் .(அ-சி)

### இந்திய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறப்புப் பயிற்சிகள் நேற்றுக்காலை ஆரம்பமாகின.

அதேவேளை, இலங்கைக் கடற்படையின் திருகோணமலை கடல்சார் பயிற்சி அக்கடமியில் பயிற்சி பெற்று வரும் 128 அதிகாரிகளுக்கு இந்தியக் கடற்படைக் கப்பல்களில் கடற்பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

இந்தியக் கடற்படையின் பயிற்சி நிலை அதிகாரிகளுக்கு நேற்று திருகோணமலை கடல்சார் பயிற்சி அக்கடமியில் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

திருகோணமலைத் துறைமுகத்தில் இலங்கைக் கடற்படைப் பயற்சி அதி காரிகளுக்குப் பயிற்சிகளை வழங்க ஆரம்பித்துள்ள இந்தியக் கடற்படைக் கப்பல்கள் மூன்றும் நேற்று கொழும்புத் துறைமுகம் நோக்கிப் புறப்பட்டன.

நாளை 12 ஆம் திகதி இந்தக் கப்பல்கள் கொழும்புத் துறைமுகத்தை வந்தடையும்.

திருகோணமலையில் இருந்து கொழும்பு நோக்கிய பயணத்தின் போது இலங்கை கடற்படை அதிகாரிகளுக்கு இந்தியக் கடற்படைக் கப்பல்களில் நடைமுறை கடல் பயிற்சிகள் வழங்கப்படும்.

எதிர்வரும் 15 ஆம் திகதி வரை இந்திய - இலங்கைக் கடற்படைகளின் கூட்டுப் பயிற்சிகள் தொடர்ந்து இடம்பெறும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (உ)


ஜேர்மன், சுவிஸ் செல்ல எதிர்பார்த்திருப்போருக்கு ஓர் இனிய நற்செய்தி
ஜேர்மன் மொழி (Deutsch) நன்கு பயிற்றப்பட்ட ஆசிரியர் திரு.இ.மயூரகன் அவர்களால் யாழ்ப்பாணத்தில் இப்பொழுது பரீட்சைக்கு ஏற்ற வகையில் இலகுவான முறையில் கற்பிக்கப்படும்.
மேலதிக தொடர்புகளுக்கு :- 0774706386


### ஈழ அகதிகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முகாம்களுக்கு வெளியே தங்கியிருக்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனவரி மாதம் முதல் செப்ரெம்பர் மாதம் வரையில் சுய விருப்பின் அடிப்படையில் 1280 இலங்கைத் தமிழ் அகதிகள் இந்தியாவிலிருந்து நாடு திரும்பியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் இலங்கைக்குத் திரும்பும் அகதிகளின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது என்று ஐக்கிய நாடுகளுக்கான அகதிகள் முகவர் நிறுவனம் தெரிவித்துள்ளது.

எவ்வாறெனினும், நீண்ட காலமாக வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் இலங்கை அகதிகள் மீளவும் நாடு திரும்புவதற்கு விருப்பம் காட்டுவார்களா என்பது சந்தேகத்திற்கிடமானது என்றும் ஜெனீப்பர் பெகோனிஸ் தெரிவித்துள்ளார்.

நீண்ட காலமாக வெளிநாடுகளில் வாழ்ந்து தமது வாழ்க்கை முறைமையை பழக்கப்படுத்திக் கொண்டவர்கள் மீளவும் இலங்கை திரும்புவார்களா என உறுதிபடக் கூற முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான முகவர் நிறுவன புள்ளி விவரங்களின் அடிப்படையில் 64 நாடுகளில் மொத்தமாக ஒரு இலட்சத்து 46 ஆயிரத்து 98 இலங்கையர்கள், அகதிகளாகத் தங்களைப் பதிவு செய்து கொண்டுள்ளனர் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஒ-சி)

### பொன்சேகாவின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரத்துச் செய்யும் நடவடிக்கை எதையும் மேற்கொள்ள வேண்டாம் எனக் கோரி எமது சட்டத்தரணிகள், நாடாளுமன்றச் செயலாளர் நாயகத்திற்குக் கடிதம் ஒன்றை அனுப்பினர்.

சரத் பொன்சேகாவின் எம்.பி.பதவி ரத்துச்செய்யப்படுவதை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. இந்த எம்.பி. பதவியைப் பாதுகாக்க நாம் நடவடிக்கை எடுத்து வருகிறோம். அவரது வெற்றிடத்துக்கு வேறொருவரை நியமிக்க வேண்டாம் என நாம் கூறுகிறோம்.

சரத் பொன்சேகாவின் எம்.பி. பதவியைப் பாதுகாக்க போல் ரட்நாயக்க சட்டத்தரணிகள் சங்கம் நாளை(இன்று) மேன்முறையீட்டு நீதிமன்றில் ரிட்மனுவொன்றையும் உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமைமீறல் மனுவொன்றையும் தாக்கல் செய்யவுள்ளது.

அதேபோல் நாம் ஆரம்பித்து வைத்துள்ள நாடளாவிய ரீதியிலான கையெழுத்து வேட்டை இன்னும் இடம்பெறுக் கொண்டிருக்கின்றது. இதுவரை 10 இலட்சம் கையெழுத்துகளைத் தாண்டி விட்டோம். மஹிந்த ராஜபக்ஷவுக்கு வாக்களித்த மக்கள் கூட பொன்சேகாவுக்கு ஆதரவாகக் கையெழுத்திட்டு வருகின்றனர்.

மஹிந்த ராஜபக்ஷ மக்கள் கருத்தையும் சுவரொட்டிகளையும் கண்டு பயப்படுகின்றார். இந்த மக்கள் கருத்தைக் கட்டியெழுப்பியே நாம் இந்த அரசைக் கவிழ்ப்போம். எந்தத் தடை வந்தாலும் ஜனநாயக விரோதத்துக்கு எதிரான எமது போராட்டம் தொடரும் -என்றார். (ஒ-சி)


வெளிவந்துவிட்டது
வடக்கு மாகாண சபையின் பொதுச் சேவைகளுக்குப் பட்டதாரிகளை ஆள்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை வழிகாட்டி.
பொது அறிவு / நுண்ணறிவு — 360 பக்கம்
விரிவான விளக்கங்கள்.
300 ரூபா
P.கமலதாசன்
பூபாலசிங்கம் புத்தகசாலை, அன்னை புத்தகசாலை, துர்க்கா, பிள்ளையார் - கிளிநொச்சி



Quick Learning Course
Spoken English with Grammar
Duration 1 Month Rs.2000.00
உரையாடட் பயிற்சிகள், பேச்சுப் பயிற்சிகள், உச்சரிப்புப் பயிற்சிகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைய Audio & Video visuals மூலமாக நடாத்தப்படுகிறது
A/L பரீட்சை எழுதிய மாணவர்கள் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும்
திங்கள் முதல் வெள்ளிவரை வகுப்புகள் நடைபெறும் & Full time special
25-10-2010
Batch-3 09.00am-10.30am & 11.00am - 12.30pm
Batch-4 02.00pm-03.30pm & 04.00pm-05.30pm
BRITISH COLLEGE OF HIGHER STUDIES
No.15 2/1, Sirambiyadi Lane, Off Stanley Road, Jaffna. ஆரியகுளத்துச் சந்திக்கருகில் கொசி Hotel மேல்
Tel :021 2224550 HotLines: 0777222422/ 0777585913/0714299935
BCHS



O/L / A/L தடையல்ல
நீங்களும் கணனி பட்டதாரியாகலாம்
இலங்கை பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் உடையது
A/L 2010 மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்
மாணவர்களை பல்திறன் வாய்ந்தவர்களாக உருவாக்கும் வகையில் BIT,FIT மாணவர்களுக்கு
* ICDL - International Computer Driving License
* MCP - Microsoft Certified Professional
* MCTS - Microsoft Technology Specialist
* DIE - Diploma in English
* DIM - Diploma in Multimedia, * DTP(Printing)
* DHT - Diploma in Hardware Technology
* BCS UK - The Chartered instiute For IT
100% Free
SMS your name & course to 772 395 895 & Get Schol.
BIT பட்டமளிப்பு வைபவத்தின் போது சிறப்பு விருது பெற்ற நிறுவனம்
விண்ணப்பபடிவங்களிற்கும் பதிவுகளுக்கும் 14-10-2010 முன் நேரில்
324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
MCS Supported By UNDP/JRRP


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11.10.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.